# குர்ஆனின் குரல்

ذو الحجة - ١٤٤٥

ஹஜ் பெருநாள் சிறப்பிதழ்

ஜூன் - 2024

₹25/-



ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!

999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



**K.A.S. ZAINULABDIN & Co.**
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# ஹஜ்ஜும் உம்ராவும்

الْحَجُّ أَشْهُرٌ مَّعْلُومَٰتٌ ۚ فَمَن فَرَضَ فِيهِنَّ الْحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوقَ
وَلَا جِدَالَ فِي الْحَجِّ ۗ وَمَا تَفْعَلُوا مِنْ خَيْرٍ يَعْلَمْهُ اللَّهُ ۗ وَتَزَوَّدُوا فَإِنَّ خَيْرَ
الزَّادِ التَّقْوَىٰ ۚ وَاتَّقُونِ يَا أُولِي الْأَلْبَابِ ۝

"ஹஜ்ஜு(க்குரிய காலம்) குறிப்பிடப்பட்ட மாதங்களாகும்; எனவே, எவரேனும் அவற்றில் (தூய்மையான ஆடை அணிந்து) ஹஜ்ஜை (த் தம்பீது) கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜி(ன் காலத்தில் சண்டை, கெட்ட வார்த்தைகள் பேசுதல், வீண் சச்சரவுகள் ஆகியவை கூடாது; மேலும், நன்மையிலிருந்து நீங்கள் எதனைச் செய்தாலும், அல்லாஹ் அதனை அறிந்திருக்கிறான்; மேலும், ஹஜ்ஜுக்குத் தேவையான பொருட்களைச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்; நிச்சயமாக இவ்வாறு சித்தப்படுத்தி வைப்பவற்றுள் மிகவும் சிறந்தது பயபக்தியே ஆகும்; எனவே நல்லறிவுடையோரே! என்னையே பயந்து நடந்து கொள்ளுங்கள்."

— அல்குர்ஆன் (2 : 197)

ஹஜ்ஜின் மாதங்கள் ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ்ஜின் பத்து நாட்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹஜ்ஜும், நான்கு உம்ராக்களும் செய்துள்ளார்கள். அந்த நான்கு உம்ராக் களையுமே துல்கஃதா மாதத்தில் தான் செய்துள்ளார்கள்.

வணக்க வழிபாடுகள் மூன்று வகை! ஒன்று : உடல் உழைப்பைச் சார்ந்தது. தொழுகை, நோன்பு போல. இரண்டவது : பணம், காசுகளைச் சார்ந்தது. தர்மம், ஏழை நிதி, ஜகாத்தை போல. மூன்றாவது : உடல் உழைப்பும், பொருள் செலவும் சேர்ந்தது. அதுவே ஹஜ்ஜின் வணக்கமாகும்.

உலகை சுற்றிப் பார்ப்பதற்காக, ஊராரையும், சொந்தங்களை யும் சந்திப்பதற்காக, கல்வி கற்பதற்காக, வியாபார நிமித்தமாக செய்யப்படுகிற பிரயாணங்கள் அனைத்திலும் உலக ஆதாயம் உண்டு. ஆனால் ஹஜ்ஜின் பிரயாணத்தில் உலக ஆதாய மில்லை. மாறாக செலவுகளும் செய்து பல்வேறு அசௌகரியங் களையும் அல்லாஹ்வின் நெருக்கத்திற்காக ஹாஜி பொறுத்துக் கொள்கிறார். பல அந்தஸ்துகளை பெற்றுக் கொள்கிறார். ஹஜ்ஜு குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

கூறிய பொன்மொழிகளும், வாக்குறுதிகளும் : ஹஜ்ஜிற்காக செலவு செய்ததை அல்லாஹ் பன்மடங்காக திரும்பத் தந்திடுவான்; ஹஜ்ஜு செய்யுங்கள், செல்வந்தராகுங்கள்; ஹஜ்ஜு செய்து ஆரோக்கியம் பெறுங்கள்; ஹஜ்ஜு செய்து யாரும் ஏழை ஆனதில்லை; வசதி வாய்ப்பை பெற்றும் ஹஜ்ஜு செய்யாமல் இறப்பவர் யூதராக, கிறிஸ்தவராக மரணிப்பதற்கு சமமே; வாய்ப்பு கிடைத்தும் ஐந்து வருடங்கள் பிற்படுத்தியவருக்கு ஹஜ்ஜு செய்யும் வாய்ப்பு கிடைக்காது; வாலிபத்தில் ஹஜ்ஜு செய்பவருக்கு அர்ஷின் நிழல் கிடைக்கும்; பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டு அன்று பிறந்த பாலகர் போன்று திரும்புவார்; ஹஜ்ஜிற்காக அல்லது உம்ராவிற்காக இஹ்ராம் கட்டிவிட்டால், நிய்யத்து வைத்து விட்டால் சண்டையிடுவதோ, அசிங்கமான வார்த்தைகள் கொண்டு இச்சையுடன் பேசுவதோ பாவங்கள் புரிவதோ, மிகப் பெரும் குற்றமாகும். விட்டுக் கொடுத்தவர் என்றும் கெட்டுப் போவதில்லை.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலி பாஜில் பாகவி**


CityAds BOOKS **www.cityadsbooks.com**

# இஸ்லாமிய புத்தகங்கள் விற்பனை

- தினமும் இஸ்லாமிய புத்தகங்களின் தகவல்களை Whatsapp-ல் நாங்கள் அனுப்புகிறோம். உங்கள் Whatsapp No-ல் இருந்து Send Islamic Book Details என்று அனுப்பி நீங்களும் இணைந்து பயன் பெறுங்கள்.
- நல்ல நல்ல புத்தகங்களை உங்கள் உறவினர்களுக்கும்- நண்பர்களுக்கும் திருமண மற்றும் பெருநாள் பரிசாக அனுப்புங்கள். பணத்தை GPay மூலம் செலுத்தி விட்டால் பரிசு புத்தகங்களை தபால்-கூரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.
- புத்தகப்பட்டியலை Whatsapp & Telegram மூலம் நீங்கள் பெற்று கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களை நீங்களே தேர்வு செய்யலாம்.
- குர்ஆனின் குரல் மாத இதழை சந்தாவில் பெறவும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்யவும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை தமிழ், ஆங்கிலம் & பிற மொழி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்ய உங்கள் விளம்பர மேட்டரை 98410 16016 நம்பருக்கு Whatsapp செய்தால் விளம்பர புரூப், ஸ்கீம் & கட்டண விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

CityAds For More Details Call/Whatsapp: **98410 16016**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

குர்ஆனின் குரல்

குரல் : 67 துல்ஹஜ் 1445 ☆ எதிரொலி – 6 ஜூன் – 2024

# இந்தியாவின் பிரதமராக மோடியே தொடர வேண்டும் என திட்டமிட்ட சீனா!

இந்த இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும்போது இந்தியாவின் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகி இருக்கும். இறுதியில் சத்தியமே வெல்லும்! அசத்தியம் அழிந்தே தீரும்!!

நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல் பிரச்சாரத்தில் மோடியால் தனது பத்தாண்டு கால ஆட்சியில் நடந்த சாதனைகள் எதையும் சொல்ல முடியவில்லை.

மக்களுக்கு ஏதாவது நல்லது செய்தால்தானே தன் சாதனைகள் என்று எதையாவது சொல்ல முடியும்?

அதனால், அவர் எங்கு சென்று பிரச்சாரம் செய்தாலும் முஸ்லிம்கள், முஸ்லிம் லீக், பாகிஸ்தான் என்றே பேசி வந்தார்.

என் உயிரே போனாலும் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு கொடுக்க விடமாட்டேன் என்றார். காங்கிரஸ் தேர்தல் அறிக்கை முஸ்லிம் லீக்கின் தேர்தல் அறிக்கை என்றார். பாகிஸ்தான் என்னை ஒழிக்கத் திட்டமிடுகிறது என்றார். ஆனால், இந்திய மக்கள் மோடியின் பேச்சை எதையும் நம்பத் தயாராக இல்லை.

மோடி பொய்க்கு மேல் பொய்யை சொல்லி வருகிறார் என்பதை மக்கள் நன்கு உணர்ந்தே இருந்தனர்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் உங்களிடம் உள்ள தங்கத்தையும், உங்கள் பணத்தையும், உங்கள் நிலத்தையும் பறித்து முஸ்லிம்களுக்கு கொடுத்து விடுவார்கள் என்று மோடி உளறியே வந்தார்.

2001 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தில் கோத்ரா இரயில் சம்பவத்தைக் காரணம் காட்டி வகுப்புக் கலவரத்தை குஜராத் பாரதீய ஜனதா அரசாங்கமே நடத்தியது என்பதும், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பதும், ஆயிரத்திற்கும் மேலான முஸ்லிம் கிராமங்களை இல்லாமல் ஆக்கினர் என்பதும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட

பள்ளிவாசல்கள், மதரஸாக்கள், தர்ஹாக்கள் அழிக்கப்பட்டன என்பதும் உலகறிந்த உண்மையாகும்.

குஜராத் முதலமைச்சராக இருந்த மோடியிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வி இது

"கலவரத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டது குறித்து உங்களின் கருத்து?"

மோடியின் பதில் : "ஓடுகின்ற காரின் குறுக்கே நாய் ஒன்று குறுக்கே வந்து விட்டால் என்ன செய்வது?"

இது உலகப் பத்திரிகைகளில் எல்லாம் வந்தது.

உத்தரகாண்டு மாநிலம் ஹரித்துவார் நகரில் நடந்த சங்கிகள் மாநாட்டில் இந்தியாவிலுள்ள 25 கோடி முஸ்லிம்களையும் வெளியேற்றி இந்தியாவை இந்துத்துவ நாடாக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தைக் கண்டித்து பிரதமர் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இதைப் போன்றே, மணிப்பூரில் கிறிஸ்தவ மக்கள் கொல்லப்பட்ட போதும் பிரதமர் வாயே திறக்கவில்லை.

இந்நிலையில்,

பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்த பத்தாண்டுகளில் இந்தியா - சீனா எல்லையில் பல கிலோ மீட்டர் அளவிற்கு இந்திய இடங்களை சீனா கையகப்படுத்தியுள்ளது. ஆனால், மோடி அரசு அதை தடுக்கவில்லை.

இதனால் உற்சாகமடைந்த சீனா, இந்திய எல்லையிலுள்ள இடங்களை தொடர்ந்து கையகப்படுத்தி வருகிறது. கையகப்படுத்திய இடங்களில் வீடுகளை கட்டி வருகிறது. அப்பகுதிகளில் இந்தியாவின் பெயர்களை மாற்றி சீனா பெயர்களை சூட்டி வருகிறது. அது மட்டுமின்றி எட்டு வழிச்சாலைகளை உருவாக்கி வருகிறது.

நடைபெறும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் மூலம் மோடி அல்லாத யாரும் இந்தியாவின் பிரதமராக பதவியேற்றால் தாம் நினைத்தபடி தன் நாட்டின் எல்லையை இந்திய பகுதியில் விரிவுபடுத்த முடியாது என சீனா எண்ணுகிறது.

கத்தியின்றி, இரத்தமின்றி, இந்திய எல்லையில் சீனாவை விரிவுபடுத்த வேண்டும் என்றால் மோடியே இந்தியாவின் பிரதமராக தொடர வேண்டும் என்று சீனா திட்டமிட்டு வருகிறது.

ஏக இறைவன், மோடியிடமிருந்தும், சீனாவிடமிருந்தும் நம் இந்தியத் திருநாட்டை காப்பாற்றுவானாக!

துல்ஹஜ் பிறை 9 பஜ்ர் முதல் பிறை 12 அஸர் வரை தக்பீர் சொல்ல வேண்டும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பெண்கள் மீது அப்படி தக்பீர் சொல்வது கட்டாயமாகுமா?

**இராமநாதபுரத்திலிருந்து**
**முஹம்மது ஹசன்**

ஆண்களைப் போன்று பெண்கள் மீதும் அந்த நாட்களுடைய ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்குப்பின்பும் தக்பீர் சொல்வது வாஜிபாகும். அந்த நேரங்களுடைய ஏதாவது ஒரு தொழுகை தவறி விட்டால் அந்த தொழுகையை களா செய்யும் போதும் அந்த விடுபட்ட தக்பீரையும் சொல்வது வாஜிபாகும்.

செலவு அதிகமாகும் என்ற காரணத்தால் பலர், ஹஜ் செய்வதை விடுத்து, உம்ராவிற்கு சென்று விடுகிறார்கள். இதனால், ஃபர்ளான காரியம் விடுபட்டு போகிறது. ஷரீஅத் ரீதியாக இந்த செயல்பாடு ஏற்றுக்கொள்ள தகுந்ததுதானா?

**மண்டக்களத்தூரிலிருந்து**
**மஜீத் பாய்**

ஹஜ் கடமையாகுமளவு வசதி வாய்ப்பைப் பெற்றவர்கள் கண்டிப்பாக, முதலில் ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும். பிறகு வசதிகள் இருந்தால் உம்ரா பயணமும் மேற்கொள்ளலாம். ஹஜ் கடமையில்லாதவர்கள் உம்ரா பயணம் மேற்கொள்ளுமளவு பணத்தைச் சேர்த்துக் கொண்டு உம்ராவிற்குச் செல்வது குற்றமல்ல.

குர்பானி யார் மீது கடமை? கணவன் மனைவிக்காகவும், தகப்பன் தன் பிள்ளைக்காகவும் குர்பானி கொடுப்பது கடமையாகுமா? குர்பானி கொடுப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன?

**சென்னையிலிருந்து**
**அப்துர் ரஹ்மான்**

கடன் மற்றும் தன் சொந்த உபயோகத்திற்கு அப்பாற்பட்ட நகை அல்லது பணம் ஒரு மனிதனின் கையில் ஜகாத் கடமையாகுமளவிற்கு குர்பானி தினத்தன்று இருக்குமானால் அவன் மீது குர்பானி கொடுப்பது கடமையாகும். அந்த நபர் வயதுக்கு வந்தவராக

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலபாதீ

இருப்பதும், பயணத்தில் இல்லாமல் இருப்பதும் அவசிய மாகும். யாருடைய பெயரில் பணம், பொருள் இருக்கிறதோ அவரின் மீதுதான் குர்பானி கடமையாகும். ஒருவருக்காக இன்னொருவர் குர்பானி கொடுக்கத் தேவையில்லை. எனவே, பிள்ளைகள் மீது குர்பானி கடமையாகியிருந்தால் அவர்கள் தங்களின் பணத்தி லிருந்தே குர்பானி பிராணியை வாங்கி குர்பானி கொடுக்க வேண்டும்.

எனவே, வசதியற்றவர் மீதோ பயணத்தில் இருப்பவர் மீதோ குர்பானி கடமையாகாது. ஒரு தந்தை வசதியுள்ள, வயதுக்கு வராத தன் பிள்ளைகளுக்காக குர்பானி கொடுப்பது அவசிய மில்லை. அவசியமில்லாதவர் களுக்காக அல்லது இறந்து விட்டவர்களுக்காக நன்மையை கருதி, நஃபிலான இபாதத்களின் அடிப்படையில் குர்பானி கொடுப்பதால் எந்த தவறு மில்லை. நிச்சயம் அதற்குரிய முழு நன்மையையும் அடைந்தே தீருவார். "குர்பானி பிராணி அறுக்கப்படுகின்றபோது அதன் ஒரு சொட்டு இரத்தம் தரையில்விழுவதற்கு முன்னால் அந்த மனிதனின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படு கின்றன" என்று ஒருஹதீஸிலும், "அந்த பிராணியின் ஒவ்வொரு முடிக்கு பகரமாகவும் அவனுக்கு ஒரு நன்மையுண்டு" என்று ஒரு ஹதீஸிலும் ஏராளமான நன்மை கள் சொல்லப்பட்டுள்ளன.

எனவே, குர்பானி கடமையான வர்கள் குர்பானியை நிறை வேற்றும்போது அவர்களுக்கு அந்தகடமை நீங்கிவிடுவதுடன் அதன் அபரிமிதமான மேற் கூறப்பட்ட நன்மைகள் அனைத் தும்பலமடங்குகளாக அவனுக்கு சேர்த்துவைக்கப்படும். குர்பானி கடமையாகாதவர்களுக்கு அதே போன்ற நன்மைகள் நிச்சயம் கிடைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பெரும்பாலான மார்க்க அறிஞர்கள் "சிவப்பு நிறம் ஷைத்தானுடையது" என்று கூறுகிறார்கள்! அப்படியானால், பள்ளிவாசல்களில் விரிக்கப் படக்கூடிய இமாமுடைய முஸல் லாவும், தொழுகையாளி களுக்காக விரிக்கப்படக்கூடிய கார்பெட்டுகளும் சிவப்பு நிறங்களில் காணப்படுகிறதே. அது சரிதானா?

**மும்பையிலிருந்து மஜீதுத்தீன்**

ஷரீஅத் ரீதியாக ஆண்கள் சிவப்பு ஆடையை அணிவது தடுக்கப்பட்டுள்ளது. இது தவிர, பெண்கள் சிவப்பு நிற ஆடைகளை அணிவதும், சிவப்பு நிறமுள்ள விரிப்புகள் மற்றும் பெட்ஷீட்டுகளை பயன்படுத்துவதும் மார்க்க ரீதியாக தடுக்கப்படவில்லை.

சகோதர சமுதாயத்தைச் சார்ந்த ஒரு நண்பர், என்னை எப்பொழுது கண்டாலும் கை கூப்பி வணங்குகிறார். பதிலுக்கு நாமும் கையெடுத்து கும்பிட வேண்டுமா?

**திண்டுக்கலிலிருந்து**
**ஆரிஃப் கான்**

கூடாது. மாறாக, சைகினை யாக அவருக்கு ஏதாவது ஒரு வகையில் பதிலளித்து விட்டால் அதுவே போதுமானது

உயிருடன் அறுத்த மாட்டிறைச்சியை இறந்து போன மாட்டிறைச்சியுடன் கலந்து வியாபாரம் செய்தால் அது ஆகுமானதுதானா?

**பூணாவிலிருந்து**
**என்.மஜீத்பாய்**

அந்த வியாபாரமும், அதன் மூலம் வந்த வருமானங்களும், அந்த வருமானத்தின் மூலம் அவர் சாப்பிட்ட உணவு வகைகளும், அதன் மூலம் அவர் செய்த அமல்களும், தான – தருமங்களும் நிச்சயம் எல்லா வகையிலும் ஹராமாகும். ஹராமான உணவுகளை உட்கொண்டவனுடைய துஆகள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படாது என் பது ஷரீஅத் ரீதியான பொதுசட்டமாகும். அந்த ஹராம் என்பது எந்த வகையில் வந்ததாக இருந்தாலும் சரியே. இந்த விஷயத்தில் அந்த வியாபாரியின் மீது இரண்டு குற்றங்கள்: 1. ஹராமான வகையில் அறுக்கப்பட்ட பிராணி. 2. நல்ல இறைச்சி என்று நம்பி வந்த மக்களை ஏமாற்றிய குற்றம். இந்த இரண்டுக்கும் அவர் மன்னிப்பை பெறாதவரை அவர் அல்லாஹ்வுடைய பொருத்தத்தை பெற முடியாது. கொஞ்சமாக சம்பாதித்தாலும் அல்லாஹ்வின் பொருத்தத்திற்குரியதாக இருந்தால் மட்டுமே அல்லாஹ் அந்த வியாபாரத்திலும், அந்த குடும்பத்திலும் பரக்கத் செய்வான். உள்ளங்களில் நிம்மதியை தருவான்.

பெண்கள் ஜமாஅத்தாக தராவீஹ் தொழுகை நடத்தலாமா? பெண்கள் ஜமாஅத் தொழுகைக்கு ஒரு ஆலிம் இமாமத் செய்யலாமா?

**ஆர்.எஸ்.மங்கலத்திலிருந்து**
**ஃபாத்திமா நூர்**

பெண்கள் தத்தம் வீடுகளில் ஜமாஅத் இன்றி தனித் தனியாக தொழுது கொள்வதே மிக மிக சிறப்பானதும், நன்மைக் குரிய செயலுமாகும். ஜமாஅத் நடத்துவதற்காக பெண்கள் ஒன்று சேருவது அவசியமில்லை யென்றே மார்க்கம் கூறுகிறது. ஏனெனில், பெண்களை அப்படி ஒன்று கூட்டும்போது அதில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் மார்க்கம் அதை தடுக்கிறது. குழப்பங்கள் ஏற்படாத வகையில் மிகுந்த கவனத்துடன் தூர - தொலைவுகள் இல்லாமல் அக்கம் பக்கத்து பெண்கள்

மட்டும் ஒன்று சேர்ந்து ஒரு ஆலிமை வைத்து தொழுகை நடத்தினாலும் அந்த தொழுகை கூடி விடும்.

☛ சூரிய உதயம், நடு உச்சி, அஸ்தம் ஆகிய இந்நேரங்கள் நமக்கு தொழக்கூடாத நேரங்கள். இரு ஹரமின் மஸ்ஜிதுகளிலும் இதே சட்டம்தானா?

**விழுப்புரத்திலிருந்து**
**முஹம்மது இம்ரான்**

✍ ஆம். ஹனஃபீ மத்ஹபின்படி அங்கும் இதே சட்டம்தான்.

☛ எங்கள் ஊர் பள்ளிவாசல் 1922-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு தொழுகை நடந்துவருகிறது. ஆனால், அப்பள்ளி வக்ஃபு செய்யப்பட வில்லை. அப்பள்ளியில் தொழு தால் தொழுகை கூடுமா?

**கோவையிலிருந்து**
**சையது அப்துல்லாஹ்**

✍ தொழுகை கூடும்.

☛ குர்பானி பிராணியை அறுக்கும்போது கிப்லாவின் பக்கமாகத் தான் முன்னோக்கி வைக்க வேண்டுமா?

**மண்டகளத்தூரிலிருந்து**
**சிவிண்டர் யூஸுஃப்**

✍ ஆம். அப்படி வைப்பதுதான் சுன்னத்தான முறையாகும். இட நெருக்கடி போன்ற காரணங்களுக்காக திசை மாற்றி வைத்துக் கொண்டாலும் குர்பானி நிறைவேறிவிடும்.

☛ வெள்ளிக்கிழமையன்று மட்டும் நோன்பு வைக்கலாமா?

**திருநெல்வேலியிலிருந்து**
**பத்ருத்தீன்**

✍ கூடாது. ஹதீஸ்களில் அந்த ஒருநாள் மட்டும் தனித்து நோன்பு வைப்பது தடுக்கப் பட்டுள்ளது.

☛ அறுக்கும்போது எத்தனை நரம்புகள் அறுபடுவது கட்டாய மாகும்?

**நாக்பூரிலிருந்து**
**ஹபீபுர் ரஹ்மான்**

✍ நான்கு நரம்புகளை அறுப்பது கட்டாயமாகும். மூச்சு வாங்கக் கூடிய நரம்பு; உணவு - தண்ணீர் செல்லக் கூடிய நரம்பு. இந்த இரண் டின் வலது, இடது பக்கமுள்ள இரத்தம் ஓடக்கூடிய நரம்புகள்.

☛ என் தோழி ஒருவர் ஆண்கள் தொழுவதைப் போன்று தொழுதார். அதற்கு நான் பெண் களுடைய தொழுகைக்கும், ஆண்களுடைய தொழுகைக் கும் வித்தியாசம் இருப்பதாக சொன்னேன். ஆனால், அந்தப் பெண்ணோ நபி (ஸல்) அவர் கள் ஆண்களுக்கும், பெண் களுக்கும் சேர்த்து ஒரே மாதிரி யாகத்தான் தொழ வைத்துள்ளார் கள் என்று கூறுகிறார். அது உண்மைதானா?

**காயல்பட்டிணத்திலிருந்து**
**ஸஃரீன் ஃபாத்திமா**

✍ நபி (ஸல்) அவர்கள் அனை வருக்கும் ஒரே மாதிரியாக

# நன்மைகளை தாமதப்படுத்தாதீர்!

عَنِ ابْنِ عَبَّاسٍ رضى الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وآله وسلم : مَنْ أَرَادَ الْحَجَّ فَلْيَتَعَجَّلْ.(رَوَاهُ أَحْمَدُ وَأَبُو دَاوُدَ وَالْحَاكِمُ.)

"எவர் ஹஜ்ஜை நாடுகிறாரோ அவர் அதனை விரைவாக நிறைவேற்றிக் கொள்ளட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்
(நூல் : அஹ்மத், அபூதாவூது, ஹாகிம்)

---

ஒவ்வொரு ஆண்டுடைய ஹஜ் சிறப்பிதழும் நமக்கு வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய பல்லாயிரம் விஷயங்களை கியாமத் நாள் வரை தொய்வின்றி தொடர்ந்து வழங்கிட குர்ஆனின் குரலுக்காக நாம் துஆ செய்கிறோம்!

---

# செய்யது சகோதரர்கள்

## நாகூர்.

தொழ வைத்தார்கள் என்பது உண்மைதான். ஆனால், தொழும் முறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு சில வித்தியாசங்கள் உள்ளன. அதன் படிதான் தொழவேண்டும். முதன் முதலாக பெண்கள் தக்பீர் கட்டும் போது புஜம் அளவு மட்டுமே கைகளை உயர்த்த வேண்டும். நிலையின்போது தங்களின் கைகளை நெஞ்சின் மீது கட்ட வேண்டும். ருகூஃவின்போது ஆண்களைப் போன்று முழுமை யாக தங்கள் முதுகுகளை சம மாக வைக்க தேவையில்லை. ஸஜ்தாவின்போது தங்களின் வயிறுகளையும், தொடைகளை யும் ஒட்டியவாறு வைத்துக் கொள்ள வேண்டும். அத் தஹிய்யாத் இருப்பின்போது பெண்கள் இடது காலை வலது கெண்டங்காலின் வழியாக வெளியில்விட்டு தரையின் மீது தங்களின் பித்தட்டுகளை வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான வித்தியாசங்கள் அனைத்தையும் பெண்கள் தங்கள் தொழுகைகளில் பேணி செய்ய வேண்டும். அதுவே நபி (ஸல்) அவர்கள் காட்டிக்கொடுத்த சுன்னத்தான வழியாகும்.

பள்ளிவாசல்களில் ஊது பத்திகள் பொருத்தலாமா?

**திருப்பூரிலிருந்து**
**முஹைறுயத்தீன்**

பொருத்தி வைக்கலாம்.

இயற்கையான மரணம், திடீர் மரணம், நாமாக தேடிக் கொள்ளும் மரணம் இவற்றுக்கு இஸ்லாம்கூறும்விளக்கமென்ன?

**சென்னையிலிருந்து**
**சையது ஹனீஃப்**

இயற்கையான மரணம் என்பது சாதாரணமானதாகும். அந்த மரணம்தான் அல்லாஹ் வையும், அடியானையும்இணைக் கும் பாலமாகும். திடீர் மரணம் என்பதை மார்க்கம் விரும்ப வில்லை. நபி (ஸல்) அவர்கள் இப்படிப்பட்டமரணத்தைவிட்டும் பாதுகாப்பு தேடியிருக்கிறார்கள். ஏனெனில், ஒரு மனிதனுக்கு பாவங்களை விட்டும் தவ்பா செய்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போய் விடலாம். நாமாக தேடிக் கொள்ளும் மரணத்தை மார்க்கம் ஹராம் என்று சொல்கிறது. இப்படிப் பட்ட மனிதனை "நரகவாதி" என்று நபி (ஸல்) அவர்கள் கடுமையான முறையில் எச்சரிக்கை செய்துள்ளார்கள். அது எந்த காரணத்திற்காக இருந்தாலும் அந்த மரணத்தை ஷரீஅத் அனுமதிக்கவில்லை.

சகோதர சமுதாய நண்பர் களை சந்தித்தால் அவர்களுக்கு வணக்கம் சொல்லலாமா?

**சேலத்திலிருந்து**
**ஷமீம் பேகம்**

கூடாது.

எங்கள் ஊரில் எந்த ஆடம்பரமுமில்லாமல், மார்க்கத் திற்கு முரணான காரியங்கள்

நடைபெறாமல் நபி (ஸல்) அவர்களின் பெயரால் ஆண்டு தோறும் சிறப்பான விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்படு கிறது. ஆனால், சமீப காலமாக வசூலிக்கப்படும் பணத்தில் ஹராமான தொகைகளும் வந்து சேருவதாக கேள்விப்படு கிறோம். அப்படி ஹராமான பணத்தை வாங்கி இதில் சேர்க்கலாமா?

✍ கண்டிப்பாகக் கூடாது. ஹராமாக வரும் பணங்களை இதில் சேர்ப்பதால் அனைவ ருக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும்.

☛ இஹ்ராம் உடையில் கஃபத்துல்லாஹ்வை தவாப் செய்யும்போது ஒளு முறிந்து விட்டால் உடனடியாக ஒளு செய்து கொள்ள வேண்டுமா?

**தஞ்சையிலிருந்து**
**அப்துல் வாஜித்**

✍ ஆம். அவசியம் உடனடி யாக ஒளுச் செய்து கொண்டு தவாபை தொடர வேண்டும்.

☛ இன்ஷா அல்லாஹ் நான் ஒரு வீடு கட்ட எண்ணியுள் ளேன். அந்த வீட்டிற்கு "அர்கம் ஹவுஸ்" என்று பெயர் வைக்க விரும்புகிறேன். அப்படி வைக்கலாமா?

**கரூரிலிருந்து**
**முஹம்மது**

✍ புனித மக்காவில் ஆரம்பமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஸஹாபிகளில் ஒருவரும், இந்த சன்மார்க்கத்தை பற்றி உண்டான ஆலோசனைகள் செய்வதற்குள்ள இடமாக தன் வீட்டை வசதி செய்து கொடுத்த மூத்த ஸஹாபிகளில் ஒருவரு மான ஹள்ரத் அர்கம் (ரளி) அவர்களின் பெயரை உங்கள் வீட்டிற்கு வைத்துக்கொள்வதில் எந்த தவறுமில்லை. அந்த புனிதமான பெயரின் பரக்கத்தால் அவர்களின் இல்லத்தைப் போன்று நம்முடைய இல்லமும் தீனின் மர்கஸாக விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நிய்யத்தோடு அப்படியொரு பெயரை வையுங்கள். இன்ஷா அல்லாஹ் உங்களின் அந்த நிய்யத்திற்கு அல்லாஹ் உங் களுக்கு இம்மையிலும், மறுமை யிலும் சிறந்த பிரதிபலனை வழங்க போதுமானவன்.

☛ எனக்கு போதிய வரு மானம் இல்லாததால் என் மகளுக்கு திருமணம் செய்து வைப்பதற்காக உறவினர்களி டமும், நண்பர்களிடமும் பண உதவி கேட்கலாமா?

**தேனியிலிருந்து**
**ஹைதர் அலீ**

✍ திருமணத்தின் அவசிய செலவுகளுக்காக பணஉதவி கேட்கலாம். அனாவசியமான, ஆடம்பரமான செலவுகளுக் காக பிறரிடம் உதவி தேடுவது கூடாது.

ஏழு பேர்கள் சேர்ந்து கொடுக்கக்கூடிய கூட்டு குர்பானிகளின்போது ஒருவர் மட்டும் சென்ற ஆண்டு களாவான குர்பானியை நிய்யத் செய்திருந்தால் அந்த குர்பானி நிறைவேறுமா?

**விட்லல்வாடியிலிருந்து**
**ர:பீக் அன்வர்**

அனைவரின் குர்பானியும் நிறைவேறிவிடும். எனினும், சென்ற ஆண்டின் குர்பானியை நிய்யத் செய்தவருக்கு அந்த குர்பானி நஃபிலாகவே நிறைவேறும். அதாவது, அவரது களா நிறைவேறாது. மாறாக, அவர் நடுத்தரமான ஒரு ஆட்டின் கிரையத்தை சதகா செய்வது தான் அதற்குரிய களாவாக ஆகும்.

குர்பானி சுன்னத்தா? அல்லது வாஜிபா? யார் மீது வாஜிப்?

**ஆந்திராவிலிருந்து**
**சுல்தான்**

யாரிடத்தில் 87 ½ கிராம் தங்கம் அல்லது 612 ½ கிராம் வெள்ளி அல்லது அந்த வெள்ளியின் அளவுள்ள கிரையம் அவரது தேவையை விட அதிகபட்சமாக இருக்குமோ, அவர் மீது குர்பானி கட்டாயமாகி விடும். அதற்கு ஒரு வருடம் முழுமையாகவேண்டும்என்ற நிபந்தனை கிடையாது. எனவே தான், குர்பானியின் குறிப்பிட்ட நாட்களில் ஒன்றில் அவருக்கு அந்தளவு மதிப்புள்ள பணம் அல்லது நகைகள் அல்லது வியாபார சரக்குகள் அல்லது கால்நடைகள் திடீரென அவரிடம் வந்து விட்டால், நிச்சயம் அவர் குர்பானி கடமையானவராக கருதப்படுவார். அவர் அதை நிறைவுபடுத்துவது அவசியமாகும்.

நான் இரவில் படுக்கைக்கு செல்லும்போது அதிக நேரம் உட்கார்ந்து திக்ரு செய்து கொள்கிறேன். மனனமாக இருக்கின்ற சின்னச் சின்ன குர்ஆன் ஆயத்துக்களையும் ஓதிக்கொள்கிறேன். அந்த நேரத்தில் திக்ரு செய்வதற்கும் - குர்ஆன் ஆயத்துக்களை ஓதுவதற்கும் ஒளு செய்து கொள்ள வேண்டுமா?

**திருச்சியிலிருந்து**
**முஹம்மது கனி**

ஒளு செய்து கொண்டால் மிக மிக நன்மையான செயலாகும். ஒளு செய்ய முடியாமல் அப்படியே ஓதிக் கொண்டாலும் தவறில்லை. ஓதியதற்குரிய நன்மை இன்ஷா அல்லாஹ் கிடைத்து விடும்.

என் தந்தை மொத்த வியாபாரம் செய்கிறார். அதில் கண் திருஷ்டி ஏற்படாமல் இருக்கவும், பரக்கத் உண்டாகவும் என்ன செய்ய வேண்டும்?

**கடம்பையிலிருந்து**
**அப்துல்**

வியாபாரத்தில் ஒவ்வொரு காரியத்தை ஆரம்பிக்கும் போதும் பிஸ்மில்லாஹ் சொல்லி

# உங்கள் பிள்ளைகள் ஆலிம் & ஹாஃபிழ் ஆக வேண்டுமா?

# கவலை வேண்டாம்!

## மதுரை ஜே.எம்.எஸ்.அரபு கல்லூரி

சிவகங்கை தேசிய நெடுஞ்சாலை,
ஜாமிஆ நகர், மதுரை - 20.

**கல்விப் பணியில் 40 ஆண்டுகள்....**

- ஐந்து ஆண்டுகளில் மவ்லவீ ஆலிம் பட்டம்
- குர்ஆன் மனன ஹிஃப்ழு பிரிவு
- குர்ஆன் நாஜிரா பிரிவு
- அரபி பேச்சுப் பயிற்சி
- அஃப்ழலுல் உலமா தேர்வு எழுத வைத்தல்
- தமிழ் பயான் பயிற்சி
- 8, 10, 11 மற்றும் 12 வரை உலகக் கல்வி

★ தரமான கல்வி
★ திறமையான ஆசிரியர்கள்
★ சுவையான உணவு
★ சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
★ வசதியான தங்குமிடம்
★ இயற்கையான சூழல்
★ தடையில்லாத மின்சாரம்
★ ஆங்கில பேச்சுப் பயிற்சி
★ கணினிப் பயிற்சி

**கல்லூரியில் சேர எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**S.சபூர் முஹைதீன் மிஸ்பாஹி ஹள்ரத்**
**தலைவர்.**

மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் அல்லாமா அஷ்ஷைகு
**M.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா**
**முதல்வர்.**

மேலும் தொடர்புக்கு :
**94430 66539, 9486017570, 9994148480**

ஆரம்பிக்க வேண்டும். கண் திருஷ்டி ஏற்படாமல் இருக்க "லியீலாஃபி குரைஷின்" என துவங்கும் சூராவை ஏழு முறை ஓதி, அந்த வியாபார பொருட்கள் மீது ஊதி விட வேண்டும். பின்பு, நம்முடைய அமல்கள் சரியாக இருந்தால் அல்லாஹ் நம்முடைய தொழிலில் இன்ஷா அல்லாஹ் நிச்சயம் பரக்கத் செய்வான்.

நான் 19 வயதுக்கு பின்பு தான் தொழுகையை தொடர்ச்சியாக தொழ ஆரம்பித்தேன். அதுவரை விடுபட்டுபோன தொழுகைகளை களா செய்ய முயற்சி செய்து, சில நாட்கள் தொழுதேன். இப்போது எனக்கு சுமார் 61 வயதாகிறது. என்னால் தொழமுடியவில்லை. நான் என்ன செய்வது?

**புதுக்கோட்டையிலிருந்து**
**முஹம்மது இர்ஃபான்**

இப்பொழுதும் அதே முயற்சியில் தொடருங்கள். அல்லாஹ் தன் கருணையினால் உங்களுக்கு வணக்க, வழிபாடுகளை இலேசாக்கி வைப்பான். உறுதியான நிய்யத்தோடு நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு அல்லாஹ் நிச்சயம் தகுந்த கூலியை வழங்குவான்.

நான் உறவினர் ஒருவரின் ஜனாஸாவிற்காக சென்றிருந்தேன். மய்யித்தை கொண்டு செல்லும்போது ஒருவர், ஒரு கோழியை தன்னுடன் வைத்திருந்தார். மய்யித்தை அடக்கம் செய்த பின்பு கபுரை தோண்டியவரிடத்தில் அந்த கோழியை கொடுத்துவிட்டார். மார்க்கம் இப்படி சொல்கிறதா?

**கர்நாடகாவிலிருந்து**
**சாகுல் ஹமீது**

மார்க்கம் இப்படி சொல்லவில்லை. மார்க்கத்திற்கு அப்பாற்பட்டுள்ள இது போன்ற செயல்களுக்கும், மார்க்கத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. தவிர்க்கப்பட வேண்டிய செயலாகும்.

அல்லாஹ்விற்கு மிக நெருக்கமான சிறந்த அமல் எது?

**பாளையங்கோட்டையிலிருந்து**
**பாஸித்**

நஃபிலான வணக்கங்களும், தொடர்ந்து செய்யக் கூடிய சின்னச்சின்ன அமல்களும் அல்லாஹ்விடத்தில் மனிதனை நெருக்கமாக்கி வைக்கும் சிறந்த அமல்களாகும்.

கணவனுக்கு அடிபணிந்து நடக்காமல் தன் இஷ்டப்படி நடக்கும் பெண்களுக்கு மார்க்கம் கூறும் எச்சரிக்கை என்ன?

**செம்மியமங்கலத்திலிருந்து**
**அப்துல்**

கணவன்மார்களின் பொருத்தமில்லாமல் செயல்படும் மனைவிமார்கள் சுவனத்தை அடைய முடியாது. இதற்கு மேல் ஒரு முஃமினுக்கு எச்சரிக்கை தேவையில்லை.

# குன்றின் மேல் குர்ஆன்

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

உலகில் பல்லாயிரம் மதங்கள்! இரண்டாயிரத்துஎண்ணூறு மொழிகள்! எழுத்து வடிவத்தில் இருநூற்று நாற்பது மொழிகள்!

இத்துணை மொழிகள் பேசும் மக்களில் ஒவ்வொரு மொழி பேசுவோருக்கும் நபிமார்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு நபிமாருக்கும் வேதங்கள் வழங்கப்பட்டுள்ளன. வேதங்களில் மிகச் சிறந்த உயர்வான வேதம் அல்குர்ஆன். இவ்வறிவுப் பேழையை, விஞ்ஞானப் பேழையை பெற்ற நபி (ஸல்) அவர்களின் உம்மத்துக்கள் மிகப் பெரிய பாக்கியம் பெற்றவர்கள்.

குர்ஆனில் இல்லாத பொருளே இல்லை. அறிவுக் களஞ்சியமாய் அமைந்துள்ளது குர்ஆன்.

இன்றைய புதிய புதிய கண்டுபிடிப்புகளையெல்லாம் குர்ஆனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இக்கண்டு பிடிப்புகளைப் பற்றி 1400 ஆண்டுகளுக்கு முன்பே குர்ஆன் தெளிவுபடுத்தி இருக்கிறது.

அல்குர்ஆனை ஓதுவது நன்மை. பொருள் புரிந்து ஓதுவதால் அறிவுவளர்ச்சி, ஆன்மிக ஞானம்உண்டாகும். "குர்ஆனை ஓதி முடித்து விட்டு கேட்கும் துஆ அங்கீகரிக்கப்படும்" என்கிறது நபி (ஸல்) அவர்களின் பொன்மொழி.

குர்ஆன்ஷரீஃபில் சொல்லப் படாதவை என்று ஒன்றில்லை. அறிவுக்கு எட்டாமலிருக்கலாம். அது நம் அறிவின், ஆற்றலின் குறைபாடு. வானமும், பூமியும் இணைந்திருந்தது. நாம்தான் அதைப் பிரித்தோம் என்று கூறும் குர்ஆன், நாம் வானத்தை பாதுகாக்கப்பட்ட ஒன்றாக ஆக்கினோம் என்று கூறுகிறது.

ஏழு வானங்களை தட்டுத் தட்டாக ஆக்கியுள்ள இவற்றில் மேடு, பள்ளம், ஏற்றத் தாழ்வை பார்க்க முடியாது என்று குர்ஆன் கூறுகிறது.

முதல் வானத்தை விளக்குகளால்நாம் அலங்கரித்துள்ளோம்.

அலங்காரமாயிருக்கும் அவ்விளக்குகளை அதாவது நட்சத்திரங்களை அண்டிவரும் ஷைத்தான்களை துரத்தியடிப்பவையாக ஆக்கியுள்ளோம் என்று கூறுகிறது.

சூரியன் அதற்காக நிர்ணயிக்கப்பட்டவற்றில் ஓடிக் கொண்டிருக்கிறது.

கடலைப் படைத்து, நல்ல தண்ணீர், உப்புத் தண்ணீர் இரண்டையும் ஒரே இடத்தில் இருக்கச் செய்தோம். அவ்விரண்டும் ஒன்றோடொன்று கலக்காமல் இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இரும்பையும், மலைகளையும் படைத்திருப்பதன் பயன்களை அல்குர்ஆன் விவரிக்கிறது.

கொசு, ஈ, எறும்பு, ஆடு, மாடு, குதிரை, ஒட்டகை, கீரை, வெள்ளைப் பூண்டு, பருப்பு, வெங்காயம் இவற்றைப் பற்றி சொல்லி வியக்க வைக்கிறது.

நபிமார்களின் வரலாறுகள், அடங்காத உம்மத்துகள், அவர்களை அழித்த சம்பவங்கள் குர்ஆனில் இடம் பெற்றுள்ளன.

அதிசயிக்கத்தக்க குகைவாசிகளை பல்லாண்டு உறக்கத்தில் ஆழ்த்திய அதிசய தூக்கத்தை இறையாற்றலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது இறைவேதம்தான்; சந்தேகப்பட்டால் இது போல் ஒரு வேதத்தைக் கொண்டு வாருங்கள் என்று சவால் விடுத்து, அந்த சவாலில் தோற்றவர்களின் வரலாற்றையும் உலகம் தெரிந்திருக்கிறது.

ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு வசனங்களை அமைத்து, எழுத்துக்கள், புள்ளிகள் என்று வரையறுத்து சொல்ல, எவராலும் மாற்றவோ, அழிக்கவோ முடியாத ஒப்பற்ற மாமறையாக விளங்கி வருகிறது.

அறிவுச் சோலை மட்டுமல்ல. ஆன்மிக ஞானம் அது. இதயத்துக்கு இதமளிப்பதுடன், மனிதர்களுக்கு உடல் ஆரோக்கியத்தை

## நல்வாழ்த்துக்கள்!

குர்ஆனின் குரலின் பாசமிகு சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள், விற்பனை முகவர்கள், சிறப்பு பிரதிநிதிகள், குரலின் ஒலி உலகெங்கும் ஒலித்திட துஆ செய்து வரும் வாசக நேயர்கள் அனைவருக்கும் எங்களின் இதயங்கனிந்த "ஹஜ் பெருநாள்" நல்வாழ்த்தினை உரித்தாக்குவதில் பெருமகிழ்வு எய்துகிறோம். அல்ஹம்து லில்லாஹ்!

-"குர்ஆனின் குரல்" குழுமம்.

யும், மன ஆரோக்கியத்தையும் தரும் ஒப்பற்ற அருமருந்தாகவும் இருக்கிறது. இறை திக்ரை மொழிந்தால் இதயம் நிம்மதி பெறும் என்று சொன்னதால் மன அமைதியைத் தேடிச் செல்வோர் குர்ஆனை ஓதுவதால் அந்த நிம்மதியைப் பெற முடிகிறது.

ஓத வேண்டியது, ஓதக்கூடியது என்ற பொருளுள்ள குர்ஆனுக்கு பல பெயர்கள் இருப்பினும், குர்ஆனில் அல்குர்ஆன் என்று பல இடங்களில் வருவதால் குர்ஆன் என்ற பெயரே சிறப்புப் பெயராக விளங்குகிறது.

தர்தீபே திலாவத் - இன்று நாம் ஓதி வருகிற வரிசைக்குப் பெயர்.

தௌகீஃபி - கால நிலைமைக்கேற்ப வசனங்களாகவும், அத்தியாயங்களாகவும், குறைவாகவும், அதிகமாகவும் அருளப்பட்டதை இந்த வசனம் இந்த அத்தியாயத்தை சார்ந்தது, இந்த அத்தியாயம் இத்தனையாவது அத்தியாயம் என்றெல்லாம் நபி (ஸல்) அவர்கள் ஒழுங்கு படுத்திக் கொடுத்தார்கள்.

இந்த தௌகீஃபியை நபி மணி (ஸல்) அவர்கள் ஒழுங்கு படுத்திக் கொடுத்ததற்குப் பெயர் தர்தீபே ரசூல் என்று கூறப்படுகிறது.

தர்தீபே நுஜூலி - குர்ஆன் எம்முறையில் அருளப்பட்டதோ அதற்குப் பெயர்.

ருபுஉ - கால்பாகம், நிஸ்ஃப் - அரை பாகம்; ஸலாஸா - முக்கால் பாகம்.

இப்படிப் பிரித்திருப்பதானது ஓதுவதற்கு வசதியாக இருப்பதற்கே.

தொழுகையில் ஒரு ரக்அத்தில் ஓதக்கூடிய சுமாரான அளவில் குர்ஆன் ஆயத்துக்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதற்குப் பெயர் ருகூஃ.

திவாலே முஃபஸ்ஸல் - சூரத்துல் ஹுஜுராத் முதல் புரூஜ் வரை.

அவ்ஸாதே முஃபஸ்ஸல் - தாரிக் முதல் அல்பய்யினா வரை.

கிஸாரே முஃபஸ்ஸல் - ஜில்ஜால் முதல் அந்நாஸ் வரை.

பஜ்ர், ளுஹரில் திவாலே முஃபஸ்ஸல்.

அஸர், இஷாவில் அவ்ஸாதே முஃபஸ்ஸல்.

கிஸாரே முஃபஸ்ஸல் - மஃரிபில் ஓதுவது சுன்னத். மக்காவில் இறங்கிய 93 அத்தியாயங்கள் "மக்கீ" என்று குறிப்பிடப்படுகின்றன.

மதீனாவில் இறங்கிய 21 அத்தியாயங்கள் "மதனீ" என்று குறிப்பிடப்படுகின்றன.

முதலில் இறங்கிய வசனங்கள் 96வது அத்தியாயத்தின் முதல் 5 வசனங்கள்.

கடைசியாக இறங்கிய வசனம் 4வது அத்தியாயமான சூரத்துன்னிஸாவின் கடைசி வசனம்.

மாடு, ஒட்டகை போன்ற பிராணிகளின் எலும்பு, தோல், பேரீச்சமரப்பட்டை, ஓடு ஆகியவற்றில் குர்ஆன் ஆயத்துகள் எழுதி வைக்கப்பட்டன.

குர்ஆனை ஒன்றுபடுத்தி எழுத ஒரு குழு அமைக்கப்பட்டது. ஹள்ரத் அபூபக்கர், ஹள்ரத் உமர், ஹள்ரத் உஸ்மான், ஹள்ரத் அலீ, ஹள்ரத் ஆயிஷா, ஹள்ரத் ஜைதிப்னு சாபித், ஹள்ரத் உபய்யிப்னு கஅப், ஹள்ரத் ஜுபைரிப்னு அவாம், ஹள்ரத் ஹாலிதிப்னு சயீத், ஹள்ரத் அபானிப்னு சயீத், ஹள்ரத் ஹன்லலா இப்னு ரபீஃ, ஹள்ரத் முஅம்கிப்னு அபீபாத்திமா, ஹள்ரத் அப்துல்லாஹிப்னுசஅத், ஹள்ரத் அப்துல்லாஹிப்னு அர்கம், ஹள்ரத் சுர்ஹுபிலிப்னு ஹஸனா ரளியல்லாஹு அன்ஹும் ஆகியோர் ஆவர்.

ஆரம்பகாலத்தில் மக்காவில் ஹள்ரத அர்கம் (ரளி) அவர்களின் வீடு குர்ஆன் மனனம் செய்யும் மதரஸாவாக இருந்தது.

கலீஃபா ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் காலத்தில் நடந்த போர்களில் ஹாஃபிழ்கள் அதிகமானோர் ஷஹீதாகி விட்டதால் ஆங்காங்கே எழுதி வைக்கப்பட்டிருந்த குர்ஆன் வசனங்களை திரட்டி ஒரே நூலாக கொடுக்கும் பொறுப்பினை ஹள்ரத் ஜைது (ரளி) அவர்கள் செய்து முடித்தார்கள்.

ஆதாரப்பூர்வமான இக்குர்ஆன் ஹள்ரத் உமர் (ரளி) அவர்களின் மகளாரும், நபிமணியின் துணைவியாருமான ஹள்ரத் ஹஃப்ஸா (ரளி) அவர்களின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

6666 வசனங்கள் கொண்ட குர்ஆனில்

| | |
|---|---|
| வாக்குறுதியளிக்கும் வசனங்கள் | - 1000 |
| வரலாறு கூறும் வசனங்கள் | - 1000 |
| எச்சரிக்கும் வசனங்கள் | - 1000 |
| உவமை கூறும் வசனங்கள் | - 1000 |
| நன்மையை ஏவும் வசனங்கள் | - 1000 |
| தீமையைத் தடுக்கும் வசனங்கள் | - 1000 |
| நன்மை தீமை பற்றிய வசனங்கள் | - 500 |
| பிரார்த்தனை வடிவிலுள்ள வசனங்கள் | - 166 |

ஈத் முபாரக்!

# நினைவுச் சின்னம்

மவ்லவி மூ.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

وَلِكُلِّ أُمَّةٍ جَعَلْنَا مَنسَكًا لِيَذْكُرُوا اسْمَ اللَّهِ عَلَىٰ مَا رَزَقَهُم مِّن بَهِيمَةِ الْأَنْعَامِ

"குர்பானி செய்வதை ஒவ்வொரு வகுப்பினருக்கும் கடமையாக்கி இருக்கின்றோம். அல்லாஹ் கொடுத்திருந்த ஆடு, மாடு, ஒட்டகங்களின் மீது அவன் பெயரைக் கூறி குர்பானி செய்யுங்கள்." - அல் குர்ஆன் [22 : 34]

குர்பானி என்பது இஸ்லாமிய அடையாளச் சின்னங்களில் உள்ளதாகும். இறை நேசத்திற்காக மட்டும் அர்ப்பணிக்கப்படும் அனைத்திற்கும் குர்பானிஎன்றே சொல்லலாம். அது பணமாக, பொருளாக, பிராணியாக இருக்கலாம். எனினும், அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக அவனுடைய ஆணைக்கேற்ப "ஈதுல் அள்ஹா" வின் நாட்களில் பிராணிகளை அறுத்துப் பலியிடுவதே இஸ்லாமிய மார்க்கத்தின் வழக்கில் "குர்பானி" எனப்படும்.

அதனால் சமுதாயத்திற்கு என்ன பலன்? பொருளாதார வளர்ச்சிக்கு இது எந்த வகையில் உதவுகிறது? என்றெல்லாம் சிந்திக்காமல் இறை ஆணையை நிறைவேற்றல் என்ற ஓர் அம்சத்தை மட்டும் நினைவில் நிறுத்தி செய்யப்படும் வழிபாடே குர்பானியாகும். இந்த விஷயத்தில் நம்முடைய விருப்பு வெறுப்புக்கோ, சொந்த கருத்துக்கோ இடமளிக்காமல் இறை உத்தரவு ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

(நஃபில் எனும்) உபரியான தொழுகை, நோன்பு, தர்மம் போன்ற நற்காரியங்களை எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். இதற்கு நேரம் காலம் நிபந்தனையல்ல. ஆனால், குர்பானி எனும் பலியிடுதல் மட்டும் துல்ஹஜ் மாதம் பிறை 10,11,12 ஆகிய மூன்று நாட்களில் செய்தால் தான் வணக்கமாகக் கருதப்படும். இந்த மூன்று நாட்கள் கழிந்து விட்டால் குர்பானி கொடுக்க இயலாது. (ஷாஃபி மத்ஹபின்படி நான்காவது நாளும் கொடுக்கலாம்.) ஆதி மனிதர் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இந்த குர்பானி என்ற வழக்கம் தொடங்கி விட்டதாக திருமறை இயம்புகிறது.

## எண்ணம் போல்

"(நபியே!) ஆதமுடைய இரு புதல்வர்களின் உண்மை செய்தியை அவர்களுக்கு எடுத்துரைப்பீராக! அவ்விரு வரும் குர்பானி செலுத்தியபோது அவர்களில் ஒருவரிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மற்றொருவரிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (குர்பானி ஏற்கப்பட்ட) அவர், "இறையச்சமுடையோரிட மிருந்தே அல்லாஹ் ஏற்றுக்கொள் வான்" என்று கூறினார்."

- அல்குர்ஆன் (5 : 27)

ஆதிமனிதர் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களின் புதல்வர்கள் காபில், ஹாபில் ஆகிய இருவருக்கும் ஒரு பெண்ணை மணந்து கொள்வதில் தர்க்கம் ஏற்பட்டது. அவ்விருவரும் குர்பானி கொடுக்க வேண்டும். அவர்களில் எவருடைய குர்பானி ஏற்றுக்கொள்ளப்படுமோ அவர்தான் அப்பெண்ணை மணந்துகொள்ள தகுதியானவர் என்பது இறை உத்தரவாகும்.

காபில் என்பவர் விவசாயியாக இருந்தார். இவர் தம்மிடமிருந்த தொலியும், உமியும் கலந்த மட்டரகமான தானியங்களை வேண்டா வெறுப்போடு குர்பானி கொடுத்தார். ஹாபில் என்பவர் ஆடு மேய்ப்பவராக இருந்தார். இவர் தம்மிடமிருந்த தரமான நன்கு கொழுத்த ஆடு ஒன்றை மனநிறைவோடு குர்பானி கொடுத்தார். அக்கால முறைப்படி ஏற்றுக்கொள்ளப் பட்டதன் அடையாளமாக வானிலிருந்து நெருப்பொன்று வந்து ஹாபிலின் குர்பானியைப் புசித்தது. காபிலின் குர்பானியை அப்படியே விட்டு விட்டது.

(நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்)

இறைவனுக்காக எதை அர்ப்பணித்தாலும் அதில் கருமித் தனமின்றி மனநிறைவோடு தரமானதையும் அழகானதையும் மட்டுமே அர்ப்பணிக்க வேண் டும். அல்லாஹ் உயர்வானவன். இறையச்சத்தோடு உயர்ந்த எண்ணத்தோடு வழங்குவதை மட்டுமே ஏற்றுக்கொள்வான். கருமித்தனத்தோடும், பிறர் புகழை நோக்கமாகக் கொண்டும் வழங்கும் எதையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை. சலிப் புடன் வேண்டா வெறுப்போடு செய்யப்படும் நற்செயல்களால் அல்லாஹ் மகிழ்ச்சி அடைவ தில்லை என்பதை மேற்கண்ட வசனம் தெளிவுபடுத்துகிறது.

பிற சமயத்தவர்களிடமும் பிராணிகளை பலியிடுதல் வணக்க வழிபாடுகளில் உள்ள தாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் சிலைகளுக் கும், சிலுவைகளுக்கும் பிராணி களைப் பலியிட ஆரம்பித்து விட்டனர். வேறு சிலரோ ஜின்கள், ஷைத்தான்களுக்கு பிராணிகளைப் பலியிட்டுக்

தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்!

Since 1977-2023

46 Years

Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

கொண்டிருந்தனர். இஸ்லாம் அவற்றையெல்லாம் தடுத்து, உயிர் பலியிடுதல் என்பதை படைத்த அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்ய வேண்டும்; வேறு எவருக்கும் பலியிடக் கூடாது என்று தடை விதித்து விட்டது. அதையே தலைப்பில் காணும் திருவசனம் கூறுகிறது.

## சிறந்த வணக்கம்

**"அவற்றின் [பலியிடப்படும் பிராணியின்] மாமிசமோ அல்லது அவற்றின் இரத்தமோ அல்லாஹ்வை அடைந்து விடுவதில்லை. உங்களுடைய இறையச்சம் தான் அவனை அடையும்."**

-அல்குர்ஆன் (22 : 37)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், குர்பானி கொடுப்பதற்கு மூலகாரணம் என்ன வென்று நபித்தோழர்கள் வினவினர். அண்ணலார், "அது உங்கள் தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் வழிமுறையாகும்" என்று பதிலளித்தார்கள். நபித்தோழர்கள், "இதில் எங்களுக்கு என்ன நன்மை உண்டு?" என்று மீண்டும் வினவினர். அண்ணலார், "குர்பானி பிராணியின் ஒவ்வொரு உரோமத்திற்காகவும் ஒரு நன்மை குர்பானி கொடுத்தவருக்கு உண்டு" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் ஸைத் பின் அர்கம் (ரளி) அவர்கள் (நூல்: திர்மிதீ- 1413, இப்னுமாஜா- 3247)

**நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் :**

**"துல்ஹஜ் மாதம் பத்தாவது நாள் [யவ்முந் நஹ்ர்] அன்று ஒரு மனிதர் செய்யும் நற்செயல்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது, இரத்தத்தை வழிந்தோடச் செய்யும் [இந்த குர்பானி] நற்செயலைவிட வேறெதுவுமில்லை. மறுமை நாளில் அந்த குர்பானி பிராணி தனது கொம்புகளுடனும், உரோமங்களுடனும், கால் குளம்புகளுடனும் [முழுமையாக] வரும். [குர்பானி பிராணியின்] அந்த இரத்தம், நிலத்தில் விழுவதற்கு முன் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டு விடுகிறது. எனவே, மன நிறைவோடு குர்பானி கொடுங்கள்."**

அறிவிப்பாளர்:- ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ- 1413, இப்னுமாஜா-3246 )

அல்லாஹ்வின் அன்பைப் பெற நமக்கு பிடித்தமான அனைத்தையும் அவனது

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

பாதையில் அர்ப்பணிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குவது தான் குர்பானியின் உண்மையான நோக்கமாகும். பிராணிகளை பலியிட்டு அதன் இரத்தத்தையோ, மாமிசத்தையோ இறைவனுக்குப் படைப்பது குர்பானியின் நோக்கமல்ல. ஏனெனில், உலகமக்களை விட்டும் அவன் தேவையற்றவன் என்பதை மறந்துவிடக்கூடாது.

**"நிச்சயமாக அல்லாஹ் அவர்களை விட்டும் தேவையற்றவனாக இருக்கிறான்."**

- அல் குர்ஆன் (3 : 97)

குர்பாணி குறித்து வந்துள்ள சிறப்புகள் அனைத்தும் இறையச்சத்தையும், மனத்தூய்மையையும் தன்னகத்தே கொண்டவருக்கு தான். இஸ்லாம் மென்மேலும் பரந்து விரிந்து வளர்ச்சி காண, நமது உடல், பொருள், ஆவி இதில்எதை அர்ப்பணிக்கும் சூழ்நிலை ஏற்பட்டாலும் அதற்கும் துணிந்துவிட வேண்டும்.

இறை தூதர் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை தன் விருப்பமாக்கி, தமது வயோதிகத்தில் பெற்றெடுத்த செல்வப் புதல்வரை அல்லாஹ்வுக்காக அர்ப்பணிக்க தயாரானார்கள். அல்லாஹ் அதை ஏற்று, அவர்களின் புதல்வரை பலியிடுவதற்கு ஈடாக ஓர் ஆட்டை பலியிட்டாலே போதுமானது என்றுரைத்தான் என்பது நாம் அறிந்த வரலாறாகும்.

அல்லாஹ்விற்கு விருப்பமான நற்செயலில் நாம் மனத்தூய்மையோடு ஈடுபட்டால் அனுமதிக்கப்பட்ட வகைகளில் நமக்கு பிரியமானதை நிச்சயமாக அல்லாஹ் தருவான் என்ற விளக்கமும் இந்த வரலாற்றின் மூலம் தெரிகிறது.

## மேலானவனுக்காக

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் கூறியதாவது. "(ஹஜ்ஜின் போது என் தந்தை) உமர் (ரளி) அவர்கள் உயர்தரமான ஒட்டகம் ஒன்றைப் பலிப்பிராணியாகக் கொண்டு வந்தார்கள். அ(தை வாங்குவ)தற்காக முன்னூறு பொற்காசுகள் கொடுத்தார்கள்.

அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, "நாயகமே! நான் உயர்தரமான ஒட்டகம் ஒன்றை பலிப்பிராணியாகக் கொண்டு வந்துள்ளேன். அதற்காக முன்னூறு பொற்காசுகள் (விலையாகக்) கொடுத்தேன். அதை விற்றுவிட்டு அதன் கிரயத்தில் (சாதாரண வகையைச் சேர்ந்த) பல ஒட்டகங்களை விலைக்கு வாங்(கி குர்பானி கொடுக்) கட்டுமா?" என்று கேட்டார்கள். அண்ணலார், "வேண்டாம்; அதையே நீர் அறுப்பீராக!" என்ற கூறினார்கள்

(நூல்: அபூதாவூத்,
முஸ்னது அஹ்மத், தஃப்சீர்
இப்னு கஸீர்
அல்ஹஜ் வசனம்-32)

ஹள்ரத் உர்வா (ரளி) அவர்கள் தம் மக்களிடம், "நீங்கள் உங்களுடைய நண்பர்கள் எவருக்கும் அன்பளிப்புச் செய்ய வெட்கப்படும் எதையும், அல்லாஹ்வுக்கு அன்பளிப்புச் செய்ய (அதாவது குர்பானி கொடுக்க) முன் வராதீர்கள். ஏனெனில், நண்பர்களிலெல்லாம் மிகவும் மேலான நண்பன் அல்லாஹ்தான். மேலும், அவனுக்கே மிகவும் மேலானதை அன்பளிப்புச் செய்ய வேண்டும்" என்று கூறினார்கள்.

(நூல் : முஅத்தா மாலிக்)

தொத்தலும் வத்தலுமாக நிறைய பிராணிகளை குர்பானி கொடுப்பதைவிட, வாட்டசாட்டமாக பார்ப்பதற்கு கம்பீரமாக இருக்கக்கூடிய ஒரு பிராணியை உருப்படியாக குர்பானி கொடுப்பது சிறந்தது. குர்பானி கொடுப்பதற்காக ரூபாயை கொஞ்சம் அதிகமாக செலவழிப்பது தவறல்ல.

மட்டரகமான பொருளை நமது நண்பர் மற்றும் உறவினர்களுக்கு அன்பளிப்புச் செய்தால் அவர்களிடம் நமக்கு மதிப்பு குறைந்துவிடும் என்றெண்ணி, நம்மிடம் பணம் இல்லா விட்டாலும் கடன் வாங்கியாவது சிறந்த பொருளை அன்பளிப்புச் செய்ய விரும்புகிறோம் என்றால், எந்த பிரதிபலனையும் எதிர்பாராத உயர்ந்த நண்பனான அல்லாஹ்வுக்காக உயர்ந்த பொருளைக் கொடுப்பது தானே முறை ஆகும்.

குர்பானி கொடுக்காவிட்டால் மக்கள் குறை கூறுவார்கள் என்பதற்காகவோ அல்லது என்னாலும் குர்பானி கொடுக்க முடியும் என்று பகட்டிற்காகவோ அல்லது ஏனோதானோ என்று கடமையை தட்டிக் கழிப்பதற்காகவோ நொண்டி, கண் குருடு, புல் சாப்பிட முடியாத அளவுக்கு நாக்கு அறுபட்டது, காது அறுபட்டது, எலும்பும் தோலுமாக மெலிந்திருப்பது இதுபோன்ற பல குறைகளுள்ள பிராணிகள் மலிவு விலையில் கிடைப்பதை குர்பானி கொடுப்பது தவறாகும்.

## அழகிய வழிமுறை

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா மாநகரில் தங்கியிருந்த பத்தாண்டு காலங்களும் குர்பானி கொடுத்து வந்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர்(ரளி) அவர்கள் (நூல்: திர்மிதீ - 1427)

ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள் கூறியதாவது: "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஹ்ருடைய (துல்ஹஜ் பத்தாவது) நாளில் (தமது மனைவி) ஆயிஷா (ரளி) அவர்கள் சார்பாக ஒரு மாட்டை அறுத்துப் பலியிட்டார்கள்."

(நூல் : முஸ்லிம் - 2543)

ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!


# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **55 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு **'ஆலிமா'** பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு **"புதுச் சேர்க்கை"** நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "போதிய வசதியிருந்தும் யார் குர்பானி கொடுக்கவில்லையோ அவர் நமது தொழும் இடத்திற்கு வர வேண்டாம்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்னது அஹ்மது, இப்னு மாஜா-3123)

ஹள்ரத் ஹனஷ் பின் அல்முஅதமிர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "அலீ (ரளி) அவர்கள் இரு செம்மறியாட்டுக் கடாக்களை குர்பானி கொடுத்து வந்தார்கள். அவற்றில் ஒன்றை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சார்பாகவும், மற்றொன்றைத் தம் சார்பாகவும் குர்பானி கொடுத்தார்கள். இது குறித்து அவர்களிடம் (விளக்கம்) கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தான் இவ்வாறு எனக்கு உத்தர விட்டார்கள். இதை நான் ஒரு போதும் கைவிடமாட்டேன்" என்று பதிலளித்தார்கள்.

(நூல் : அபூதாவூத்-2792, திர்மிதீ-1415)

ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களுடன் தொழும் மைதானத்தில் இருந்தேன். அண்ணலார் குத்பா பேருரை முடித்து மிம்பர் படியில் இருந்து கீழே இறங்கினார்கள். அப்போது அவர்களிடம் ஒரு செம்மறியாட்டுக் கடா ஒன்று கொண்டுவரப்பட்டது. அண்ணலார் அதை தங்களின் புனித கரத்தால் அறுத்தார்கள். அறுக்கும்போது "அல்லாஹ் வின் திருப்பெயரால் அறுக் கிறேன். அல்லாஹ் மிகப் பெரி யவன். இது என் சார்பாகவும் என் சமுத்தாயத்தாரில் குர்பானி கொடுக்க இயலாதவர்கள் சார் பாகவும் (அறுக்கப்படுகிறது)" என்றும் கூறினார்கள்.

(நூல் : அபூதாவூத்-2812, திர்மிதீ-1441)

அண்ணல் நபி (ஸல்) அவர் களின் சமுதாயத்தாரில் மிகச் சிறந்தவர்கள் கண்ணியமானவர் கள் மார்க்கப்பிடிப்புடன் இறை யச்சத்தோடு வாழ்பவர்கள் தாம். இவர்கள் கட்டாயக் கடமைகளை யும், உபரியான வணக்கங்களை யும் சிறப்பாக நிறைவேற்று வார்களே தவிர, வெறும் முஸ்லிம் எனும் பெயர் தாங்கி களாக இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களில் குர்பானி கொடுக்க இயலாதவர்களுக் காகத்தான் அண்ணலார் அன்றே குர்பானி கொடுத்துள்ளார்கள்.

மேலும் ஒரு நற்செயலை செய்து அதன் நன்மையை பிற் காலத்தில் தோன்றுபவர்களுக்கு சேர்க்க முடியும் எனில், தற்போது வாழ்பவர்கள் ஒரு நற்செயலை செய்து அதன் நன்மையை முற்காலத்தில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களுக்கு சேர்க்க

முடியும் என்ற கருத்தும் இந்த நபிமொழியின் மூலம் தெளிவாகிறது.

இதனடிப்படையில்மறைந்து விட்ட நமது பெற்றோர்கள், உடன்பிறப்புகள், உறவினர்கள் போன்ற நம்முடைய முன்னோர் களுக்கு, நாம் குர்பானி கொடுத்து அதன் நன்மையை அவர்களுக்கு சமர்ப்பிப்பது அழகான செயலாகும். மேலும், நம்முடைய இறைநம்பிக்கை யின் உயர்வுக்காக பாடுபட்ட நமது முன்னோர்களில் மிகச் சிறந்தவராகவிளங்கும்மாமனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர் களுக்காக நாம் குர்பானி கொடுப்பது தானே நன்றிக் கடனாக அமையும்.

## சட்டங்களை அறிந்து கொள்வோம்

அருமை நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். "யாரிடம் அவர் அறுப்பதற்கான குர்பானிப் பிராணி இருந்து, துல்ஹஜ் பிறை காணப்பட்டு விட்டால், அவர் குர்பானி கொடுக் காத வரை தமது தலை முடியையோ நகங்களையோ சிறிதும் வெட்ட வேண்டாம்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் உம்மு சலமா (ரளி) அவர்கள்,
(நூல் : முஸ்லிம்-4000)

இந்த நபிமொழியின் அடிப்படையில், குர்பானி கொடுக்கஎண்ணுபவர் துல்ஹஜ் மாதப்பிறை பிறந்ததிலிருந்து குர்பானி கொடுக்கும் வரை தலைமுடி மற்றும் நகங்கள் களைதல், தாடியை சீர் செய்தல் போன்ற எதையும் செய்யாமலி ருப்பது (முஸ்தஹப் எனும்) விரும்பத்தக்ககாரியமாகும். அது முற்றிலும் தடை செய்யப்பட்ட காரியமல்ல. இதுவே பெரும்பா லான அறிஞர்களின்கருத்தாகும்.

யார் மீது குர்பானி கொடுப் பது கடமையோ அல்லது யார் குர்பானி கொடுக்க எண்ணம் கொண்டுள்ளாரோ அவருக்கு மட்டுமே (முடி மற்றும் நகங் களை களையக்கூடாது என்ற) இந்த சட்டம் பொருந்தும். வீட்டி லுள்ள மற்றவர்கள் இச்சட்டத்தை கடைபிடிக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

## இழிவு ஏற்படுவதிலிருந்து தடை!

"உங்களில் ஒருவன் ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு தன்னுடைய முதுகில் விறகுக்கட்டைச் சுமந்து விற்று வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவனுக்கு இழிவு ஏற்படாமல் தடுத்து விடுவான். மக்கள் அவனுக்குக் கொடுக்கவும் செய்யலாம் அல்லது மறுக்கவும் செய்யலாம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி : 1470, 1471)

குர்பானி கொடுக்க எண்ணுபவர் துல்ஹஜ் பிறை பிறப்பதற்கு முன்பே அக்குள் முடி, மர்ம உறுப்பின் முடிகளை களைந்து தலைமுடி, தாடி மற்றும் நகங்களை சீர்செய்து தம்மை சுத்தப்படுத்திக் கொள் வது மிகச் சிறந்த காரியமாகும்.

ஹள்ரத் அபூராஃபிஉ (ரளி) அவர்கள் கூறியதாவது "அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கருப்பு வெள்ளை கலந்த காயடிக்கப் பட்ட கொம்புள்ள கொழுத்த பருமனான இரு செம்மறி யாட்டுக் கடாக்களை குர்பானி கொடுத்தார்கள்."

நூல் ; முஸ்னது அஹ்மத், இப்னுமாஜா- 3241, ஷுஅபுல் ஈமான் லில்பைஹகீ, தஃப்சீர் இப்னு கஸீர் அல்ஹஜ் வசனம்-32)

ஹள்ரத் பராஉ பின் ஆஸிப் (ரளி) அவர்கள் கூறியதாவது : "அருமை நாயகம் (ஸல்) அவர்கள், (பெருநாள் தொழுகை) தொழாத வரையில் உங்களில் யாரும் (குர்பானி பிராணியை) கண்டிப்பாக அறுக்க வேண்டாம்" என்று கூறினார்கள். அப்போது என் தாய் மாமா (அபூபுர்தா பின் நியார் - ரளி) அவர்கள் எழுந்து நின்று, "நாயகமே! (இதை அறியாமல்) தொழுகைக்கு முன்பே அறுத்து விட்டேன்" என்று கூறினார்கள்.

அப்போது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "மற்றொரு பிராணியை அறுத்து மீண்டும் (குர்பானி) கொடுப்பீராக" என்று கூறினார்கள். அதற்கு அவர், "நாயகமே! என்னிடம் ஒரு வயதுடைய பால்குடி மறவாத பெட்டை வெள்ளாட்டுக் குட்டி ஒன்று உள்ளது. அது, இறைச்சி ஆடுகள் இரண்டை விடச் சிறந் தது. அதை (இப்போது) நான் அறுத்து குர்பானி கொடுக் கட்டுமா?" என்று கேட்டார். அதற்கு அண்ணலார் "ஆம், (அறுங்கள்)" என்று கூறினார்கள்.

(நூல் : முஸ்லிம் - 3963, அபூதாவூத் - 2802, திர்மிதீ - 1428, நசாயீ - 4318)

ஹள்ரத் அபூமூஸா (ரளி) அவர்கள் கூறியதாவது : "நான் என்னுடைய பெண் மக்களிடம் அவர்கள் தங்களுடைய குர்பானியை தங்களுடைய கைகளாலேயே அறுக்க வேண் டும் என்றும், அப்போது அப் பிராணியின் கழுத்தருகே அதன் தோள் மீது கால் வைத்துக் கொண்டு 'பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர்' என்று கூறி அறுக்குமாறு பணித்தேன்."

(நூல் : ரஸீன்)

குர்பானி குறித்து சில சட்டதிட்டங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். குர்பானி கொடுப்பவர் தன் கரத்தால் அறுப்பதே சிறந்தது. பெண் களும் அறுக்கலாம். அதுபோல் இரவு நேரத்தில் அறுப்பதும், பெட்டை பிராணிகளை அறுப் பதும், காயடிக்கப்பட்ட பிராணி

ஈத் முபாரக்!

## ஏழ்மையைக் கண்டு பயப்படாதீர்!

"வெள்ளப் பெருக்கின்போது வெள்ளம் ஆற்றின் மேல் பகுதியிலிருந்தும், மலையின் உச்சியிலிருந்தும் பள்ளத்தை நோக்கி பாய்வதை விட, உங்களில் என் மீது நேசம் கொண்டவருக்கு வறுமை மிக வேகமாக வந்தடையும்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹுன்ராத் ஸயீத் (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மத்)


வாழ்த்துக்களுடன்....

**ARM**

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**
**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

களை அறுப்பதும் கூடாது என்று எண்ணுவது தவறாகும். காயடிக்கப்பட்ட பிராணிகளை அறுப்பதுதான் மிகச்சிறந்தது என மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளார் ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்களுக்காக குர்பானி கொடுக்கும்போது, "ஃபாத்திமா! எழுந்து உமது குர்பானி பிராணிக்கு அருகில் ஆஜராகுவீராக! அதன் இரத்தத்திலிருந்து விழும் ஒவ்வொரு சொட்டுக்கும் நீ முன் செய்த அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படும்" என்று கூறினார்கள்.

அப்போது அன்னை ஹள்ரத் ஃபாத்திமா (ரளி) அவர்கள், "நாயகமே! (நீங்கள் சொல்லும் இந்த நற்செய்தி) அஹ்லே பைத்துக்களான எங்களுக்கு மட்டும் உரியதா? அல்லது அனைத்து முஸ்லிம்களுக்கும் உரியதா?" என்று வினவினார். நபியவர்கள், "(இந்த நற்செய்தி) நமக்கும் மற்றும் அனைத்து முஸ்லிம்களுக்கும் உரியது தான் என்றார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூசயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் (நூல் : ஹைஸமீ, மஜ்மஉஸ் ஸவாயித், ஹாகிம், அத்தர்கீபு வத்தர்ஹீபு)

அறுக்கத் தெரியாதவர், அறுக்க இயலாதவர் பிறருக்கு அனுமதி கொடுத்து அதைச் சொல்ல வேண்டும். அறுக்கப்படும் போது அதன் முன்னால் நின்று பார்ப்பது சிறப்பானதாகும். என் மீது கடமையான குர்பானியை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகிறேன் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு வரவேண்டும். குர்பானி கடமையானவர்கள் பிராணிகளை அறுக்காமல் அதன் விலையை தர்மமாக ஏழைகளுக்கு கொடுத்தால் குர்பானி கடமை நிறைவேறாது. அன்றைய தினத்தில் மற்ற நற்செயல்களை விட பிராணியை பலியிடுவது தான் இறைவனுக்குப் பிரியமானதாகும்.

ஜகாத் கடமையானவர் மீதுதான் குர்பானி கடமையாகும். ஆனால் நிஸாபை (கடமையாகும் அளவை) அடைந்து அதன் மீது ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டும் என்ற அவசியமில்லை.

குடும்பம் முழுவதற்கும் சேர்த்து ஒரு குர்பானி போதுமாகாது. மாறாக, குடும்பத்தில் உள்ளவர்களில் எத்தனை பேரிடம் ஜகாத் கொடுக்கக்கூடிய அளவு சொத்து இருக்குமோ அவர்கள் ஒவ்வொருவர் மீதும் குர்பானி கடமையாகும். ஒருவர் எவ்வளவு செல்வம் உள்ளவராக இருப்பினும், அவர் மீது ஒரு குர்பானி தான் கடமையாகும். மனைவி, மக்களுக்கு ஜகாத் கொடுக்கக்கூடிய அளவுள்ள சொத்து அவரவர் பொறுப்பில் இருக்குமேயானால் அவரவர்

மீது தனித்தனியாக குர்பானி கடமையாகும். ஒரு பெண் கொடுக்க வேண்டிய குர்பானி பெற்றோர்கள் மீதோ கணவன் மீதோ கடமையாகாது.

### கூட்டுக் குர்பானி

ஹள்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "நாங்கள் (ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டிக் கொண்டு புறப்பட்ட) ஹுதைபியா ஆண்டில் ஏழு பேருக்காக ஓர் ஒட்டகத்தையும், ஏழு பேருக்காக ஒரு மாட்டையும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் அறுத்துப் பலியிட்டோம்."

(நூல் : (முஸ்லிம்-2537, திர்மிதீ-1422)

ஹஜ் பெருநாள் நெருங்கி விட்டாலே கூட்டுக்குர்பானி குறித்து விளம்பரங்கள் அதிகமாகக்காணப்படுகின்றன. முதன் முதலில் கூட்டுக் குர்பானியை அரபி மதரஸாக்கள் தான் துவக்கி வைத்தன. அங்கு அறுக்கப்படும் பிராணிகளின் தோல்கள் விற்கப்பட்டு, அதன் தொகை மதரஸாவில் பயிலும் மாணவர்களின் உணவுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. அதில் (இக்லாஸ் எனும்) மனத்தூய்மை இருந்தது. ஆனால், இன்று கூட்டுக் குர்பானி என்பது பணம் சம்பாதிப்பதற்குரிய தொழிலாக மாறிவிட்டது. அதில் ஓரளவு இலாபம் கிடைப்பதால் இயக்கங்களும், தனி நபர்களும் கூட்டுக்


நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

குர்பானிக்காக ஏற்பாடு செய் கிறார்கள். இவர்களுக்கு இலாபமே பிரதானமானது.

கூட்டுக்குர்பானி என்பது தொழில் அல்ல; அது இறை வழிபாடு என்று உணர வேண்டும்.

கூட்டுக் குர்பானியில் சேருகின்றவர்கள் நமக்காக அறுக்கப்படும் மாடு எது? யார் அறுக்கப் போகிறார்? அறுப்ப வருக்கு அதற்குரிய சட்டங்கள் தெரியுமா? அறுக்கும்போது அதற்குரிய துஆக்கள் ஓதப் படுகின்றனவா? என்று எதைப் பற்றியும் பெரும்பாலோர் அறிந்து கொள்ள ஆசைப்படு வதில்லை என்பது வருத்தத்திற் குரிய செய்தியாகும்.

ஆடு குர்பானி கொடுப்ப தற்குரிய பொருளாதாரமும், சூழ்நிலையும் இருந்தும் கூட காசை மிச்சப்படுத்தும் நோக்கத் தில் கூட்டுக்குர்பானியில் சேரு கின்றவர்களையும், கூட்டுக் குர்பானியில்எங்கே குறைவான தொகை நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றது என்று தேடித் திரிவோரையும் என்னவென்று சொல்வது? குர்பானி விஷயத் தில் நூறு, இருநூறை மிச்சப் படுத்தி என்ன செய்ய போகிறார் கள்? கணக்கின்றி வழங்கிய கருணையாளனான அல்லாஹ் வுக்கு கணக்குப் பார்த்து வழங்குவது முறையாகுமா?

## அறுப்பின் துஆ

குர்பானி பிராணியை அறுப்பதற்கு முன்னர்,

إِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوٰتِ وَالْأَرْضَ
حَنِيفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ إِنَّ صَلَاتِي وَ
نُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ لَا
شَرِيكَ لَهُ وَبِذٰلِكَ أُمِرْتُ وَأَنَا مِنَ الْمُسْلِمِينَ
اللّٰهُمَّ مِنْكَ وَلَكَ بِسْمِ اللّٰهِ وَاللّٰهُ أَكْبَرُ

**"இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ :பதரஸ் ஸமாவாதி வல்அர்ள ஹனீ:பன் வமா அன மினல் முஷ்ரிகீன். இன்ன ஸலாதீ வ நுஸுகீ வ மஹ்யாய வமமாதீ லில் லாஹி ரப்பில் ஆலமீன். லா ஷரீக லஹு வ பிதாலிக உமிர்து வஅன மினல் முஸ்லிமீன். அல்லாஹும்ம மின்க வலக."**

என்ற துஆவை ஓதி, "பிஸ் மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறி அறுப்பதோடு, குர்பானிபிராணியை அறுத்துப் பலியிட்டதற்கு பின்னர் குர்பானி கொடுப்பவர்களின் மற்றும் பங்குதாரர்களின் பெயர் களை மேற்கண்ட துஆவோடு இணைத்து கூறிக்கொள்வது மிக ஏற்றமானதாகும்.

நாம் மனத்தூய்மையோடு சிறந்ததையே குர்பானி கொடுத்து இறைவனின் அருளைப் பெறுவோமாக!

ஈத் முபாரக்!

# ஸூஃபிகளின் ஹஜ்

மவ்லவீ **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

தொழுகை, நோன்பு, ஜகாத் போன்ற இஸ்லாமிய இறை வழிபாடுகள் அனைத்தும் அனைவருக்கும் பொதுவானது தான். ஆனால் ஹஜ் அப்படியல்ல.

இஸ்லாமிய மார்க்கத்தில் தன்னை தொடர்ந்து மூழ்கடித்துக் கொண்டவர்களுக்குத் தான் அல்லாஹ் ஹஜ்ஜை நஸீபாக ஆக்குகிறான். அல்லது அவன் தேர்வு செய்தவர்களுக்குத்தான் ஹஜ்ஜை நஸீபாக ஆக்குகிறான்.

ஸூஃபிகள் தங்களுடைய ஹஜ்ஜில், ஹஜ்ஜினுடைய ஃபர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள், முஸ்தஹப் போன்ற இஸ்லாமிய மார்க்கத்தின் வரையறைகள் மிகச் சரியாக இருக்க வேண்டும் என பார்த்துப் பார்த்துச் செய்வார்கள்.

மேலும் ஸூஃபிகள் ஹஜ் செய்கிறபோது உள்ளமும், அறிவும் ஒருங்கிணைந்து அந்த அமலின் மீது ஒன்றி விடுவார்கள். மேலும் அந்த அமலை மிகவும் விருப்பப்பட்டு செய்வார்கள்.

அல்லாஹ்வுக்காக அந்த அமலை செய்கிறோம் என எண்ணி அல்லாஹ்வின் மீது பேரன்பை தமக்குள் உற்பத்தி செய்து கொள்வார்கள். ஹஜ் செய்கிற போது மிக மிக அதிகபட்சமான பேணுதலோடும், இறைவனுக்கு இணை வைத்திடாத வகையிலும் ஓரிறைக் கோட்பாட்டில் உறுதியாக இருந்து செய்வார்கள்.

"இப்ராஹீமுக்கு [கஃபத்துல்லாஹ் எனும் நம்] வீட்டின் இடத்தை நாம் தெளிவுபடுத்திய பொழுது, "எனக்கு எவ்வொருவரையும் நீர் இணை வைக்காதீர். என்னுடைய வீட்டை தவாஃப் செய்கிறவர்களுக்கும், [தொழுவதற்காக] நிற்பவர்களுக்கும், ருகூஉ செய்பவர்களுக்கும், ஸுஜூது செய்பவர்களுக்கும் பரிசுத்தப்படுத்தி வைப்பீராக!" [என்று கட்டளையிட்டோம்]"

- அல்குர்ஆன் (22 : 26)

ஹள்ரத் அபுல் ஹஸன் ஷாதுலி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

"குர்ஆன், ஹதீஸ், நபி ரசூல், ஷைகு போன்றவை வழிகாட்டிய வழியில்தான் நாம் இறைவனைத் தேடி வருகிறோம்.

வேதங்களும், மனிதர்களும் வழிகாட்டிய வழியில் நாம்

இறைவனை அடைந்து கொண்ட தலம்தான் ஹஜ். ஆனால் நம்மில் எத்தனை பேர் ஹஜ்ஜில் இறைவனை அடைந்திருக்கிறோம்?

ஹஜ்ஜின் உண்மையான பொருள் : மனிதனை தூய்மைப் படுத்துவதும், பெருமை, அகங்காரம் போன்றவற்றை அழிப்பதும், "நான்" என்ற சுயநலத்தை அழித்துவிட்டு இறைச் சிந்தனையிலும், இறைக் கட்டளைகளை செய்வதிலும் ஒன்றிணைந்து அதன் மூலம் அவனது தெய்வீக ஒளியில் இணைந்திருப்பது தான் ஹஜ்ஜின் உண்மையான நோக்கம்."

## ஹஜ் வசனங்களின் விளக்கம் :

மர்யம் (அலை) அவர்கள் காலத்தில் நோன்பு நோற்றிருக்கும்போது பேசக் கூடாது என்றும் சட்டம் இருந்தது. அந்த நடைமுறையை அல்லாஹ் நம் சமுதாயத்தினில் ஹஜ்ஜுடைய அமலின்போது கொண்டு வந்து சேர்த்திருக்கிறான்.

"ஹஜ்ஜின்போது வீண் விவாதங்களில் ஈடுபடக் கூடாது"

- அல்குர்ஆன் (2 : 197)

"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமைப் பெறச் செய்து விட்டேன்" - அல்குர்ஆன் (5 : 4)

இஸ்லாத்தின் கடமைகளின் வரிசை, ஹஜ்ஜில் முடிவடைகிறது. இஸ்லாம் மார்க்கம் இத்துடன் முற்றுப் பெறுகிறது.

இதற்கு வலு சேர்க்கும் விதமாக இறைவன் மேற்கண்ட வசனத்தின் மூலம் இஸ்லாம் மார்க்கம் இன்றோடு முடிவுற்று விட்டது என்று சொல்லிக் காட்டுகிறான்.

இஸ்லாம் மார்க்கம் முழுமை பெற்றதாக அறிவித்த நாளை, உலக முஸ்லிம்கள் அனைவரும் அதே நாளில், அதே இடத்தில் ஒன்றுகூடி இன்றும் கொண்டாடி வருகிறார்கள். அதுதான் "அரஃபா" உடைய நாள்.

## காதலன் காதலியை சந்திப்பது போல் ஹஜ்...

"ஹஜ் செய்வதற்காக மக்களுக்கு அறிவியுங்கள்; அவர்கள் நடந்து வருவார்கள்."

- அல்குர்ஆன் (22 : 27)

ஹஜ் பயணம் என்பது தன் முழு அன்பையும் வெளிப் படுத்திக் காட்டும் ஓர் உன்னத, உயரிய பயணமாகும். ஒரு காதலன் தன் காதலியை சந்திப்பதற்கு எவ்வளவு ஆவலோடும், ஆர்வத்தோடும், ஆசையோடும் பயணிப்பானோ அது போன்று ஹஜ்ஜுடைய பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

பல வருடங்கள் வெளிநாட்டில் இருந்து விட்டு, தன் குடும்பத்தினரை பார்க்க வருகிற ஒருவனுடைய உள்ளத்தில்

தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்!

# அல்–அமீன் எத்தீம் கானா

[இளைஞர் நீதிச்சட்டத்தில் பதிவு செய்யப்பட்டது]

அல்–அமீன் நகர், கோ.புதூர், மதுரை – 7.

## மாணவர் சேர்க்கை

- ☑ தாய், தந்தை இழந்த, ஆதரவற்ற, ஏழ்மையான எட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
- ☑ சுகாதாரமிக்க தங்கும் இடவசதியுடன், நல்உணவு, உடை மருத்துவம், தீன் வழி மாறாமல் கட்டுப்பாடான பாதுகாப்புடன் உலககல்வி, முழுமையான மார்க்க கல்வி, தையற்கல்வி, கம்ப்யூட்டர் பயிற்சி என அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்குகிறோம்.
- ☑ தாய், தந்தை பற்றிய விபரங்களுக்கு ஜமாஅத் கடிதமும், குடும்ப அட்டை, ஆதார் அட்டை நகலுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அல்–அமீன் எத்தீம் கானா**

அல்–அமீன் நகர், கோ.புதூர், மதுரை – 7.

மேலும் விபரங்களுக்கு

**98420 21786, 97894 89494**

எவ்வளவு அன்பும், ஆசையும் இருக்குமோ அவ்வளவு அன்பும், ஆசையும் ஹஜ்ஜுடைய பயணத்தை மேற்கொள்வோரின் உள்ளத்தில் இருக்க வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து குடும்பத்தினரை பார்க்க வருகிற ஒருவனுக்கு வழியில் ஏற்படுகிற துன்பங்கள், கஷ்டங்கள் அனைத்தையும் அவன் எந்த வகையிலும் பொருட்படுத்தாமல், குறை சொல்லாமல் பயணிப்பானோ அதுபோல் ஹஜ்ஜுடைய பயணத்தை அவன் மேற்கொள்ள வேண்டும்.

காழி இயாழ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "முகைரா பின் ஹகீம் (ரஹ்) எனும் இறைநேசர் தமது ஹஜ்ஜை நடந்தே வந்து நிறைவேற்றினார்கள். இதனை அறிந்தவர்களும், கேள்விப்பட்டவர்களும் அந்த இறைநேசரை பாராட்டினார்கள்."

அதற்கு அவர், "தன் எஜமானனை விட்டு ஓடிப்போன ஓர் அடிமை வாகனத்தில் வந்தா சந்திப்பான்? நான் மட்டும் தலைகீழாக நடந்து வர சக்தி பெற்றிருந்தால் அவ்வாறே நடந்து வந்து ஹஜ்ஜை முடித்து இருப்பேன்" என்று கூறினார்கள்.

(நூல் : துர்ருல் மன்சூர்)

## லப்பைக்

"ஹஜ் செய்ய வருமாறு மக்களுக்கு நீர் அழைப்பு விடுப்பீராக! [உமது அழைப்பை ஏற்று] அவர்கள் நடந்தும், தொலைதூரப் பகுதிகளிலிருந்து மெலிந்த ஒட்டகங்களின் மீதும் [பயணித்தும்] வருவார்கள்" [என்று நாம் கூறினோம்.]

- அல்குர்ஆன் (22 : 27)

இறைவன் ஹஜ்ஜுக்கு அழைப்பு விடுக்கச் சொன்னதும் இப்ராஹீம் (அலை) அவர்கள், "இறைவா! எனது சப்தம் அனைத்து மக்களையும் எப்படி சென்றடையும்?" என்று கேட்டார்கள்.

அதற்கு இறைவன், "உமது அழைப்பை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்ப்பது என் கடமை" எனக் கூறினான்.

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் அறிவிப்பு செய்ததும் அந்த அறிவிப்பை வானம், பூமியில் வாழ்ந்த அனைத்து உயிரினங்களும், இன்னும் பிற வஸ்துகளும் கூட கேட்டன.

நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் அழைப்பை செவியேற்ற அனைவரும் 'லப்பைக்' எனக் கூறினார்கள்.

யாருக்கு ஹஜ்ஜை அல்லாஹ் நஸீபாக்கினானோ அவர்கள் இந்த அழைப்பிற்கு 'லப்பைக்' என பதில் கூறினார்கள்.

இந்த அழைப்பை கேட்டு ஒரு முறை 'லப்பைக்' எனக்கூறியவர் ஒரு முறையும், இரண்டு முறை 'லப்பைக்' எனக் கூறியவர் இரண்டு முறையும், அளவின்றி 'லப்பைக், லப்பைக்'

என சொல்லிக் கொண்டே இருந்தவருக்கு பல ஹஜ், உம்ரா செய்கின்ற பாக்கியத்தை யும் அல்லாஹ் வழங்கினான்.

அந்த வகையில் நாம் எத்தனை ஹஜ் , உம்ரா செய்து இருக்கிறோம் என்பதை கருத்தில் கொண்டு நாம் அத்தனை முறை ஆலமுல் அர்வாஹில் இருக்கும் போது 'லப்பைக்' சொல்லி இருக்கின்றோம் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

(நூல் : துர்ருல் மன்சூர், அல் இத்திஹாஃப்)

## ஏன் எதற்கு என கேட்காதே!

அபூயஜீதுல் பிஸ்தாமீ (ரஹ்) அவர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஈரானின் வடபகுதியில் அமைந்துள்ள தனது வீட்டில் இருந்து 2500 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மக்காவிற்கு ஹஜ் செய்ய புறப்பட்டார்.

நகரங்கள், கிராமங்கள், ஆங்காங்கே அமைந்துள்ள தனி வீடுகள் என செல்லும் வழி நெடுகிலும் தனக்கான ஷைகை தேடிக்கொண்டே சென்றார்.

இறுதியில் ஒரு நகரத்தில் கண் தெரியாத, வயதான ஒரு ஷைஹை கண்டறிந்தார்.

அபூ யஜீதுல்பிஸ்தாமீ (ரஹ்) அவர்கள் அந்த ஷைஹிடம் , "நான் ஹஜ்ஜுக்கு செல்கிறேன்; அந்த அமல் சார்ந்த நுட்பமான தகவல்களை எனக்கு சொல்லித் தாருங்கள்" எனக் கேட்டார்.

ஷைஹு அவர்கள், "நீங்கள் என்னை ஏழு முறை தவாஃப் - சுற்றி வாருங்கள்; இது ஹஜ்ஜை விட சிறந்தது. உங்கள் கடமை நிறைவேறிவிட்டது. உங்கள் பயணத்தின் நோக்கம் முழுமை பெற்றுவிட்டது நீங்கள் தூய்மை அடைந்து விட்டீர்கள்" என்று கூறினார்கள்.

அபூயஜீதுல் பிஸ்தாமீ (ரஹ்) அவாகள் ஏன் எதற்கு என்று கேட்காமல் அவர்களை சுற்றி வர எத்தனித்தார்கள். ஷைஹு அவர்கள் "நில்!" என்று சொல்லி விட்டு,

"நான் சொன்னதும் ஏன்? எதற்கு? என்று கேட்காமல் என்னை சுற்றி வர எத்தனித்தது போல், நீங்கள் ஹஜ்ஜுடைய அனைத்து வகை வகையான செயல்களையும் செய்து வர வேண்டும். இப்படி செய்ய வேண்டும் என்பது இறைவனின் உத்தரவும், இறைதூதரின் வழிகாட்டுதலும் ஆகும்.

அல்லாஹ் மற்றும் ரசூலின் வழிகாட்டுதலுக்கு இதா அத் - கட்டுப்படுவது மட்டுமே இங்கே உயர்ந்த அமலாக கருதப்படுகிறது.

கஃபாவிற்குள் யாரும் அவ்வளவு எளிதாக நுழைந்து விட முடியாது. அவ்வாறுதான் ஒவ்வொரு மனிதனின் உள்ளமும்.

கஃபாவிற்குள் நபிமார்கள் மற்றும் உலகின் ஆக சிறந்தவர்

கள் மட்டுமே நுழைவது போல், நமது உள்ளத்திற்குள்ளும் அல்லாஹ் மற்றும் அவனுடைய கடமைகள் மட்டுமே நுழைந்து பதிந்திருக்க வேண்டும்" என்று கூறினார்கள்.

அபூயஜீதுல்பிஸ்தாமீ (ரஹ்) அவர்கள் பிறகு தம் ஹஜ் பயணத்தைத் தொடங்கினார்கள்.

(நூல் : மஸ்னவீ ஷரீஃப்)

## ஹஜ் எதற்கு செய்கிறார்கள்?

"ஒரு மனிதன் செய்த பாவங்கள் அவன் செய்த ஹஜ்ஜின் காரணமாக அழிக்கப்படுகின்றன" என நாம் நம்புகிறோம்.

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் செய்த பாவங்கள் அழிக்கப்படுவதற்கு தான் ஹஜ் மேற்கொள்ளப்படுகிறதா? என்றால் இங்கே சில கேள்விகள் எழுகின்றன.

பாவங்கள் செய்த வசதியானவர்கள் ஹஜ் செய்து தம் பாவங்களை அழித்துக் கொள்வார்கள். வசதி இல்லாத ஏழைகள் என்ன செய்வார்கள்?

மேலும் ஒரு மனிதனின் பாவங்கள் அழிக்கப்படுவதற்கும் ஒரு மனிதனின் நிதி நிலைமையும் காரணமாக இருக்கிறது என தெரிய வருகிறது. இது எப்படி சமத்துவமாக ஆகும்?

செல்வந்தர்கள் உடனே ஹஜ் செய்து தம் பாவங்களை அழித்து விடுவார்கள். ஏழைகள் தம் பாவங்களை சுமந்து கொண்டே சாக வேண்டுமா?

ஹஜ்ஜின் நோக்கம் பாவம் அழிக்கப்படுவது தான் என்றால் இதில் இறை நீதி எங்கே இருக்கிறது? என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

உண்மையான ஹஜ்ஜின் நோக்கம், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போலவும், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போலவும், ஹாஜரா அம்மையாரை போலவும், தன்னையே இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணித்து விடுவது தான் நோக்கம்.

ஹரம் எனும் புனிதத் தலத்தில் அவனைத் தேடி அலைந்து அவனை அடைவதுதான் ஹஜ்ஜின் உண்மையான நோக்கம்.

பாவங்கள் அழிக்கப்படுவது, நன்மைகள் அதிகமாகக் கிடைப்பது போன்றவை யாவும் இரண்டாம் தரமான வெகுமதிகள் தாம்.

அன்று முதல் இன்று வரை இஸ்லாம் மார்க்கத்தின் பல கருத்துக்களின் உண்மையான நோக்கம் மழுங்கடிக்கப்பட்டு மறைந்தே கிடக்கின்றது. அவை நம்மிடம் இரகசியமாக ஒரு காலத்தில் ஒப்படைக்கப்பட்ட உண்மைகள். ஆனால் இன்று அவை அலட்சியமாக விடப்பட்டு விட்டன. அப்படி ஒரு கருத்து தான் ஹஜ்ஜின் மூலம் இறைவனை அடைவது.

(நூல் : The Heart of Islam)

# இறைஇல்லம் விசாலமடைய உதவி செய்யுங்கள்

அல்லாஹ்வின் கிருபையால் சென்னை, முகப்பேர் ஏரி ஸ்கீம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பேத்கார் நகர், 1வது தெரு, கதவு எண்.1, முகப்பேர் கப்ருஸ்தான் பின்புறம் ஒரு சிறிய இடத்தில் மஸ்ஜிதுன் நூர் & மதரஸா சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

இந்த பள்ளிவாசலில் அம்பேத்கார் நகர், முகப்பேர் ஏரி ஸ்கீம் பகுதிகளிலிருந்து மக்கள் தொழுகைக்கு வருகிறார்கள். இங்கு முதியவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், ஸ்கூல் படிப்புடன் ஹிஃப்ழு மதரஸாவில் ஓதக் கூடியவர்களுக்கும் குர்ஆன் முழுமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தொழுகையாளிகளுக்கு தற்போதுள்ள பள்ளிவாசலின் இடம் போதுமானதாக இல்லை. இப்பொழுது இருக்கும் பள்ளியை ஒட்டியே 600 சதுரடி இடம் ரூபாய் 36 இலட்சத்தில் விலைக்கு வந்திருக்கிறது. நல்லுள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்விற்காக அதிகம் உதவி செய்யுங்கள். ஸதக்கத்துல் ஜாரியாவின் வகையில் நாம் மரணித்த பிறகும் நன்மை வந்து கொண்டேயிருக்கும்.

இறைவனின் வீட்டை கட்ட நீங்கள் சம்பாதித்த பணத்தை நீங்கள் இருக்கும்போதே உங்கள் கையால் உதவி செய்து இறைவனின் அன்பளிப்பான சொர்க்கத்தை பெறுவதற்கு முன்வாருங்கள்.

**பணம் அனுப்புபவர்கள் எமது கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி விட்டு அவசியம் தகவல் தாருங்கள்.**

தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் **நூர் முஹம்மது ஆமிரி : 9444273674**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
A/C No. : **1289135000013292**
G-pay No. : **9444273674**
Bank Name : **KARUR VYSYA BANK**
Branch : **ARUMBAKKAM**
IFSC Code : **KVBL0001289**
SWIFT Code : **KVBLINBBIND**

# ஹஜ்
# ஓர் அழைப்பு மையம்

ஹஜ்ஜில் இரண்டு வகை தாவா - அழைப்பு பணி இருக்கின்றன.

1. நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் உலக மக்கள் அனைவரையும் ஹஜ்ஜுக்கு வரும்படி அழைப்பு கொடுத்தார்கள்.

   அந்த வகையில் தான் முதல் அகபா உடன்படிக்கையின் போது ஹஜ்ஜுக்கு வந்திருந்த ஆயிரமாயிரம் நபர் களில் ஆறு பேர் மட்டும் நபிகளாரின் தாவா - அழைப்பை ஏற்று இஸ்லாத்தில் இணைந்தார்கள்.

   நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது 1,24,000 பேர் கலந்து கொண்டார்கள்.

2. நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்திருந்த இலட்சோப இலட்ச மக்களை பார்த்து "இன்றைய தினம் நான் இஸ்லாம் மார்க்கத்தை முழுமையாக உங்களிடம் அறிவித்து விட்டேன்; நீங்கள் அனைவரும் உலக மக்கள் அனைவருக்கும் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டார்கள்.

அதனால் ஸஹாபாக்கள் அனைவரும் உலகம் முழுவதும் பரவிச் சென்று இஸ்லாம் மார்க்கத்தை மக்களிடையே பரப்பினார்கள்.

ஹள்ரத் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஜ்ஜுக்கு வரச் சொன்னார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜில் இருந்து போகச் சொன்னார்கள்.

எனவே ஹஜ்ஜின் மூலம் உலக மக்கள் அனைவருக்கும் இஸ்லாம் சென்றடைய வேண்டும் என்பதே இந்த ஹஜ் எனும் இபாதத்தின் நோக்கம்.

இன்று ஹஜ் செய்கிற ஒவ்வொருவர் மூலமாகவும் இஸ்லாம் மற்றவர்களை சென்றடைய வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

## இப்படியும் சில இறைநேசர்கள் :

சில இறை நேசர்கள் துல்ஹஜ் மாதத்தின் ஹஜ்ஜுடைய ஐந்து நாட்கள் தொடங்கிய பிறகு தல்பியாவை அடிக்கடி சொல்லிக் கொண்டு மிகவும் பேணுதலாக தமது ஊரில் வாழ்ந்திருப்பதாக சில நிகழ்வுகள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன.

மவ்லானா ஸையத் ஹுஸைன் அஹமத் மதனீ (ரஹ்) அவர்களிடம் அவர்களின் முரீதீன்களில் ஒருவர் துல்ஹஜ் பிறை எட்டு அன்று அத்தர் பாட்டிலை கொடுத்து, "தாங்கள் அத்தர் பூசிக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

அதனை பெற்றுக் கொண்ட மவ்லானா அவர்கள் தம்மீது அத்தரை பூசிக்கொண்டே நீண்ட பெருமூச்சை விட்டு, "இன்றைய தினம்தான் ஹாஜி களும், ஹஜ்ஜில் உள்ள இறை நேசர்களும் நறுமணம் பூசுவதி லிருந்து விலக்கப்பட்ட தினம்" என்று கூறினார்கள்.

எவருடைய உள்ளத்தில் இறையன்பு இருக்குமோ அவர் மக்காவிலிருந்து தொலைவில் வாழ்ந்தாலும் அங்கிருப்பது போன்ற கற்பனையில் மூழ்கி இருப்பார்.

ஒரு சில இறைநேசர்கள் துல்ஹஜ் மாதத்தின் தொடக்கத் திலிருந்து பிறை பத்து வரை அவ்வப்பொழுது தல்பியா சொல்லிய வண்ணம் இருந்திருக்கிறார்கள்.

இவர்கள் ஹஜ்ஜுடைய தலங்களில் இல்லாவிட்டாலும் தாம் இருக்கின்ற இடத்தில் ஹஜ்ஜுடைய காலங்களில், பேண வேண்டிய நடைமுறை களை பேணி வாழ்ந்திருக்கிறார் கள் என்பதை காணும் போது அவர்களுடைய இறை யச்சத்தின் உயர்ந்த நிலையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. (நூல் : மஜாலிஸே ஹகீமுல் இஸ்லாம்)

## ஹஜ்ஜில் பேணுதல் அவசியம்

இஸ்லாமிய மார்க்கத்தின் அனைத்து வகை அமல்களை யும் பின்பற்றி நடப்பதில் சில ஒழுக்க வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

ஹஜ்ஜுடைய அமலை நிறைவேற்றுவதற்கு முன்பு அதன் ஒழுக்க முறைகளை தெளிவாகத் தெரிந்து கொண்டு அதனை பேணுதலாக நடை முறைப்படுத்த வேண்டும்.

மவ்லானா ஷா அப்துல் அஜீஸ் திஹ்லவீ (ரஹ்) அவர்கள் "தஃப்ஸீரே அஜீஜி" என்கின்ற தமது நூலில் கூறுகிறார்கள்.

எந்த ஒரு மனிதன் ஒழுக்க முறைகளைப் பேணுவதில் அலட்சியமாக இருப்பானோ அவன் சுன்னத்தான விஷயங் களைப் பின்பற்றி நடப்பதி லிருந்தும் தூரமாகிவிடுகிறான்.

சுன்னத்துகளை பின்பற்றி நடப்பதில் அலட்சியமாக இருந்தால் அவன் ஃபர்ளுகளை விட்டு விடும் துர்பாக்கியம் உண்டாகும்.

ஃபர்ளுகளை நிறைவேற்று வதில் அலட்சியமாக இருந்தால் அவன் மஃரிபத் எனும் ஞான விஷயங்களை அறிவதி லிருந்து தூரமாக்கப்படுவான்."

அதனால்தான் சில செயல் களைப் பற்றி ஹதீஸ்களில் குஃப்ர் என சொல்லப்பட்டு இருக்கிறது. ஏனெனில் மேற் கூறிய வகையில் அவை குஃப்ர் வரை மனிதனை இழுத்துச் சென்று விடுகின்றது. அதனால்

தான் ஷரீஅத்தின் ஒவ்வொரு கட்டளையையும் நடைமுறை படுத்தும்போது பேணுதல் காட்டுவது மிக அவசியமாக இருக்கின்றது.

ஏதேனும் இயலாமை போன்ற காரணங்களால் அவற்றையெடுத்து நடக்க முடியாமல் போனால் அவற்றின் மீதுள்ள கண்ணியமும், மகத்துவமும் உள்ளத்திலிருந்து கொண்டிருக்க வேண்டும். அலட்சியமாகவோ, வீண் என்றெண்ணியோ அவற்றை ஒருக்காலும் விட்டு விடக் கூடாது. (நூல்: தஃப்ஸீரே அஜீஜி)

## உலகத்தின் இறுதி ஹஜ்

நபி (ஸல்) அவர்கள் தாம் ஹஜ்ஜுக்குச் சென்ற சமயம் தங்களின் மனைவிமார்களிடம், "இதுவே நீங்கள் செய்யும் ஹஜ்ஜாகும். இதற்குப் பிறகு உங்கள் வீட்டு பாய்களின் மீது நீங்கள் இருக்கவேண்டும்." எனக் கூறினார்கள். (நூல்: திர்மிதீ)

இந்த ஹதீஸின் காரணமாக உம்மஹாத்துல் முஃமினீன் ஜைனப் (ரளி) அவர்களும், ஸௌதா (ரளி) அவர்களும் இதற்குப் பிறகு ஒரு ஹஜ்ஜும் செய்யவில்லை.

"நபி (ஸல்) அவர்களின் இந்த அருள் மொழியை நாமே நேரில் கேட்டிருக்க, பிரயாணத்திற்காக வீட்டை விட்டு எப்படி வெளிக் கிளம்புவது?" என்று கூறி அவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்லவில்லை.

ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மற்ற மனைவியர் கீழ்காணும் ஹதீஸ்களின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஹஜ், உம்ரா செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :-

"வயதானவர், பலவீனர், பெண்கள் ஆகியோரின் ஜிஹாத் ஹஜ்ஜாகும்"

(நூல்: திர்மிதீ)

ஸூஃபிகளில் சிலர் தம் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே ஹஜ் செய்தவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே ஹஜ் செய்து இருக்கிறார்கள் என்பதே அவர்கள் கூறும் காரணம்.

அதே சமயம் இவர்கள் அடிக்கடி மக்காவிற்கு செல்வார்கள். உம்ரா செய்வார்கள். அதிகமாக தவாஃப் செய்வார்கள். மக்காவில் தங்கி இருப்பார்கள்.

அதே சமயம் வேறு சில ஸூஃபிகள் பல ஹஜ்ஜுகளை செய்திருக்கிறார்கள். பல ஹஜ்ஜுகளை செய்த ஸூஃபிகள், "ஹஜ் செய்வதற்காக மீண்டும் மீண்டும் இஹ்ராம் ஆடையை

அணியும்போது உடலிலும், உள்ளத்திலும் உள்ள ஆசை களை அகற்றி விடுகிறோம்; அதனாலேயே மீண்டும் மீண்டும் ஹஜ்ஜுகளை செய் கிறோம்" எனக் கூறுகிறார்கள்.

சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் கஃபாவை ஒரு அப்தால் மற்றும் ஒரு அவ் தாத் தவாஃப் செய்கிறார்கள்.

அப்தால், அவ்தாத் எனும் சொல் இறைநேசர்களின் படித் தரத்தை குறிக்கும். இவ்வாறான இறைநேசர்கள் கஃபாவிற்கு வருவது நின்று போனால், அன்றிலிருந்து ஏழு வருடங் களில் கஃபா வானத்திற்கு உயர்த்தப்பட்டுவிடும்.

பின்னர் குர்ஆன் உயர்த்தப் படும். அதற்குப் பிறகு மனித இதயங்களிலுள்ள திரு குர்ஆன் வசனங்கள் உயர்த்தப்படும். அதற் கும் பிறகு ஹஜருல் அஸ்வது கல்லும், மகாமு இப்ராஹீம் கல்லும் உயர்த்தப்பட்டுவிடும்.

(நூல் : அல் மல்ஸூ அதுஸ் ஸூஃபியா)

செல்வந்தர்கள் விரைந்து ஹஜ்ஜு செய்து கொள்ளுங்கள். ஏழைகள் ஹஜ்ஜு செய்ய அதிக மதிகம்துங்களுக்குள் ஆசைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். இறைவன், தான் நாடுவோரை தன் இறையில்லத்தை தரிசிக்க அழைத்துச் சென்று விடுவான்.

அல்லாஹு அக்பர்!


ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S. ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.

செல் : 9944001362

# நுகர்ந்தவை

நூல் : சரித்திரச் சாலையில் மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லாஹ் (ரஹ்)

ஆசிரியர் : "வரலாற்றுப் பேரறிஞர்" "தாரிகுல் மில்லத்" **செ.திவான்** M.A.,M.Phil.,

பக்கங்கள் : **112;** விலை : ரூ.**120/-**

வெளியீடு : **ரெகான் - ரய்யா பதிப்பகம்,**
106F, 4A, திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002. அலைபேசி : 9080330200

கீழக்கரையைப் பற்றி சுமார் ஆறு நூல்களும், சீதக்காதி கொடை வள்ளல் குறித்து பத்துக்கும் மேற்பட்ட நூல்களும் வெளியாகியுள்ளதைப் பற்றியும், பீர் முஹம்மது அப்பா (ரஹ்) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நேரில் காண மஹான் சதக்கத்துல்லாஹ அப்பா (ரஹ்) அவர்கள் காயல்பட்டிணத்திலிருந்து தக்கலை வந்து பீர் முஹம்மது அப்பா (ரஹ்) அவர்கள் செய்து காட்டிய அற்புதங்களைப் பார்த்து, இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா (ரஹ்) அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்த செய்தியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

ஓர் அரபி நூலில் தவறாக எழுதப்பட்டிருந்த வாசகத்தை மஹான் சதக்கத்துல்லாஹ் (ரஹ்) அவாகள் சரியாகத் திருத்தி எழுதியதை பெரியார் "ஷைகுல் இஸ்லாம்" அவர்கள் அறிந்து, அவர்களின் இயற்பெயரான "சதக்" என்பதை "சதக்கத்துல்லாஹ்" என்று அழைத்து மகிழ்ந்தார்கள் என்ற நற்செய்தி நவிலப்பட்டுள்ளது.

மழையைக் கொண்டுவரும் மலக்கு ஹஸ்ரத் மீக்காயீல் (அலை) அவர்கள் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களிடம் உரையாடிய விந்தை நிகழ்வு வியந்துரைக்கப்பட்டுள்ளது. கண்மணி நாயகம் (ஸல்) அவாகளைப் புகழ்ந்து "கஸீதத்துல் வித்ரிய்யா" என்ற பாடல்களைப் பாடியதால் "மாதிஹுர் ரசூல் - ரசூல் (ஸல்) அவர்களைப் புகழக்கூடியவர்" என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்ற விஷயம் சிலாகிக்கப்பட்டுள்ளது. சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் ஆசிரியரான சின்னீனா லெப்பை ஆலிம் அவர்களின் குழந்தைப் பருவத்தில் நடந்த மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதத்தை விண்டுரைக்கும் வியப்பான நூல் இது!

"வரலாற்றுப் பேரறிஞர்" செ.திவான் அவர்கள் எழுத்துலகில் பல அற்புதங்களைச் செய்து வருகிறார். அந்த வரிசையில் இந்நூல் ஓர் அற்புதமான அருமையான நூல்!

ஆய்வு : பாவா

# நுண்கிருமிகள் (Bacteria)

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

"வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும், இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையவர்களுக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன."

- அல் குர்ஆன் (3:190)

இத்தகையவர்கள் (தாங்கள்) நின்ற நிலையிலும், இருப்பிலும், படுக்கையிலும் அல்லாஹ்வையே நினைத்து வானங்களையும், பூமியையும் அவன் படைத்திருப்பதை ஆராய்ச்சி செய்வார்கள். மேலும் எங்கள் இறைவனே! நீ இவற்றை வீணாகப் படைக்கவில்லை; நீ மிகத் தூயவன். (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களை நீ காப்பாற்றுவாயாக!

-அல் குர்ஆன் (3:191)

நம் கண்களுக்குத் தெரியாத நுண் கிருமிகளின் உதவியின்றி, பூமியில் வாழ்தல் சாத்தியமில்லை.

ஒரு நுண்கிருமியின் அளவு 2 முதல் 3 மைக்ரான்; மிகப் பெரியது 750 மைக்ரான். (1 மைக்ரான் = ஒரு மில்லி மீட்டரின் ஆயிரம் பகுதியில் ஒன்று. -1/1000 மில்லி மீட்டர்)

பூமியில் இடம் பெறுகின்ற அனைத்து கழிவுப் பொருட்களும் சிதைந்து அழுகிப் போன பின், அவை காணாமல் போவதற்கு உதவும் அத்தியாவசியப் பணிகளை நுண்கிருமிகள் மேற்கொள்கின்றன. பூமி தூய்மையடைகிறது.

நுண்கிருமிகள் கழிவுகளின் ஒவ்வொரு பகுதியையும் சிதைத்து, தூய்மைப்படுத்தி சிறு சிறு கனிமங்களாக (minerals) மாற்றி விடுகின்றன. உப்பாகவும், நிலக்கரியாகவும் கிடைக்கின்றன. உணவுப் பொருட்களிலும், தண்ணீரிலும் அவை பொதிந்துள்ளன.

நுண்கிருமிகள் தண்ணீரைத் தூய்மைப்படுத்துகின்றன. பூமியைச் செழிப்பாக்குகின்றன. வைட்டமின்களை உற்பத்தி செய்கின்றன. பயனுள்ள சர்க்கரை மற்றும் மாவுப் பொருட்கள் (carbohydrates)

ஆகியவற்றைத் தருகின்றன. நமது உடலை உறுதிப்படுத்தத் தேவையான நியூக்ளியோடைட்ஸ் (nucleotides) என்ற இரசாயன பொருட்களை வழங்குகின்றன. (அமைனோ அமிலம், சர்க்கரை வகைகள், பாஸ்பேட் பொருட்கள் ஆகியன) நமது உணவில் பொதிந்துள்ள நுண்கிருமிகளை அழிக்கின்றன. மேலும், பூமிக்கு இன்றியமையாத நைட்ரஜன் வாயு சுழற்சியை நிர்வகிக்கும் உயர் பணியை நிர்வகிக்கின்றன.

காற்றிலிருந்து நைட்ரஜனை எடுத்துத்தான் மேற்கூறப்பட்ட இரசாயனப் பொருட்களாக மாற்றித் தருகின்றன. இந்த வியத்தகு பணியை, மனிதன் உட்பட எந்த உயிருள்ள பொருளாலும் செய்யவே முடியாது.

மிக எளிதாக நுண்கிருமிகள் ஆற்றும் இப்பணி 500 டிகிரி வெப்பம் மற்றும் மிகுந்த அழுத்தம் கொடுத்தும் நுட்பமான செயல்முறைகள் மூலம் இப்பணி நிறைவேற்றப்படலாம். ஆனால் நுண்கிருமிகள் சில நொடிகளில் நிறைவேற்றி விடுகின்றன!

இன்னும் ஓர் அரிய பணியை நுண்கிருமிகள் செயல்படுத்துகின்றன. நாம் சுவாசிக்கும் இன்றியமையாத பொருளான பிராணவாயுவை உற்பத்தி செய்வது தான் அது. ஒளிச் சேர்க்கை மூலம் இதைச் செய்கின்றன.

கடலில் காணப்படும் நுண்கிருமிகளில் படரும் பாசி (algas) சைனோபாக்டீரியா (cyno bacteria) என்ற நுண்கிருமிகள் ஆகியன நிறைந்து காணப்படுகின்றன.

இவை ஆண்டுதோறும் 150 பில்லியன் கிலோகிராம் அளவு பிராண வாயுவை பூமிக்கு வழங்குகின்றன. (1 பில்லியன் =100 கோடி)

அல்லாஹ்வின் மிக நுண்ணிய படைப்பின் ஆற்றல்களைக் கண்டு நாம் வியந்து போகிறோம்! அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

"மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்[றில் உள்ளவற்]றை அவனையன்றி வேறெவரும் அறியமாட்டார். நிலத்திலும், நீரிலும் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் அறியாமல் யாதொரு இலையும் உதிருவதில்லை. பூமியில் [ஆழத்தில்] அடர்ந்த இருளில் [புதைந்து] கிடக்கும் [கடுகு போன்ற சிறிய] வித்தும் பசுமையானதும், உலர்ந்ததும் அவனுடைய தெளிவான [பதிவுப்] புத்தகத்தில் இல்லாமலில்லை."

- அல் குர்ஆன் (6 : 59)

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தி **அஹ்மதுல்லாஹ்** காஷிஃபீ காஸிமீ

## மிஸ்வாக் செய்வதின் சிறப்புகள்

1. நான்கு காரியங்கள் நபிமார்களின் வழிமுறையைச் சார்ந்தவை. (i) விருத்தசேதனம் செய்வது (ii) நறுமணம் பூசுவது (சுத்னா செய்வது) (iii) மிஸ்வாக் செய்வது (iv) திருமணம் செய்வது.
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஅய்யூப் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ - 1080)

2. மிஸ்வாக் (குச்சி) வாயை சுத்தப்படுத்தக் கூடியது. அல்லாஹு தஆலாவின் திருப்திக்குரிய சாதனமாகும்.
அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : நஸயீ 5 பாகம் - 1)

3. மிஸ்வாக் செய்வது மரணத்தைத் தவிர அனைத்து நோய்களுக்கும் நிவாரணமாகும். அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : கன்ஜுல் உம்மால் 26161)

4. உங்களில் எவரேனும் இரவு நேரத்தில் தொழுகைக்காக எழுந்தால் மிஸ்வாக் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் ஓர் அடியார் மிஸ்வாக் செய்து தொழுகையில் நிற்கும்போது ஒரு வானவர் அவருக்குப் பின்னால் நின்று கொண்டு அவர் ஓதுவதை கவனமாகக் கேட்கிறார். பின்பு அவ்வானவர் அவருக்கு மிகவும் சமீபமாகி தமது வாயை அவருடைய வாயோடு சேர்த்து விடுகிறார். தொழுபவரின் நாவிலிருந்து வெளிப்படும் குர்ஆனின் வார்த்தை நேராக வானவரின் வயிற்றுக்குள் சென்று விடுகிறது. எனவே நீங்கள் குர்ஆன் ஓதுவதற்காக உங்கள் வாய்களை சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல் : முஸன்னஃப் இப்னு அபீஷைபா 202 (18), பாகம் - 1, பக்கம் - 5, பஸ்ஸார் 603)

5. மிஸ்வாக் செய்வதில் சோம்பல் கொள்ளாதீர்கள். அதை பேணுதலாகக் கடைபிடித்து வாருங்கள். அதில் இறை பொருத்தம் இருக்கிறது. தொழுகையின் நன்மையை 99 மடங்கு அதிகமாக்கி விடுகிறது. அறிவிப்பாளர் : ஹள்ரத் அலீ (ரளி), ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி), ஹள்ரத் அதா (ரளி) ஆகியோர் (நூல் : மராகில் ஃபலாஹ், பக்கம் - 32)

6. மிஸ்வாக் செய்து இரண்டு ரக்அத்துகள் தொழுவது மிஸ்வாக் செய்யாமல் எழுபது ரக்அத்துகள் தொழுவதை விட சிறந்ததாகும். அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : பஸ்ஸார், மஜ்மஉஜ்ஜவாயித் 2554, பாகம் - 2)
7. பற்களை நன்றாக மிஸ்வாக் செய்யாவிட்டால் பற்கள் பாதிப்படையும். வானவர்கள் அருவருப்படைவார்கள்.
8. எவர் மிஸ்வாக் செய்து வீட்டிலிருந்து வெளியேறுகிறாரோ வானவர்கள் அவரின் பாவ மன்னிப்பிற்காக துஆ செய்கிறார்கள். (நூல் : மராகில் ஃபலாஹ், பக்கம் 38)
9. மிஸ்வாக் செய்வதால் தொழுநோய், வெண் குஷ்டம் போன்ற கொடிய நோய்கள் வேரோடு அழிந்துவிடும்.
(நூல் : ரத்துல் முஹ்தார், பாகம் - 1, பக்கம் - 85)
10. மிஸ்வாக் செய்வது பாதி ஈமான்.
(நூல் : இத்ஹாதுஸ் ஸஆதாஹ், பக்கம் - 350, பாகம் 2)

## மிஸ்வாக் செய்யும் நேரங்கள்

**1. ஒளு செய்யும்போது**

நபி (ஸல்) அவர்கள் இரவிலோ, பகலிலோ எப்பொழுது விழித்தாலும் ஒளு செய்வதற்கு முன் அவசியம் மிஸ்வாக் செய்வார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்
(நூல் : அபூதாவூத் 57, பக்கம் - 88)

ஒளு செய்ய ஆரம்பிக்கும்போதும் அல்லது வாய் கொப்பளித்த பின்பும் மிஸ்வாக் செய்யலாம். மிஸ்வாக் செய்வதால் யாருடைய பற்களிலிருந்து இரத்தம் கசியுமோ அவர் ஒளுவின் ஆரம்பத்திலும் மற்றவர்கள் வாய் கொப்பளிக்கும் போதும் செய்து கொள்வது ஏற்றமானதாகும்.

**2. தொழும் முன்பு**

மிஸ்வாக் செய்து தொழுவது மிஸ்வாக் செய்யாமல் தொழுவதை விட 75 மடங்கு மேன்மையானது.
(நூல் : தர்கீப் வத்தர்ஹீப் 336)

சில ஹனஃபீ மார்க்க வல்லுனர்கள் தொழும் முன் மிஸ்வாக் செய்வதை, விரும்பத்தகுந்தது என கூறுகிறார்கள். எனவே, தொழும் முன் மிஸ்வாக் செய்பவர்கள் பற்களிலிருந்து இரத்தம் கசியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இமாம் ஷாஃபியீ (ரஹ்) அவர்கள் தொழும் முன் மிஸ்வாக் செய்வதை சுன்னத் எனக் கூறுகிறார்கள். (தொடரும்)

தொடர்-10

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

**சௌகரியங்கள் செய்தல்**

டெல்லி மக்களைத் தண்டிக்க வேண்டுமென்று முஹம்மது பின் துக்ளக் எண்ணியிருந்தால் அதற்குரிய கிரையத்தைக் கொடுத்து அந்த வீடுகளை வாங்கியிருக்க மாட்டார். டெல்லியிலிருந்து மக்கள் தேவகிரிக்குச் சென்ற போது அவர்களுக்குத் தேவை யான சௌகரியங்களைச் செய்து கொடுத்தார் முஹம்மது பின் துக்ளக்.

**ஏற்க முடியாது**

முஹம்மது பின் துக்ளக்கைத் தாக்கி எழுதப் பட்ட கடிதங்கள் தலைநகரை மாற்ற முடிவெடுத்த பிறகு ஒரு வேளை எழுதியிருக்கக்கூடும். அதற்கு முன்னர் எழுதப் பட்டவை என்பதனை ஏற்க இயலாது. கடிதம் எழுது வதற்கும் நியாயமுமில்லை. எனவே, டெல்லி மக்களைத் தண்டிப்பதற்காகத் தலைநகரை மாற்றினார் என்பதனை நாம் ஏற்க முடியாது.

**இசால்மியின் பொய்க்கூற்று**

டெல்லி மக்களின் நடத்தை மீது முஹம்மது பின் துக்ளக் சந்தேகம் கொண்டார். எனவே அவர்களை மகாராஷ்டிரத் திற்கு துரத்திவிட முடிவெடுத் தார் என்று இசால்மி கூறுகிறார். இசால்மியின் இக்கூற்றையும் நாம் ஏற்பதற்கில்லை. பொய்யே நிறைந்துள்ளது என்பதனை அவர் எழுதிய குறிப்புக்களைப் படிக்கிறபோதே தெளிவாக நாம் உணரலாம்.

**பரணியின் பொய்க்கூற்று**

டெல்லிப் பேரரசு தென் னிந்தியாவிலும் பரவியிருந்தது. டெல்லியிலிருந்து அவற்றைக் கட்டுப்படுத்துவது சிரமம். எனவே, பேரரசின் மையப்பகுதியிலுள்ள ஓரிடத் தில் தலைநகரை மாற்றி ஆட்சி யைத் திறம்பட நடத்திட முஹம்மது பின் துக்ளக் முடி வெடுத்தார். தேவகிரியிலிருந்து டெல்லி, குஜராத், லக்னோதி, சத்காவ்ன் திலங், மாபார், துவாரசமுத்திரம், கம்பிலா ஆகியவை சமதூரத்தில் இருந் தன. எனவே தலைநகரை தேவகிரிக்கு மாற்றிட முஹம்மது பின் துக்ளக் முடிவு செய்தார் என்கிறார் பரணி.

**சம தூரத்தில் இல்லை**

பரனி குறிப்பிடும் இடங்கள் யாவும் தேவகிரிக்குச் சம தூரத்தில் இருப்பதாக குறிப்பிடுவது அவர் இந்தியாவின் புவியமைப்பைப் புரியவில்லை, தெரியவில்லை என்பது தெளிவாகிறது.

**தேவகிரியிலிருந்து டெல்லியை எப்படிக் கட்டுப்படுத்துவது?**

டெல்லியிலிருந்து தேவகிரியைக் கட்டுப்படுத்தி வர இயலவில்லை என்றால் தேவகிரியிலிருந்து டெல்லியைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு இலகுவாகும். கடினமல்லவா?

**மாலிக் காபூர்** (Malik Kafur)

தக்காணத்தில் நான்கு படையெடுப்புக்களை நடத்தியவர் மாலிக் காபூர். ஆனாலும் தக்காண அரசுகளுள் ஒன்றுகூட டெல்லி அரசுடன் இணைக்கப்படவில்லை.

**முபாரக்ஷா** (Mubarak Shah)

முபாரக்ஷா காலத்தில் (கி.பி.1316 - 1320) தக்காணத்தில் முதன் முதலாக முஸ்லிம் அரசு அமைக்கப்பட்டது. தேவகிரி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன.

**சத அமீர்**

பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் ஒரு சத அமீரின் (Amiran-i-Sadah) (நூறு கிராமங்களைக் கண்காணிக்கும் அதிகாரி) (Officers controlling territory containing about a hundred village) பொறுப்பில் விடப்பட்டது. அந்தப் பகுதியில் வரி வசூலிப்பது, அமைதியை நிலைநாட்டுவது அவர்களின் பொறுப்பாகும்.

**இந்து அரசுகள்**

சத அமீர்கள் முஸ்லிம்களாக இருந்தனர். அவர்களுடன் வந்தவர்கள் தவிர வேறு முஸ்லிம்கள் தேவகிரியில் வாழ்ந்து வரவில்லை. தேவகிரிக்குத் தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் இந்து அரசுகள் தங்களது பலத்தை இழக்காது இருந்தன. அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டால் தேவகிரியில் அமைந்துள்ள முஸ்லிம் ஆட்சி நொடிப்பொழுதில் அழிந்துவிடக்கூடும். எனவே தேவகிரியையும், தேவகிரியைச் சுற்றியிருந்த நாடுகளையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர டெல்லி சுல்தான்கள் கவனம் செலுத்தினர்.

**கியாஸுத்தீன் துக்ளக்**

கியாஸுத்தீன் (கி.பி.1320 - 1325) காலத்தில் வாரங்கல் வெற்றி கொள்ளப்பட்டது. அங்கும் (Warangal) சத அமீர்கள் நியமிக்கப்பட்டனர்.

*A.Saleem*
*S.Mohammed Kassim*

93632 20624
99943 23977
99767 78597



# *Rahmaan Builders*
## *Property Developers*

45D, Ramasamy Pillai Street, Maruthamalai Main Road,
Vadavalli (P.o.), Coimbatore - 41.






## ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**
**NEET, JEE, CA,CPT** வகுப்புகள் நடத்தப்படும்.

★ ஹாஸ்டல் வசதி உண்டு.

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ்**, M.B.A.,M.Sc.,Ph.D.
Founder & Chairman.

தொடர்புக்கு : Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412,414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

என்றாலும் அங்கு நிலைமை திருப்திகரமாக இல்லை. அங்குள்ள மக்களும் சத அமீர்களும் டெல்லி சுல்தானை எதிர்த்தனர். குஜராத் (Gujarat), மாளவம் (Malwa) ஆகிய இடங்களில் முஸ்லிம்கள் குறைவாகவே இருந்தனர். எனவே அங்கும் ஆட்சிக்கு ஆபத்திற்கான வாய்ப்பிருந்தது.

### தக்காணத்தில் நிலையான ஆட்சி

எனவே தக்காணத்தில் அமைக்கப்பட முஸ்லிம் ஆட்சி, நிலையாக இருந்தாலொழிய வட இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி குஜராத், மாளவத்தில் நிலைபெற வாய்ப்பு இல்லை என்பதனை முஹம்மது பின் துக்ளக் நன்கு உணர்ந்தார்.

### முஸ்லிம் மக்கள் கூட்டம்

தக்காணத்தில் முஸ்லிம்களின் ஆட்சியை நிலை பெறச் செய்ய முஹம்மது பின் துக்ளக்கிற்கு ஒரு வழி மட்டுமே புலப்பட்டது. அதாவது அங்கு முஸ்லிம் ஆட்சியை ஆதரித்திடும் முஸ்லிம் மக்கள் கூட்டத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்; முஸ்லிம்களின் குடியிருப்புக்களை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்தார் முஹம்மது பின் துக்ளக். அதற்கு என்ன வழி? டெல்லியில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை தேவகிரியில் குடியமர்த்தத் திட்டமிட்டார். அதன் மூலமே பிரச்சனைக்குத் தீர்வு காண முடியுமென்று முஹம்மது பின் துக்ளக் திடமாக நம்பினார். டெல்லியிலிருந்து சென்றவர்கள் அங்கு இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

### இஸ்லாமியப் பிரச்சாரம்

டெல்லியிலிருந்து அழைத்துச் செல்லப்படும் இஸ்லாமிய மார்க்க மேதைகள், சமயப் பிரச்சாரம் செய்ய வேண்டும். தக்காணத்திலுள்ள மக்களை இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவச் செய்ய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எனவே முதலில் தேவகிரிக்குச் செல்ல டெல்லியிலுள்ள முஸ்லிம் சமயத்தவர்களே தகுதி வாய்ந்தவர்கள் என்று முஹம்மது பின் துக்ளக் கருதினார் என்று அலிகார் மாகஸின் இதழில் 1930ல் வந்த கட்டுரை தெரிவிக்கிறது.

### சியாறல் - அவுலியா

செய்யது முஹம்மது பின் முபாரக் கிர்மாணி மார்க்கத்தின் அமீர். ஹிஜ்ரி 1302-ல் டெல்லியிலிருந்து Siyaral Avuliya எனும் நூல் வெளி வந்துள்ளது. அதனை லாகூரிலிருந்து கி.பி.1978-ல் S.மஹதி கோரி வெளியிட்டுள்ளார். இந்த நூலில், தக்காணத்திற்குச் செல்லவும், தேவகிரியை முஸ்லிம் கலாச்சாரத்தின்

தலைமையிடமாக்க வேண்டும் என்றும், அதனை முஸ்லிம் குடியேற்ற நகரமாக அமைக்க வேண்டும் என்றும் முஹம்மது பின் துக்ளக் விரும்பினார் என்பதற்கான எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

### கார்ட்னர் பிரெளன் - மற்றுமொரு தலைநகர்

முஹம்மது பின் துக்ளக் தக்காணத்தைத் தமது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வர முடிவு செய்தார். ஆகவே தக்காணத்தில் மற்றும் ஒரு தலைநகரை அமைத்தால் அதனை எளிதாகக் கட்டுப் படுத்தி வர இயலும் என்று எண்ணினார் என்பர் கார்ட்னர் பிரெளன்.

### ஆட்சிப் பகுதிகளில் கலகங்கள்

முஹம்மது பின் துக்ளக்கின் ஆட்சிப் பகுதிகளில் கலகங்கள் எழத்துவங்கின. கி.பி.1335க்கு முன்பு பஹாவுத்தீன் குர்ஸ்ஹிப் (The rebellion of Baha-ud-din Gurship) கிஷ்லுகான் (Kishlu Khan) கமால்பூர் காஜி குத்பின் கலகம் (The rebellion of the Qazi and Khatib of Kamalpur) கியாசுத்தீன் பகதூரின் (Ghiyas-ud-din Bahadur) கல்கம் (Wunar and Qaisar Rumi Ulam கலகம் தோப் (Duab) கலகம் ஆகியவை நடந்தன.

மலபார் கலகம் 1335-ல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மசூத்கான் (Masudkhan) கலகம், குலாஜுன் (Hulajun) கலகம், மாலிக் ஹவுஸ்கான் கலகம் (Malik Ghouse Khan) காம்பிலா (Kampila) மற்றும் வாரங்கல்லில் நடைபெற்ற கலகம், ஹன்சி மற்றும் சிர்சா (Hansi and Sirsa) கவர்னர் செய்யது இப்ராஹிம் நடத்திய கலகம் பக்கராவில் (Fakhra) நடைபெற்ற கலகம்.

சுனம் (Sunam), சாமனா (Samana), கெய்தால் (Kaithal), குர்ரம் (Kuhram) பகுதிகளில் நடைபெற்ற கலகங்கள், காரா (Kara) வின் நிஜாம் மெய்ன் நடத்திய கலகம், குல்பர்க்கா வின் அலிஷா நடத்திய கலகம், அய்னுல் முக் ஆப்கனின் சாஹா (Shaha) காஜி ஜலால் நடத்திய கலகம், (Qazi Jalal) அமிரன்-இ-சதா (Taghi) தாஹியின் கலகம், தௌலதாபாத்தின் சுல்தானி சிகாபுத்தீன் நடத்திய கலகம் ஆகிய 22 கலகங்களுக்கு குறையாமல் (1325 - 1351) முஹம்மது பின் துக்ளக் ஆட்சியில் நடைபெற்றதை அறிய முடிகிறது.

(தொடரும்)

## மதரஸா கல்வி வாரிய சட்டத்தை ரத்து செய்ததற்கு உச்சநீதிமன்றம் தடை!

மதரஸா கல்விச் சட்டம் ரத்து செய்த அலகாபாத் உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

உத்தரபிரதேசத்தில் மதரஸா கல்வி வாரியச் சட்டம் கடந்த 2004ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் அங்குள்ள 16,000 மதரஸாக்களில் 17 இலட்சம் மாணவர்கள் படித்து வந்தனர்.

இந்நிலையில், உத்தர பிரதேச மதரஸா கல்வி வாரியச் சட்டம், மதச்சார்பின்மை விதிமுறைகளை மீறுவதால் அது அரசியல் சாசனத்திற்கு எதிரானதுஎனக்கூறி அதை அலகாபாத் உயர் நீதிமன்றம் ரத்து செய்தது. மதரஸா மாணவர்களை வேறு பள்ளிகளுக்கு மாற்ற மாநில அரசுக்கு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வில்விசாரணைக்கு வந்தது. அப்போது மதரஸா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அபிஷேக் மனுசிங்விவாதிடுகையில், "மதக் கல்வியை மத போதனையாகக் கருத முடியாது. மதரஸா கல்வி தரமற்றது. பொதுவானது அல்ல எனக் கூறுவது தவறு. உயர் நீதிமன்ற உத்தரவால் 17 இலட்சம் மதரஸா மாணவர்களும், 10,000 ஆசிரியர்களும் பீதியடைந்துள்ளனர்" என்றார்.

அதன்பின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அளித்த தீர்ப்பில் கூறியதாவது:

"உத்தரபிரதேசமதரஸா கல்வி சட்டத்துக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்தது சரியல்ல. மதரஸா வாரியத்தின் நோக்கங்கள் ஒழுங்குமுறையுடன் கூடியது. மதரஸா கல்வி வாரியத்தால் மதச்சார்பின்மைக்கு பாதிப்பு ஏற்படாது.

மதரஸாக்களில் பயின்ற 17 இலட்சம் பேரை வேறு பள்ளிகளுக்கு மாற்றுவதால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

அவர்களை வேறு பள்ளிகளுக்கு மாற்ற பிறப்பிக்கப்பட்ட உத்தரவில்எந்தஉத்தரவாதமும் இல்லை. அலகாபாத் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்கப்படுகிறது" இவ்வாறு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட் கூறினார்.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவுமூலம் உத்தர பிரதேசத்தில் மதரஸா கல்வி வாரிய சட்டம் தொடர்ந்து செயல்படும்.

## ஜெர்மனியில் ரமளான்!

ஜெர்மன் வரலாற்றில் முதல் முறையாக ரமளான் மாதம் முழுவதும் அமைதியையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

RAMADAN TARHIB என்ற அறிவிப்புடன் ஜெர்மனியின் பிராங்க்பர்ட் நகரின் மத்தியிலுள்ள பிரதான வீதி இதற்காகத் தேர்வு செய்யப்பட்டு வீதி முழுவதும் சமாதான வார்த்தைகளுடன் கூடிய பதாகைகள், அலங்கார விளக்குகள், HAPPY RAMADAN என்று ஒளிரும் ஸ்டிக்கர்கள் தொங்க விடப்பட்டுள்ளன. ரமளான் மாதம் முழுவதும் அந்த வீதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு பல்வேறு நாடுகளின் பாரம்பரிய உணவு விற்பனை ஸ்டால்களும் அமைக்கப்பட்டன.

சுமார் எட்டு இலட்சம் மக்கள் தொகை கொண்ட பிராங்க்பர்ட் நகரில் வசிக்கும் பத்து விழுக்காட்டு முஸ்லிம்கள் ரமளான் நோன்பிருக்கும் நேரத்தில் அமைதியையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கூறியுள்ள சிட்டி கவுன்சில் சேர்மன் ஹைலைம் அர்ஸ் லேனர் இதற்காக பிராங்க்பர்ட் நகர நிர்வாகம் 75,000 யூரோ ஒதுக்கியதாகவும் தெரிவித்தார்.

ஃபலஸ்தீன பிரதேசம் போர் பதற்றங்களை எதிர்கொள்ளும் வேளையில் இனவெறி, இனப் பாகுபாடு, மதவெறிக்கு எதிராக ஜெர்மன் முஸ்லிம்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ரமளான் தர்ஹீப் அமைந்துள்ளது என்று பிராங்க்பர்ட் சிட்டி மேயர் நர்கஸ் எஸ்கன்தரி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

## மதுரை M.I.W.S. பைத்துல்மாலின் திருமண விழா

குர்ஆனின் குரல் நிறுவனர்களில் ஒருவரும், மதுரை J.M.S. அரபு கல்லூரி மற்றும் M.I.W.S . பைத்துல்மால் நிறுவனருமான "அஸ்அதுல் மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹஸ்ரத் கிப்லா (ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்டு கடந்த 1982ஆம் ஆண்டு முதல் மதுரை இஸ்லாமிக் வெல்ஃபேர் சொஸைட்டி (M.I.W.S .) பைத்துல்மால் இன்று வரை பன்னூறு ஏழைக் குமர்களுக்கு நிக்காஹ் செய்து வைத்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியுள்ளது. அல்ஹம்து லில்லாஹ்!

அந்த சேவையின் தொடர்ச்சியாக...

கடந்த 28.04.2024 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.30 மணியளவில் மதுரை J.M.S. அரபு கல்லூரி

வளாகத்திலுள்ள **“அஸ்அதுல் மில்லத்” ஹஜ்ரத் (ரஹ்) அவர்களின் நினைவரங்கத்தில் ஆறு குமர்களுக்கான திருமணங்கள்** மிகச் சிறப்புடன் நடைபெற்றன.

விழா நிகழ்ச்சிக்கு -

J.M.S. அரபு கல்லூரி & M.I.W.S . பைத்துல்மாலின் தலைவர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் **S.ஸபூர் முஹ்யித்தீன்** மிஸ்பாஹி ஹஜ்ரத் அவர்கள் தலைமை வகித்தார்கள். J.M.S. அரபு கல்லூரி & M.I.W.S . பைத்துல் மாலின் நிர்வாகக் குழு உறுப்பினர்களும், சமுதாய முன்னோடிகளும் முன்னிலை வகித்தனர்.

சேலம் நூருல் இஸ்லாம் அரபு கல்லூரி பேராசிரியர் “சொல்முரசு” மவ்லானா மவ்லவீ **M.முஹம்மது அபூதாஹிர் பாகவி பாஜில் தேவ்பந்தீ** ஹஜ்ரத் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

மணமக்களுக்கு M.I.W.S . பைத்துல்மால் சார்பாகவும், நல்லுள்ளம் கொண்ட சமுதாயப் பிரமுகர்கள் சார்பாகவும் பல்வேறு பரிசுப் பொருட்களும், பண முடிப்புகளும் வழங்கப்பட்டன. அல்ஹம்து லில்லாஹ்!

## கட்டிடங்களைத் தகர்க்கலாம்; கல்வியைத் தகர்க்க முடியுமா?

பலஸ்தீனில் தொடர்ந்து கேட்கும் யுத்த சப்தத்திற்கும், மரண ஓலத்திற்கும் இடையே தனது ஆசிரியப் பணியைத் தொடர்கிறார் அஸ்மா முஸ்தஃபா.

காஸா இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியம் முடித்து ஆசிரியராக அஸ்மா பணியாற்றி வந்த நிலையில் அண்மைக்கால இஸ்ரேலின் தாக்குதல்களில் பள்ளிக் கட்டிடங்கள் சேதமடைந்தன. கூடவே வடக்குக் காஸாவிலுள்ள அவரது வீடும் தரைமட்டமானது. ஆனாலும் மனம் தளராத அஸ்மா எகிப்து எல்லையில் அல்மவான்சி பகுதியிலுள்ள அகதி முகாமில் தங்கியதோடு அங்கேயே ஆசிரியப் பணியையும் தொடர்ந்து வருகிறார்.

குழந்தைகளின் அடிப்படைக் கல்வி தடைபட்டால் பலஸ்தீனின் எதிர்காலம் இழப்புக்குள்ளாகும் என்பதாலும், போர்க் காட்சிகளால் பயத்தில் வாழும் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களின் உரிமைகளை மீட்டெடுக்கப் போராடுவது ஓர் ஆசிரியையான தனது கடமை என்று கூறும் அஸ்மா 2020 ஆம் ஆண்டு 110 நாடுகளைச் சேர்ந்த ஆசிரியைகளில் Global Teacher Awardக்குத் தேர்வு பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

எங்கள் பலஸ்தீனக் குழந்தைகளுக்கு அறிவு புகட்ட, தான் உயிரோடிருக்கும் வரை முகாம்களில் பணியாற்றுவேன் என்று கூறும் அஸ்மா முஸ்தஃபாவின் வார்த்தைகளில் நம்பிக்கை தெரிகிறது.

செய்தி :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!

## பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவர்களுக்காக மதரஸா மற்றும் பள்ளிவாசலின் கட்டுமானம்

### மதரஸா-யே-இம்தாதியா மற்றும் அல்-மஸ்ஜிதுல் ஜமீல்

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவர் தங்களுடைய இடத்தை நமது மதரஸாவிற்காக வக்ஃப் செய்தார்கள். இந்த இடத்தின் மொத்த பரப்பளவு 4275 சதுர அடி ஆகும். இதில் நபி (ஸல்) அவர்களின் விருந்தினர்களான பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவர்கள் சகல வசதிகளுடன் தீனுடைய கல்வியை பெறும் வகையில் பள்ளிவாசல், வகுப்பறைகள், நூலகம், விடுதி, விருந்தினர் அறை மற்றும் கழிப்பறைகள் ஆகியவை இரண்டு தளங்களில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒரு சதுர அடியின் கட்டுமான செலவு ரூ.1500/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

எனவே, தாங்கள் அனைவரும் தங்களின் சார்பாகவும், குறிப்பாக, மறைந்த தங்கள் குடும்பத்தினரின் நன்மைக்காகவும் ஸதகத்துல் ஜாரியாவாக இந்த நற்செயலில் அதிக அளவில் பங்கு எடுத்துக் கொள்ளுங்கள். مَنْ بَنَى لِلّٰهِ مَسْجِدًا بَنَى اللّٰهُ لَهُ فِي الْجَنَّةِ مِثْلَهُ

அல்லாஹ்வின் திருப்தியை நாடி பள்ளிவாசலைக் கட்டுகிறவருக்கு அது போன்ற ஒன்றைச் சுவர்க்கத்தில் அவருக்காக அல்லாஹ் கட்டுகிறான் என நபி (ஸல்) கூறினார்கள். (ஹதீஸ்).

மூன்று செயல்களின் நன்மை ஒருபோதும் முடிவுக்கு வராது. அவற்றில் ஒன்று, பள்ளிவாசல், மதரஸா போன்றவற்றை எழுப்பி, அவற்றை நிரந்தரமாக தர்மமாக வழங்குவது. (ஹதீஸ்)

⚠ தயவு செய்து ஜகாத் தொகையை இதில் செலுத்த வேண்டாம்

**Name : Imdadiya Educational and Charitable Trust**
**A/C No : 6288904753**
**IFSC : IDIB000M139**
**Branch : Melvisharam 1312**
**UPI Id : imdadiya@indianbnk**

இந்தியன் பேங்க் Indian Bank

SCAN & PAY

Donation's are Eligible for Deduction U/s. 80G of Income Tax Act. 1961
Vide U.R.No. AABTI2052FF20241 Dated: 09/02/2024

**Donate Us**
**Per Sq.Ft Rs.1500**
**8000 x 1500 1,20,00,000**

**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**
539, Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N)-632509
Contact : +91-9952120340

தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்!

**"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."**

**- நபி (ஸல்) அவர்கள்**

(நூல் : திர்மிதி)

**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

**சீமாட்டி**

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# AIMAN COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN

(Sponsored by AIMAN Education & Welfare Society)

(Affiliated to Bharathidasan University) Recognized by UGC Under Section 2(f) and 12(B)

K. Sathanur, Trichy-620 021

## ADMISSION OPEN



- B.A. - English
- B.B.A
- B.Com
- B.Com.(C.A)
- B.C.A
- B.Sc. - Computer Science
- B.Sc. - Mathematics
- B.Sc. - Physics
- B.Sc. - Nutrition & Dietetics
- B.Sc. - Apparel & Fashion Technology
- B.Sc. - Psychology

- M.A.-English
- M.Com
- M.Sc. - Computer Science
- M.Sc.- Food Service Management & Dietetics

100% PLACEMENT

Hostel and Bus Facilities Available

## MUBALLIGA AND MUALLAMA COURSES

Admission Going on...

Apply online : www.aimancollege.edu.in

For Admission : 96297 46444, 73395 48002

ஈத் முபாரக்!

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## Travel & Tours India (p) Ltd

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## குர்பானி

ஹஸ்ரத் துன்னூனில் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் மிகப் பெரும் மார்க்க மேதை; மெய்ஞானக்கடல்; இறை நேசச் செல்வர். அவர்கள் ஹஜ்ஜுக்காக மக்காவை நோக்கி வருகிறார்கள் என்பது தெரிந்து அவர்களுடன் அவர்களின் சீடர்களும், செல்வந்தர்களும் திரண்டு வருகிறார்கள். வரும் வழியில் ஒரு நீர் நிலையருகில் ஒரு பெரியார் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருக்கிறார். அந்த நீர்நிலையில் தண்ணீர் அருந்தச் சென்ற மஹான் துன்னூனில் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள், அந்தப் பெரியாரைப் பார்த்து விசாரிக்கிறார்கள். அப்பெரியார் தாம் ஹஜ்ஜுக்குச் செல்வதாகக் கூறினார். "அப்படியானால் உங்களிடம் பயணத்திற்கான வேறு சாதனங்களைக் காணோமே" என்று மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் வினவுகிறார்கள்.

"என்னிடம் பயணத்திற்குரிய விசேஷ சாதனங்கள் எதுவுமில்லை. ஒரேயொரு மாற்று உடை மட்டும்தான் வைத்திருக்கிறேன்" என்றார் அப்பெரியார்.

உடனே துன்னூனில் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் ஒரு சட்டப் பிரச்சனையை எழுப்பினார்கள். அதாவது "இவ்வளவு எளிய நிலையிலுள்ள உங்களுக்கு, ஹஜ் ஃபர்ளா?" என்று கேட்டார்கள்.

"ஹஜ் எனக்கு கடமையா? இல்லையா? என்பது எனக்கும், எனது இறைவனுக்கும் இடையேயுள்ள பிரச்சனை. அதைப் பற்றிக் கேட்க, நீர் யார்? உமக்கு என்ன தகுதியிருக்கிறது?" என்று அந்தப் பெரியார் திருப்பிக் கேட்டார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த துன்னூனில் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் அப்படியே ஊமையாகித் திரும்பி விட்டார்கள். பயணம் தொடர்ந்தது.

கடைசியில் மஹான் துன்னூனில் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள், ஹஜ்ஜு கடமைகளையெல்லாம் நிறைவேற்றியபின், இறுதியில் கஃபாவை தவாபு செய்து கொண்டிருக்கும்போது வழியிலே சந்தித்த ஃபக்கீருடைய நினைவு வந்தது. அந்த ஃபக்கீர் தன்னுடைய ஹஜ்ஜை நிறைவேற்றினாரா? என்ற சந்தேகம் வந்தது. அதே நேரத்தில் ஹஜருல் அஸ்வத் கல்லுக்கருகில்

அந்த ஃபக்கீர் நின்று கொண்டிருப்பதைக் கண்டார்கள். அந்த ஃபக்கீர் கஃபாவின் திரையைப் பிடித்துக் கொண்டு துஆ கேட்டார்.

"இறைவா! நான் ஹஜ்ஜை நிறைவேற்றும் பாக்கியத்தைத் தந்தாய். ஆனால், என்னிடம் ஓர் ஆட்டை வாங்கி குர்பானி கொடுக்கக் கூட வசதியில்லை. ஆகவே, என்னையே உனக்கு குர்பானியாக்குகிறேன். என்னை நீ ஏற்றுக் கொள். எனது ஹஜ்ஜையும் நீ ஏற்றுக் கொள்வாயாக" என்று பிரார்த்தித்தார். அப்பிரார்த்தனை முடிந்ததும், அவரது உடல் கீழே சாய்ந்தது. உயிர் பிரிந்தது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

## தொழுகையும்... நோன்பும்!

பெண்கள் மாதவிடாய் காலங்களில் தொழக்கூடாது. அவ்வாறு விடுபட்டுப்போன தொழுகைகளை களாச் செய்து சுத்தமான பின் மீண்டும் தொழ வேண்டிய அவசியமில்லை. ஆனால் நோன்பு காலங்களில் மாதவிடாய் ஏற்பட்டால் நோன்பு நோற்கக்கூடாது. ஆனால்பிறகு நோன்பை களா செய்ய வேண்டும்.

இது ஏன்? தொழுகையை விட நோன்பு மேலானதா? காரணம் என்ன?

ஆதி அன்னை ஹவ்வா (அலை) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. உடனே நபி ஆதம் (அலை) அவர்களிடம் வந்து இந்த விஷயத்தைக் கூறி, "இந்நிலையில் தொழலாமா?" எனக் கேட்டார்கள். நபி ஆதம் அவர்கள், ஜிப்ரயீலிடம் கேட்டார்கள். வானவர் கோன் ஜிப்ரயீல், அல்லாஹ்விடம் கேட்டார். "அந்த நேரங்களில் தொழ வேண்டாம்" என இறைவன் சலுகையளித்தான்.

பிறகு நோன்பு காலத்தில் அன்னை ஹவ்வா (அலை) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அப்போதும் முன்போல் தமது கணவர் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களிடம் வினவினார்கள். ஆதம் (அலை) அவர்கள் தொழுகை விஷயத்தில் இறைவன் கூறிய சலுகையை அனுசரித்து, நோன்பை விட்டு விடும்படிக் கூறினார்கள். அல்லாஹ்விடம் கேட்காமல் தன் இஷ்டத்திற்கு தீர்ப்பளித்து விட்டார்கள்.

இதையறிந்த இறைவன், நோன்பை களாச் செய்யும்படிக் கட்டளையிட்டான்.

இறைவனே! தொழுகையும் நோன்பும் வணக்கங்கள் – இபாதத் தானே! தொழுகையை களா செய்ய வேண்டாம் என்ற நீ, நோன்பை மட்டும் களாச் செய்யும்படி ஏன் சொல்கிறாய்?" என்று நபி ஆதம் (அலை) அவர்கள் திருப்பிக் கேட்டார்கள்.

ஆதமே! தொழுகை விஷயத்தில் நீர் என்னிடம் விளக்கம் கேட்டீர். நான் சலுகையளித்தேன். ஆனால், நோன்பு விஷயத்தில் நீரே உம் இஷ்டத்திற்குத் தீர்ப்பு வழங்கிக் கொண்டீர். அதனால்தான்" என விளக்கமளித்தான்.

வணக்கம் என்பது, இறைவனுக்கே உரியது; அவனுக்காகவே புரிவது. எனவே, அது விஷயத்தில் அவனது இஷ்டப்படியேதான் நடக்க வேண்டுமே தவிர, நமது இஷ்டப்படிச் செய்யப்படுவது அல்ல. அப்படிச் செய்தால் அது வணக்கம் - இபாதத் ஆகாது.

இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. மார்க்கம் சம்பந்தமான எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், கற்றறிந்து தேர்ந்த ஆலிம்களிடம் கேட்டே நடக்க வேண்டும். அது அப்படியென்றால் இது இப்படித்தானே" என்று நமக்கு நாமே ஒரு முடிவுக்கு வருவது தவறும், குற்றமுமாகும்.

## பொய்யில் உள்ளம்; கையில் தஸ்பீஹ்

கலீஃபா ஹாரூன் ரஷீத் தமது தாயாருடன் உரையாடிக் கொண்டிருந்தார். மாளிகையின் பக்கத்தில்தான் பள்ளிவாசல் இருந்தது. இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது பள்ளிவாசலில் இருந்து ஒரு பெரும் சப்தம் எழுந்தது. திடுக்கிட்ட கலீஃபாவும், தாயாரும் அது என்ன சப்தம்? எனச் சேவகர்களிடம் விசாரித்து வரும்படி கூறினர். அவர்கள் போய் பார்த்துவிட்டு வந்து சொன்னார்கள் :–

"இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுக்கு தும்மல் வந்து "அல்ஹம்து லில்லாஹ்" சொன்னதற்கு கூடியிருந்த ஜனங்கள் "யர்ஹமுகல்லாஹ்" சொன்ன சப்தம்தான் அது" என்று.

ஹாரூன் ரஷீதைப் பார்த்து தாயார் கேட்டார் : "என்னப்பா! நீ கலீஃபாவா? அல்லது இமாம் மாலிக் கலீஃபாவா?" என்று. அந்த அளவுக்கு அன்றைய தினம் ஆலிம்களுக்கு மக்கள் செல்வாக்கு இருந்தது.

ஊரில் தண்டோரா போடுபவன் யார்? என்ன ஜாதி என்றெல்லாம் நாம் பார்ப்பதில்லை. அவனது அறிவிப்பை நாம் மதிக்கவே செய்கிறோம். காரணம் அவன் சொல்லும் அறிவிப்பு அரசாங்கத்தினுடையதுஎன்பதால். அதைப்போலவே ஆலிம்களின் கோலத்தை ஆராயாதீர்கள்; அவர்கள் கூறும் ஏவல், விலக்கல் களைக் கேட்டு செயல்படுங்கள். அவர்கள் கூறுவது அவர்களின் சொந்தக் கருத்தல்ல. அல்லாஹ், ரசூல் ஆகியோரின் கட்டளைகளாகும்.

தொழுவது மட்டுமே இஸ்லாமல்ல. பள்ளிவாசலில் எப்படி கட்டுப்பாட்டுடனும், இறையச்சத்துடனும் தொழுகிறோமோ

அதைப் போலவே பள்ளிக்கு வெளியே, வீதியிலும், வீட்டிலும், வியாபாரத்திலும் இறையச்சத்துடன் வாழ வேண்டும். அதுதான் இஸ்லாம்.

கையிலே தஸ்பீஹ் உருண்டு கொண்டிருக்கிறது. வாய் 'இல்லல்லாஹ் இல்லல்லாஹ்' என்று திக்ரு செய்து கொண்டிருக்கிறது. ஆனால், வியாபாரத்தில் பொய்யும், கொள்ளை இலாபமும், ஏமாற்றும், மோசடியும் இருந்தால் அது திக்ரு ஆகாது. இது வெறும் வெளிவேஷமே. இது இஸ்லாம் அல்ல.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைவுக்குப்பின் இஸ்லாமியக் குடியரசின் 4வது கலீஃபாவாக (ஜனாதிபதியாக) வந்தவர்கள் ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள். கலீஃபா அவர்கள் போர் முனையில் அணியும் தமது இரும்புக் கவசம் ஒரு கிறிஸ்தவரிடம் இருப்பதைக் கண்டு, நீதிபதியிடம் அவர் மீது வழக்குத் தொடர்ந்தார்கள். நீதிமன்றம் கூடியது. வாதி அலீ (ரளி) அவர்களும், பிரதிவாதி கிறிஸ்தவரும் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

நீதிபதி : "நீர் வைத்திருக்கும் இரும்புக் கவசம் தம்முடையது; நீர் எடுத்துக் கொண்டீர்" என்று அலீ உம்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார். நீர் என்ன சொல்கிறீர்?

கிறிஸ்தவர் : அலீ பொய் சொல்கிறார் என்றார்.

நீதிபதி : பிரதிவாதி அலீ அவர்களை நோக்கி உங்கள் இரும்புக் கவசம் உங்களுடையதுதான் என்பதற்கு சாட்சிகள் உண்டா? என்று கேட்டார்.

ஜனாதிபதி அலீ : என்னிடம் சாட்சிகள் இல்லை என்றார்கள்.

## அல்லாஹ் அழித்து விடும் தீமைகள்

"ஓர் அடியார் இஸ்லாத்தைத் தழுவி, அவரது இஸ்லாம் (அகத்திலும் புறத்திலும்) அழகு பெற்றுவிட்டால், அவர் அதற்குமுன் செய்த அனைத்துத் தீமைகளையும் அல்லாஹ் மாய்த்துவிடுகின்றான்.

அதற்குப் பின்னர் (அவர் செய்யும் நன்மை, தீமைகள்) நிகருக்கு நிகராக இருக்கும். (நன்மை செய்தால் நன்மையும் தீமை செய்தால் தீமையும் கிடைக்கும். அதிலும்) ஒரு நன்மைக்கு அது போன்ற பத்து முதல் எழுநூறு மடங்கு நன்மை கிடைக்கும். (ஆனால்) ஒரு பாவத்திற்கு அதைப் போன்ற ஒன்றே (தண்டனையாகக்) கிடைக்கும். அதையும் அல்லாஹ் மன்னித்துவிட்டால் (எந்தத் தண்டனையும்) கிடையாது" என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூசயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள்
(நூல் : ஸஹீஹுல் புகாரி)

நீதிபதி : சாட்சிகள் இல்லாததால் கவசம் கிறிஸ்தவருக்குச் சொந்தமானது என்று நான் தீர்ப்பளிக்கிறேன்" என்றார்.

கிறிஸ்தவர் அந்த இரும்புக் கவசத்துடன் கோர்ட்டிலிருந்து வெளியேறினார். ஜனாதிபதி ஹள்ரத் அலீ (ரளி) அவர்களும் தீர்ப்பை ஏற்று வெளியே கிளம்பினார்கள்.

சில நிமிடங்கள் கழிந்தன. அந்தக் கிறிஸ்தவர் நீதிமன்றத்திற்குத் திரும்பி வந்தார். அவரது நாவுகள் :

"அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹி"

"வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை முஹம்மது நபி அல்லாஹ்வின் தூதர்" என்று நான் சாட்சியம் சொல்லுகிறேன். இந்த இரும்புக் கவசம் ஸிஃப்பீன் போரில் ஹள்ரத் அலீ அவர்களிடமிருந்து கீழே நழுவி விழுந்து விட்டது. நான் அதை எடுத்து வைத்திருந்தேன். உண்மையில் அது அவர்களுடையதுதான். முஸ்லிம்களின் நீதித் தீர்ப்பை நான் கண்ணாறக் கண்டேன். இஸ்லாம் மார்க்கத்தில் கவர்ச்சி கொண்டேன். நான் முஸ்லிமாகி விட்டேன்" என்று கூறினார். இப்படித்தான் இஸ்லாம் பரவியது. (தொடரும்)


ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், புதுக்கோட்டை – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

# அரஃபா நாளின் சிறப்புகள்

## அரஃபா நாளில் அல்லாஹ் தன்னுடைய மார்க்கத்தைப் பூர்த்தியாக்கினான்

"இன்றைய தினம் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் என்னுடைய அருட் கொடையை உங்கள் மீது பூர்த்தியாக்கி விட்டேன். உங்களுக்கு இஸ்லாத்தை மார்க்கமாகப் பொருந்திக் கொண்டு விட்டேன்"

– அல்குர்ஆன் (5 : 4)

இந்த அல்குர்ஆன் வசனம் அரஃபா நாளில் இறங்கியதாக ஹள்ரத் உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (புகாரி)

## அரஃபா நாளில் நோன்பு நோற்பது பாவங்களுக்குப் பரிகாரமாகும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : -

"அரஃபா நோன்பு முன்சென்ற வருடத்தினதும் பின்வர இருக்கின்ற வருடத்தினதும் பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும்" (முஸ்லிம்)

## அரஃபா நாள் முஸ்லிம்களின் பெருநாள் தினமாகும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் :

"அரஃபா நாள், அறுத்துப் பலியிடும் நாள், மினாவுடைய நாட்கள் ஆகியன முஸ்லிம்களாகிய எங்களுக்கு பெருநாள் தினமாகும்." (அபூதாவூத்)

## அரஃபா நாள் அல்லாஹ் நரகத்திலிருந்து அதிகமாக மனிதர்களை விடுதலை செய்யும் நாளாகும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

"அரஃபா நாளைவிட அதிகமாக அல்லாஹ் ஓர் அடியானை நரகத்திலிருந்து விடுதலை செய்யும் நாள் வேறொன்றுமில்லை." (முஸ்லிம்)

# அண்ணலாரின் அற்புத அரஃபா பேருரை!

**மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ**

நபி (ஸல்) அவர்கள் தமது 63 ஆண்டுகால பொது வாழ்க்கையில் அவர்கள் செய்த ஹஜ் ஒன்றே ஒன்று! அதற்கு பெயர்தான் 'ஹஜ்ஜதுல் வதா - விடைபெறுதல் ஹஜ்' ஆகும்.

நபி (ஸல்) அவர்களின் பொது வாழ்க்கை இரண்டு பாகங்களை உள்ளடக்கியது.

1. நபித்துவம் வழங்கப்படுவதற்கு முன்
2. நபித்துவம் வழங்கப்பட்டதற்கு பின்....

முதல் வாழ்க்கை மக்கள் சேவையிலும், இரண்டாம் கட்ட வாழ்க்கை மக்கள் சேவையிலும், மார்க்க சேவையிலும், இறை சேவையிலும் காலம் கழிந்தது. ஆக, அவர்கள் வாழ்ந்த 63 ஆண்டுகால வாழ்க்கையும் பொது வாழ்க்கைதான். அவர்களின் பொது வாழ்க்கையில் இரண்டாம் கட்ட 23 ஆண்டுகால வாழ்க்கை வியக்கத்தக்கது; அற்புதமானது; அழகானது; அபூர்வமானது; ஆச்சரியமானது; முன்மாதிரியானது; முக்கியமானது; முதன்மையானது; மார்க்கம் மற்றும் மக்கள் நெறி சார்ந்தது. பின்பற்றத் தகுந்தது. வஹீ எனும் இறைச் செய்தி இறங்கி எங்கும் நிறைந்தது.

இத்தகைய 23 ஆண்டுகால வாழ்க்கையின் சாராம்சத்தை, இரத்தினச் சுருக்கத்தை தமது ஹஜ்ஜதுல் வதாவில் ஆற்றிய அரஃபா உரையில் தொகுத்து வழங்கினார்கள். அதுவே இறுதி நபியின் இறுதிப் பேருரையாகவும், தொகுப்புரையாகவும் அமைந்தது.

இந்த அரஃபா உரை உலக வரலாற்றிலும், இஸ்லாமிய வரலாற்றிலும் உயர்ந்த இடத்தை பிடித்துவிட்டது. கி.பி. 632 ஹிஜ்ரி 10-ம் ஆண்டு துல்ஹஜ் பிறை9 பிப்ரவரி 23-ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று நபி(ஸல்) அவர்கள், அரஃபா தினத்தில் 'ஜபலுர் ரஹ்மத்' எனும் இடத்தில் இருந்தபோது எல்லாம் வல்ல அல்லாஹ் பின்வரும் வசனத்தை சுபச் செய்தியாக இறக்கியருளினான்.

"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்;

இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே [ இசைவானதாகத் ] தேர்ந்தெடுத்துள்ளேன்."

-அல் குர்ஆன் (5 : 3)

"யூதர்களில் ஒருவர் ஹள்ரத் உமர் (ரளி) அவர்களிடம், "அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் உங்கள் வேதத்தில் ஓதிக் கொண்டிருக்கும் ஒரு வசனம் யூதர்களாகிய எங்களின் மீது இறங்கியிருந்தால் அந்நாளை நாங்கள் பெருநாளாக்கிக் கொண்டிருப்போம்" என்றார். அதற்கு ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் "அது எந்த வசனம்?" எனக் கேட்டார்கள். அதற்கவர் கூறினார். 'இன்றைய தினம் உங்களின் மார்க்கத்தை உங்களுக்கு நிறைவுபடுத்தி விட்டேன். உங்களின் மீது எனது அருட்கொடையை முழுமைப்படுத்தி விட்டேன். இஸ்லாத்தையே உங்களுக்கான மார்க்கமாகத் திருப்தி (யுடன் அங்கீகரித்துக்) கொண்டேன்.'" (அல்குர்ஆன் 5:3) (இந்தத் திருவசனம்தான் அது.) அதற்கு உமர் (ரளி) அவர்கள் "அவ்வசனம் எந்த நாளில் எந்த இடத்தில் வைத்து நபி (ஸல்) அவர்களின் மீது இறங்கியது என்பதை நாங்கள் அறிவோம். அரஃபா பெருவெளியில் ஒரு வெள்ளிக்கிழமை தினத்தில் நபி (ஸல்) அவர்கள் நின்று கொண்டிருக்கும் போது தான் (அது அருளப்பட்டது)" என்றார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் தாரிக் பின் ஷிஹாப் (ரளி) அவர்கள் (புகாரி :45)

நபி (ஸல்) அவர்கள் அரஃபா உரையில் அனைத்து விஷயங்களை பற்றியும் பேசினார்கள். எதையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.

"மக்களே! என்னிடமிருந்து கவனமாகக் கேளுங்கள்! ஏனெனில், இந்த ஆண்டுக்குப் பிறகு இந்த இடத்தில் நான் உங்களைச் சந்திப்பேனா? என்று எனக்குத் தெரியாது. செய்தியை நேரடியாகக் கேட்பவரை விட அதைக் கேள்விப்படுபவர் நன்கு விளக்கமுடையவராக இருக்கலாம். எனது பேச்சைக் கேட்டு, அதை மனனம் செய்தவருக்கு அல்லாஹ் கருணை புரியட்டும்!" என்றார்கள்

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜுபைர் பின் முத்யிம் (ரளி) அவர்கள், (நூல் : தாரமீ)

அரஃபா மைதானத்தில் 1,24,000 அல்லது 1,44,000 நபித் தோழர்களுக்கு மத்தியில் நபி (ஸல்) அவர்கள் பேருரை நிகழ்த்தினார்கள்.

**1. மனித உரிமைகளின் புனிதம் பற்றியும், அவற்றை காப்பது பற்றியும் :**

'மக்களே! உங்களுடைய இந்த புனித நகரத்தில், (மக்கா

# புதுக்கோட்டை

# ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரி

## இரு கல்வியும் ஒரே இடத்தில்...!

புதுகை மாநகரில் பொன்விழா ஆண்டைக் கடந்து கம்பீரமாகக் காட்சி தரும் ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரியில் மார்க்கக் கல்வியோடு பொதுக்கல்வியும் ஒருசேர ஒழுக்கத்துடன் அனுபவமிக்க பேராசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது.

*கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (நபிமொழி)*

## நமது அரபிக் கல்லூரியின் சிறப்பம்சங்கள் :

- ஏழு வருடம் மவ்லவீ ஆலிம் வகுப்புகளுடன் ஃபாஜில் (மேல் வகுப்பு) பாடங்களையும் பயிற்றுவித்தல்.
- குர்ஆன் மனனம் (ஹிஃப்ளு) மற்றும் காரீ பட்டம் வழங்குதல்.
- 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பொதுக்கல்வி வகுப்புகள்.
- ஒழுக்கம் மற்றும் தர்பிய்யத்தில் அதிக கவனம் செலுத்துதல்.
- நேரடிக் கண்காணிப்பில் உணவு ஏற்பாடு மற்றும் மருத்துவ வசதி.
- நல்ல காற்றோட்டத்துடன் கூடிய சுகாதாரமான விடுதி வசதி,

**தங்களது பிள்ளைகளைச் சேர்த்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரி

**ஈத்கா கார்டன், புதுக்கோட்டை-622 001.**

**Ph : 04322-220270, 225700**

**Cell: 98650 07110, 95006 43943, 97907 08839**

நகரம்) உங்களுடைய இந்த புனித மாதத்தில், (துல்ஹஜ் மாதம்) உங்களுடைய இந்த நாள் (அரஃபா நாள்) எவ்வளவு புனிதமானதோ அது போன்றே, அல்லாஹ் உங்கள், உயிர்களை யும், உங்கள் உடமைகளையும், உங்கள் மானம் மரியாதைகளை யும் புனிதமாக்கியுள்ளான்' என நபி(ஸல்) அவர்கள் தமது அரஃபா உரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## 2. அறியாமைக்கால அனாச் சாரங்களையும், மூடபழக்கங் களையும் குழிதோண்டி புதைப்பது :

நபி (ஸல்) அவர்கள் அரஃபா அருகிலுள்ள "நமிரா" எனுமிடத் தில் தமக்காக முடியாலான கூடா ரம் ஒன்று அமைக்குமாறு உத்தர விட்டார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் பயணத்தைத் தொடர்ந் தார்கள். அவர்கள் முஸ்தலிபா விலுள்ள 'மஷ்அருல் ஹராம்' எனும் மேட்டுக்கு அருகில் தங்குவார்கள் எனக் குறைஷியர் பெரிதும் நம்பிக் கொண்டிருந் தனர். அறியாமைக் காலத்தில் குறைஷியர் அங்கு தங்குவது வழக்கம். ஆனால், நபி (ஸல்) அவர்கள் அதைக் கடந்து அரஃபாவிற்குச் சென்றுவிட்டார் கள். அங்கு நமிராவில் தமக்காக அமைக்கப் பெற்றிருந்த கூடாரத் தைக் கண்டு அங்கு இறங்கித் தங்கினார்கள். சூரியன் உச்சி சாய்ந்ததும் 'கஸ்வா' எனும் தமது ஒட்டகத்தில் சேணம் பூட்டுமாறு உத்தரவிட்டார்கள். சேணம் பூட்டப் பெற்றதும் 'உரானா' பள்ளத்தாக்கின் மத்திய பகுதிக்கு வந்து உரை நிகழ்த்தினார்கள். 'உங்களது புனித மிக்க இம்மாதத்தில் இன்றைய தினம் எந்தளவு புனிதமானதோ அந்த அளவிற்கு உங்கள் உயிர்களும், உங்கள் உடமைகளும் உங்களுக்குப் புனிதமானவை ஆகும். அறிக! அறியாமைக் காலத்தின் அனைத்து விவகாரங்களும் என் பாதங்களுக்குக் கீழே புதைக்கப் பட்டவை ஆகும். அறியாமைக் காலத்தில் நிகழ்ந்து விட்ட உயிர்க் கொலைகளுக்கான பழி வாங்குதல்கள் அனைத்தும் என் பாதங்களுக்குக் கீழே புதைக்கப் பட்டவை ஆகும். (அவற்றை நான் தள்ளுபடி செய்கிறேன்) முதற்கட்டமாக, நம்மிடையே நடைபெற்ற கொலைகளில் ரபீஆ பின் ஹாரிஸின் மகனது கொலைக்கான பழிவாங்கலை நான் தள்ளுபடி செய்கிறேன். அவன் பனூசஅத் குலத் தாரிடையே பால்குடிப் பாலக னாக இருந்து வந்தான். அவனை ஹுதைல் குலத்தார் கொன்று விட்டனர். அறியாமைக் காலத் தில் இருந்த வட்டியும் என் பாதங்களுக்குக் கீழே புதைக்கப் படுகிறது. (அவற்றையும் நான் தள்ளுபடி செய்கிறேன்.) நம்மவர் கொடுத்திருந்த வட்டி களில் முதற்கட்டமாக (என்

பெரிய தந்தை) அப்பாஸ் அவர்களுக்கு வரவேண்டிய வட்டியை நான் தள்ளுபடி செய்கிறேன். அதில் (அசலைத்தவிர) கூடுதலான தொகை அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகிறது" என நபி (ஸல்) அவர்கள் தமது அரஃபா உரையில் அறை கூவல் விடுத்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்
(முஸ்லிம் - 2334)

**பெண்ணுரிமை பிரகடனம் :**

"பெண்கள் விஷயத்தில் இறைவனை அஞ்சிக்கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அடைக்கலத்தால் அவர்களை நீங்கள் (கரம்) பிடித்துள்ளீர்கள். அல்லாஹ்வின் கட்டளையால் அவர்களது கற்பை நீங்கள் அனுமதிக்கப் பெற்றதாக ஆக்கியுள்ளீர்கள். அவர்களிடம் உங்களுக்குள்ள உரிமை என்னவென்றால், நீங்கள் வெறுக்கும் எவரையும் உங்கள் விரிப்பில் (அதாவது உங்களது வீட்டில்) அவர்கள் அனுமதிக்காமல் இருப்பதாகும். அவ்வாறு அவர்கள் அனுமதித்தால் காயம் ஏற்படாத வகையில் அவர்களை நீங்கள் அடிக்கலாம்.

உங்களிடம் அவர்களுக்குள்ள உரிமை யாதெனில், முறையான உணவும், உடையும் அவர்களுக்கு நீங்கள் அளிப்பதாகும்" என நபி (ஸல்) அவர்கள் தமது அரஃபா உரையில் பிரகடனம் செய்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் - 2334)

**நிறவெறி, மொழி வெறிக்கெதிரான பிரகடனம் :**

"மக்களே! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒருவனே! அறிந்து கொள்க! அரபி அல்லாதவரை விட எந்த ஓர் அரபிக்கும் எவ்விதச் சிறப்பும் இல்லை. அரபியை விட எந்த ஒரு அரபி அல்லாதவருக்கும் எவ்விதச் சிறப்பும் இல்லை. கருப்பரை விட சிவப்பருக்கோ, சிவப்பரை விட கருப்பருக்கோ எவ்விதச் சிறப்பும் இல்லை. நிச்சயமாக உங்களில் எவர் மிகவும் பயபக்தி உடையவராக இருக்கின்றாரோ, அவரே இறைவனிடம் மிக்க கண்ணியமானவர். சிறப்பு என்பது இறையச்சத்தைக் கொண்டே தவிர வேறில்லை" என நபி (ஸல்) அவர்கள் தமது அரஃபா உரையில் பிரகடனம் செய்தார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்
(நூல்: பைஹகீ, அஹ்மது)

இஸ்லாத்தில் சிறப்பு, உயர்வு, முதல் மரியாதை, கண்ணியம் யாவும் பிறப்பை, மொழியை, நிறத்தை, இனத்தை, கோத்திரத்தை, பணத்தை, பதவியை, படிப்பை வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. இவ்வாறு தீர்மானிக்கப்படுவ

தால் தான் மொழி வெறி, சாதி வெறி, இன வெறி, நிறவெறி தலைவிரித்து கோரத் தாண்டவமாடுகிறது. இதை இஸ்லாம்முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டது. அரஃபாவின் பிரகடனத்தால் நிரூபித்துக் காட்டியது. சிறப்பு, உயர்வு என்பதெல்லாம் இறையச்சத்தை அடிப்படையாக வைத்து இஸ்லாம் தேர்வு செய்கிறது.

**ஷைத்தான் குறித்தும், அவனின் சூழ்ச்சி குறித்தும் எச்சரிக்கை :**

"அரேபிய தீபகற்பத்தில் தொழுகையாளிகள் தன்னை வணங்குவார்கள் என்ற நம்பிக்கையை ஷைத்தான் இழந்துவிட்டான். எனினும், அவர்களிடையே பிளவை உருவாக்குவதில் வெற்றி கண்டு விட்டான்" என நபி (ஸல்) அவர்கள் தமது அரஃபா உரையில் கூறுரைத்தார்கள்.'

அறிவிப்பாளர்: ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் - 5417)

நபி(ஸல்) அவர்கள் அரஃபா உரையில் தெரிவித்த இந்த முன்னறிவிப்பு இன்று எதார்த்தமாக நடைபெற்று வருகிறது.

இன்று அரபிகள் அல்லாஹ்வைத்தான் வணங்குகிறார்கள். ஷைத்தான்களை அல்ல. எனினும் அரபிகள், அமெரிக்காவின் அடிமைகளாகவும், ஐரோப்பாவின் அடிமைகளாகவும், யூதர்களின் அபிமானிகளாகவும், சொந்த இனமக்களின் (பலஸ்தீன நாட்டு மக்கள்) எதிரிகளாவும், துரோகிகளாகவும், பகைவர்களாகவும் இருந்து வருகிறார்கள். காஸாவில் இஸ்ரேல், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் இனப்படுகொலை நடத்திவருவதை (ஈரான், லெபனான் மற்றும் ஏமன் நாடுகளைத் தவிர) 57 நாடுகள் கொண்ட அரேபிய நாடுகளின் கூட்டமைப்பு வேடிக்கை பார்க்கிறது.

இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலையில் இதுவரை 35,000 பேர் ஷஹீதாக்கப் பட்டுள்ளனர். இலட்சத்திற்கும் அதிகமானோர் நிரந்தர ஊனமுள்ளவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். புனித பூமியான காஸா பகுதி மனிதர்கள் வாழ முடியாத நரகப் படுகுழியாக மாற்றப்பட்டு விட்டது. 90% கட்டிடங்கள் தகர்க்கப்பட்டு விட்டன. இதை தடுத்து நிறுத்துவதற்கு அரபிகளிடம் தைரியம் இல்லை. காரணம் அவர்கள் அல்லாஹ்வை தொழுது கொண்டிருக்கும் வேளையில் அமெரிக்காவுக்கு அடிமைகளாக உள்ளனர். மற்றொரு காரணம் அரபிகள் மற்றும் அரேபிய நாடுகளுக்கிடையே ஒற்றுமை கிடையாது. எல்லைப் பிரச்சனை, அதிகாரப்போட்டி, அமெரிக்க கலாச்சாரம், உலக மோகம் யாவும் இவர்களை வலுவிழக்கச்செய்ததுடன் இணைந்து செயல்பட முடியாத அளவுக்கு

பிளவை ஏற்படுத்திவிட்டன. இவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியாதவர்கள். ஏனென்றால், இவர்கள் பொருளாதாரத்தில் ஹீரோவாகவும் இராணுவ கட்டமைப்பில் தன்னிறைவு அடையாமல் அமெரிக்காவை நம்பியே அடிமைகளாக வலம் வருவதினால் இராணுவத்தில் ஜீரோவாகவும், இழித்துக் கொண்டு திரிகிறார்கள். பிறகு எப்படி இவர்கள் பலஸ்தீன் நாட்டு மக்களை காப்பற்ற முடியும்? உலக முஸ்லிம்களை காப்பாற்ற முடியும்? இந்நிகழ்வை தான் அண்ணலார் அரஃபா உரையில் தோலுரித்துக் காட்டினார்கள்.

**ஐந்து விஷயங்கள் சொர்க்கத்தை கட்டாயமாக்கும் :**

ஹள்ரத் உமாமா (ரளி) அவர்கள் கூறுவதாவது : "நபி (ஸல்) அவர்கள் அரஃபா உரையில்,

1. நீங்கள் இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.
2. ஐவேளை தொழுங்கள்.
3. ரமளான் மாதம் நோன்பு வையுங்கள்.
4. உங்களின் பொருளாதாரத்தில் இருந்து ஜகாத்தை நிறைவேற்றுங்கள்.
5. உங்களில் அதிகாரமுடையோருக்குக் கட்டுப்படுங்கள்" எனக் கூறினார்கள்.

(நூல்: திர்மிதீ)

**அல்லாஹ்வின் வேதப்படி வழி நடத்துபவருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்**

நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின்போது ஆற்றிய உரையில், "அல்லாஹ்வின் வேதப்படி உங்களை நடத்துகின்ற அடிமையொருவர் உங்களுக்குத் தலைவராக்கப்பட்டாலும் அவரது சொல்லையேற்று, அவருக்கு கீழ்படியுங்கள்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் உம்முல் ஹுஸைன் பின்த் இஸ்ஹாக் (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் - 3750)

**தந்தை அல்லாதோரை தந்தை என வாதிடுவது :**

தன் தந்தை அல்லாத ஒருவரைத் தன் தந்தை என வாதிடுபவனுக்கு, அல்லது தன்னை விடுதலை செய்த உரிமையாளர் அல்லாத ஒருவரைத் தன் உரிமையாளர் எனக்கூறுபவனுக்கு அல்லாஹ்வின் சாபமும், வானவர்கள் மற்றும் அனைத்து மக்களின் சாபமும் ஏற்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்
(முஸ்லிம் - 2654)

**சம்பந்தம் இல்லாதவர் பழிக்குப் பழி வாங்கப்படாது :**

நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின் உரையில் தெரிவிக்கும்போது, "அறிந்து

கொள்க! (கொல்லப்பட்ட) எந்த உயிருக்கும் (அதை கொலை செய்த) உயிர்தான் பழி வாங்கப்படும். அது அல்லாத வேறு உயிர் பழி வாங்கப் படாது. மகனுக்காக தந்தையோ, தந்தைக்காக மகனோ பழி வாங்கப்படாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அம்ர்பின் அஹ்வஸ் (ரளி) அவர்கள். (நூல் : திர்மிதீ)

**வாரிசுரிமையை நிலைநாட்டுதல் :**

நபி (ஸல்) அவர்கள், இறுதி ஹஜ்ஜின் தமது (அரஃபா) உரையில், "நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் அவரவரின் உரிமையை வழங்கியுள்ளான். எனவே வாரிசுக்கு மரண சாசனம் (வஸிய்யத்) என்பதுகிடையாது என்று குறிப்பிட்டார்கள்.'

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூ உமாமா பாஹிலி (ரளி) அவர்கள் (நூல்: இப்னுமாஜா)

வாரிசு அல்லாதோருக்கு மரணசாசனம் உண்டு. அந்த மரணசாசனம் அவர் விட்டுச் சென்ற சொத்தின் மூன்றில் ஒரு பகுதியை விட அதிகமாகி விடக் கூடாது எனும் நிபந்தனையை இஸ்லாம் விதித்துள்ளது.

**கல்வி விழிப்புணர்வு :**

நபி(ஸல்) அவர்கள், இறுதி ஹஜ்ஜின்போது, எழுந்து நின்று உரையாற்றும்போது, 'மக்களே! கல்வி(யாளர்கள்) கைப்பற்றப்படும் முன்பே, கல்வி உயர்த்தப்படும் முன்பே கல்வியை எடுத்துக் கொள்ளுங்கள் எனக் குறிப்பிட்டார்கள்.'

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூ உமாமா பாஹிலி (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மது)

**பெற்றோர் மற்றும் உற்றார் உறவினரிடம் உறவாடும் உரிமை குறித்து ஆர்வமூட்டுவது :**

நபி (ஸல்) அவர்கள், தமது இறுதி ஹஜ்ஜின்போது உரையாற்றுகையில், "நீர் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் தகுதியானவர் உமது தாயார் ஆவார். பிறகு உமது தந்தை ஆவார். பிறகு உமது சகோதரி ஆவார். பிறகு உமது சகோதரர் ஆவார். பிறகு உமது நெருங்கிய உறவினர் ஆவார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் உஸாமா பின் ஷரீக் (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானி)

**அமைதியை கடைபிடிக்கும் படி வலியுறுத்துவது :**

ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : அரஃபா தினத்தில் நபி (ஸல்) அவர்களுடன் நான் திரும்பும் போது, நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் ஒட்டகத்தை அடித்து விரட்டக்

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேருதவியால்...

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

LALPET

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

IATA

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 08-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 23-08-2024 | வெள்ளி | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

உம்ரா விசா, தனிநபர் மற்றும் குரூப் விசா, விசிட்டிங் விசா, துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் விமான டிக்கெட் எடுத்து தரப்படும்.

பஸ், ட்ரெயின் டிக்கெட் மற்றும் தூதரக சேவைகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். **O.M. முஹம்மது சுஹைபு** செல்: 9994254304

கூடிய கடும் (அதட்டல்) சப்தத்தையும், ஒட்டகம் அலறுவதையும் செவியுற்றார்கள். உடனே சாட்டையால் சைகை செய்து, 'மக்களே! அமைதியை கடைபிடியுங்கள்! நன்மை என்பது விரைவதிலோ, விரட்டுவதிலோ இல்லை' என்று கூறினார்கள்.

(புகாரி 1671)

**கட்டாயம் தவிர்க்க வேண்டிய நான்கு பெரும் பாவங்கள் :**

"நபி (ஸல்) அவர்கள், இறுதி ஹஜ்ஜின்போது தமது உரையில் குறிப்பிடும்போது, அறிந்து கொள்க! தவிர்க்க வேண்டிய பெரும் பாவங்கள் நான்கு ஆகும்.

1. நீங்கள் இறைவனுக்கு எதையும் இணை வைக்கக்கூடாது.
2. அல்லாஹ் தடை செய்த எந்த உயிரையும் நீங்கள் நியாயமின்றிக் கொல்லக்கூடாது,
3. நீங்கள் விபச்சாரம் செய்யக் கூடாது.
4. நீங்கள் திருடக் கூடாது எனக் கூறினார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஸல்மா பின் கைஸ் (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மது)

**சகோதரத்துவத்தை வலியுறுத்துவதும், அதை பாதுகாப்பதும் :**

நபி (ஸல்) அவர்கள், அரஃபா உரையில்கூறும்போது,

"அறிந்து கொள்க! நிச்சயமாக ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார். ஒரு முஸ்லிம் தமக்கு எது ஆகுமானதோ அதைத் தவிர தமது சகோதர முஸ்லிமுக்கு எதையும் ஆகுமானதாக கருதக் கூடாது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் அம்ர் பின் அஹ்வஸ் (ரளி) அவர்கள் (நூல்: திர்மிதீ)

**அமானிதத்தை பாதுகாப்பது :**

நபி (ஸல்) அவர்கள், தமது அரஃபா உரையில் "அமானிதத்தை நிறைவேற்றுவது குறித்தும் குறிப்பிட்டார்கள். 'எவரிடம்நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதப் பொருள் உள்ளதோ, அவர் அதை உரியவரிடம் ஒப்படைத்து விட வேண்டும். அமானிதத்தில் மோசடி செய்யக்கூடாது. மேலும், அறியாமைக்காலத்து அனைத்து விதமான தடயங்களையும், பழக்கங்களையும், செயல்களையும் நான் எனது காலுக்கடியில் புதைத்து விட்டேன். அறியாமைக் காலத்து நடவடிக்கையான கஅபாவை நிர்வகித்தல், ஹாஜிகளுக்கு நீர் புகட்டுதல் ஆகிய நடவடிக்கைகளைத் தவிர... வேண்டுமென்றே செய்யப்படும் கொலைக்கு பழி வாங்கப்படும். இதற்கு ஒப்பானதற்கு (அதாவது கல்லால், கம்பால் கொல்லுவது) நஷ்டஈடு நூறு ஒட்டகங்களை இரத்தப் பொருளாக

கொடுப்பதாகும். இதற்கு மேல் எதிர்பார்ப்பது அறியாமைக்கால நடவடிக்கையாகும். முஃமின்கள் யாவரும் சகோதரர்கள் ஆவர். எவருக்கும் தமது சகோதரரின் பொருள் அவர் மனமுவந்து கொடுத்தாலே தவிர ஆகுமாகாது.

கடந்து விட்ட நாட்களில் உங்களுடைய இந்த ஒரு நாள் பாக்கியமாக இருப்பது போன்றே உங்களுடைய உலக வாழ்க்கையின் நிலையாகும். எவருடைய எண்ணம் மறுமையாக உள்ளதோ, அவருக்கு அல்லாஹ் சிதறிக் கிடப்பதை ஒன்று திரட்டி கொடுப்பான். அவருடைய உள்ளத்தில் அல்லாஹ் செல்வ நிலையை உருவாக்குவான். அவர் ஆசைப்படாமலேயே அல்லாஹ் அவருக்கு உலக வளத்தை கொடுப்பான்.

எவருடைய எண்ணம் உலக மோகமாக உள்ளதோ அவருக்கு அல்லாஹ் பொருளை பிரித்து விடுவான். அவருடைய இரு கண்களுக்கு முன்பு வறுமையை ஏற்படுத்தி விடுவான். உலகிலிருந்து அவருக்கென என்ன தீர்மானிக்கப்பட்டதோ அதைத் தவிர வேறெதையும் இறைவன் கொடுக்கமாட்டான்.

மக்களே! உங்களில் சிலர் சிலரை கொலை செய்ய வேண்டாம். நீங்கள் ஹஜ்ஜில் ஷைத்தான்களுக்கு கல்லெறியும் போதும் கூட மொச்சைக் கொட்டை போன்ற அளவில் சிறிதாக இருக்கும் பொடி கற்களையே எறியுங்கள்.

நீங்கள் ஜமாஅத்தை அவசியமாக்கிக் கொள்ளுங்கள். ஒற்றுமையாக இருங்கள்."

தஜ்ஜாலை பற்றியும் நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். "அவன் ஒற்றைக் கண்ணன். உங்களது இறைவன் அப்படியல்ல!" தமது அரஃபா உரையின் இறுதியில் நபி (ஸல்) அவர்கள் "நான் உங்களிடம் ஒன்றை விட்டுச் செல்கிறேன். அதை நீங்கள் பலமாகப் பற்றிக் கொண்டால் நீங்கள் ஒரு போதும் வழி தவறவே மாட்டீர்கள். அது அல்லாஹ்வின் வேதமாகும். மறுமை நாளில் உங்களிடம் என்னைப் பற்றி விசாரிக்கப்படும்போது நீங்கள் என்ன கூறுவீர்கள்?" என்று கேட்டார்கள். "அதற்கு மக்கள், "நீங்கள் இறைச் செய்திகள் அனைத்தையும் எங்களிடம் தெரிவித்து விட்டீர்கள்; உங்களது தூதுத்துவப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள்; சமுதாயத்தார் மீது அக்கறையுடன் நடந்து கொண்டீர்கள்" என சாட்சி அளிப்போம் என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது சுட்டு விரலை வானை நோக்கி உயர்த்தி சைகை செய்து 'இறைவா! இதற்கு நீயே சாட்சி' என்று மூன்று தடவை கூறினார்கள்.

ஈத் முபாரக்!

# கஃபதுல்லாஹ்



★ நுழைவுக் கட்டணம் இல்லை.

★ VIPக்கென்று தனி வழி இல்லை.

★ VIPகளுக்கென்று தனி இருக்கைகள் இல்லை.

★ முக்கியமாக காசு வசூலிக்கும் உண்டியல் இல்லை.

★ VIP வருகிறார் என்பதற்காக வழியை ப்ளாக் செய்ய மாட்டார்கள்.

★ எல்லோருக்கும் ஒரே வழி, யார் எங்கே வேண்டுமானாலும் அமரலாம்.

★ யார் வேண்டுமானாலும் முதலில் செல்லலாம்.

★ முன்னால் வருகிறவர் முதலில் அமருவார். தாமதமாக அதிபரே வந்தாலும் ரோட்டில்தான் அமருவார்.

★ சாலைப் பணியாளரோடு சாதனையாளர் அமருவார்.

★ ஏழை – பணக்காரன் என்ற பாகுபாடு இங்கு இல்லை.

★ உயர்ந்தவன் – தாழ்ந்தவன் என்ற சாதிப் பாகுபாடு இங்கு இல்லை.

★ வெள்ளையர் – கருப்பர் என்ற நிறப்பாகுபாடு இங்கு இல்லை.

★ மொழிப் பாகுபாடும் இல்லை.

★ உலக சமத்துவ சமாதானத்தின் ஒரே வாழிடம்.

**கருணை மிக்க அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஜ் செய்யும் பாக்கியத்தை தந்தருள்வானாக!**

# மதிப்பெண்கள் மட்டுமே வாழ்க்கையல்ல!

தொகுப்பு : செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை

பத்தாம் வகுப்பு, +1 மற்றும் +2 தேர்வுகளின் மதிப்பெண்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில், மாணவர்களில் இரண்டு விதமான நிலைகள் இருக்கலாம். ஒருபுறம் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் அடுத்து என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் இருப்பார்கள். அவர்களுக்கு வழி காட்டுவது அந்தந்த மஹல்லா ஜமாஅத்தின் மீதுள்ள பொறுப்பாகும்.

அதேபோல மாணவர்களின் மற்றொரு சாரார் குறைந்த மதிப்பெண்கள் எடுத்துவிட்டோம் என்ற கவலையில் மனம் துவண்டு விடுவதும் உண்டு. சிலர் தற்கொலை செய்யும் அளவுக்குச் சென்று விடுவதும் உண்டு. எனவே அவர்களுக்கும் வழிகாட்டுவது இந்நேரத்தில் அவசியமானதாக ஆகி விட்டது.

அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுடைய பெற்றோரின் கவனத்திற்கு...

பெற்றோர்களின் சிந்தனையில் உயர்ந்த இலட்சியம் இருக்கலாம். ஆனால் நிர்பந்திக்கக் கூடாது.

இன்றைய அநேக பெற்றோர்கள் தங்களின் கனவுகளை நனவாக்கும் இயந்திரக் கருவிகளாக தங்களின் பிள்ளைகளைப் பார்க்கின்றார்கள். வளரும் போதே, படிக்கும்போதே நீ டாக்டராக வேண்டும்; இன்ஜினியராக வேண்டும்; நீ கலெக்டராக வேண்டும் என்று கூறுகின்றார்கள். விருப்பமில்லாத துறையில் பிள்ளைகளை கட்டாயப்படுத்தக்கூடாது. ஒரு பல்கலைக்கழக துணை வேந்தர் கூறியது : உங்கள் பையனுக்குள்ளே ஒரு டாக்டரோ, ஒரு இன்ஜினியரோ, ஒரு ஆசிரியரோ, ஒரு மெக்கானிக்கோ, ஒரு வக்கீலோ, ஒரு வியாபாரியோ ஒளிந்திருக்கிறார். அவரை அவர்களாக உருவாக்குவதற்கு பதிலாக நீங்கள் வேறு விதமாக திசை திருப்புகிறீர்கள்; தோற்றுப் போகிறீர்கள். மெக்கானிக்காக வர வேண்டியவனை நீங்கள் டாக்டராக உருவாக்க உங்கள் சக்தியை வீணடிக்கிறீர்கள். அவன் இரண்டு பேராகவும் (டாக்டர், மெக்கானிக்) வர முடியாமல் ஆகி விடுகிறான். ஆகவே அவனை ஆராயுங்கள்.

அவன் விருப்பத்தில் கவனம் வையுங்கள். அவனுக்குள் இருக்கும் திறமையை வெளியே கொண்டு வாருங்கள். ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் இஸ்லாத்திற்கு வருவதற்கு முன் முஸ்லிம்களை வதைப்பதில் இன்பம் கண்டவர். அவர்கள் இஸ்லாத்திற்கு வந்தபின் அந்த முரட்டுத்தனத்தை விடச் சொல்லி நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தவில்லை. மாறாக, அந்த முரட்டுத் தனத்தை இஸ்லாமிய நெறிகளை பாதுகாப்பதிலும், இஸ்லாமிய எதிரிகளை வீழ்த்துவதிலும் திருப்பினார்கள்.

எல்லா வகையான ஆற்றல் கொண்ட மனிதர்களின் தேவை இருக்க ஒரு குறிப்பிட்ட வகை கொண்ட ஆற்றல் கொண்டவர்களாக தம் பிள்ளைகள் உருவாக வேண்டுமென பெற்றோர் நினைக்கிறார்கள்.

ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரளி) அவர்களின் சகோதரி அம்ரா (ரளி) அவர்கள் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கின்றார்கள். அம்ராவின் கணவர் பஷீர் (ரளி) அவர்கள், நுஃமான் என அந்தக் குழந்தைக்கு பெயரிட்டு அண்ணலாரிடம் ஆசி பெற்று வருமாறு தம்மனைவி அம்ராவை நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களின் கையில் நுஃமானைக் கொடுத்த அம்ரா (ரளி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! என் பிள்ளை நுஃமானுக்கு பொருளாதார வளத்திற்கும், அதிக பிள்ளைச் செல்வத்திற்கும் துஆச் செய்யுங்கள்" என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் ஒரு பேரீத்தம் பழத்தைக் கொண்டு வரச் சொல்லி, அதை வாயில் போட்டு மென்று நுஃமானுக்கு கொடுத்து "அம்ரா! என்ன உன்னுடைய ஆசை இப்படி இருக்கிறது? உன் சகோதரர், அதாவது நுஃமானின் மாமா அப்துல்லாஹ் இப்னு ரவாஹாவைப் போல உன் மகன் புகழோடு வாழ வேண்டும்" என்ற ஆசை உமக்கு இல்லையா? பெரும் போராளியாக இருந்து மார்க்கத்திற்காக உயிர் நீத்து, சுவனத்து வாழ்வைப் பெற்ற அந்த உன்னத நிலையை உம் மகன் அடைய வேண்டும் என்ற ஆசை உமக்கில்லையா?" என்றார்கள்.

எல்லோரையும் போல காசு, பணத்திற்கு ஆசைப்படாமல் உயர்ந்த ஆசைகளைக் கொண்டு தங்களின் மழலைகளை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்தை ஹள்ரத் அம்ரா (ரளி) அவர்களின் ஆழ்மனதில் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் விதைத்தார்கள். ஹள்ரத் அம்ரா (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களின் எண்ணப்படி நுஃமான் (ரளி) அவர்களை வளர்த்தார்கள்.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

அதனால் அல்லாஹ், ஹள்ரத் அம்ரா (ரளி) அவர்கள் தன் மகனுக்காக நபி (ஸல்) அவர்களிடம் எந்த பொருளாதார வளத்தையும், பிள்ளைச் செல்வங்களையும் வேண்டினாரோ அதையும் வழங்கினான். பிற்காலத்தில் ஹள்ரத் நுஃமான் இப்னு பஷீர் (ரளி) அவர்கள் மாபெரும் மார்க்கப் போராளியாக, மனித நேய மாண்பாளராக, வாரி வழங்கும் வள்ளலாக ஹள்ரத் முஆவியா (ரளி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் கூஃபா மற்றும் ஹிம்ஸ் பகுதிகளின் மாட்சிமை மிக்க கவர்னராக விளங்கினார்கள்.

(நூல் : அல் இஸ்தீஆப், உஸ்துல் ஃகாபா)

## சிறுவர்கள் தானே என்று அவர்களிடம் ஆலோசனைக் கேட்காமல் ஒதுக்கி விடக் கூடாது

நபி (ஸல்) அவர்களின் சபை நபித்தோழர்களால் நிரம்பி இருந்தது. எப்போதும் அண்ணலாரின் அருகே வலப்பக்கத்தில் இருக்க வேண்டிய ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் இப்போது இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார்கள். ஒரு கோப்பையில் பால் கொண்டு வரப்படுகின்றது. அண்ணலார் அதைப் பருகி விட்டு வலது பக்கத்தைப் பார்க்கின்றார்கள். அங்கே ஃபள்ல் (ரளி) அவர்கள், அப்பாஸ் (ரளி) அவர்களின் மகன் அமர்ந்திருக்கின்றார்கள். வயதில் மிகவும் சிறியவரான ஃபள்ல் (ரளி) அவர்களிடம் இப்போது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "பள்லே! எப்போதும் என் அருகே என் தோழர் அபூபக்ர் (ரளி) தான் அமர்ந்திருப்பார். அவருக்கு தான் நான் கொடுப்பேன். இப்போது நீ அமர்ந்திருக்கின்றாய்? நான் அபூபக்ர் அவர்களுக்கு கொடுக்கட்டுமா?" என்று கேட்டார்கள். "இல்லை! அல்லாஹ்வின் தூதரே! நான் எனக்கான வாய்ப்பை விட்டுத் தர முடியாது" என்று சொல்லி விட்டார் ஃபள்ல் (ரளி) அவர்கள். பின்னர் அந்தக் கோப்பை அனைவரிடமும் சுற்றி வந்து இறுதியாக அபூபக்ர் (ரளி) அவர்களிடம் வந்து சேர்ந்தது. கடைசியாக அபூபக்ர் (ரளி) அவர்கள் பாலைப் பருகினார்கள்.

இங்கே சிறுவன் என்பதற்காக நபி (ஸல்) அவர்கள் தாங்கள் விரும்பியவாறு நடக்கவில்லை. ஃபள்லிடம் கேட்கிறார்கள். அவருக்கு முடிவெடுக்கும் உரிமை உண்டு என்பதை நபி (ஸல்) அவர்கள் உணர்த்துகின்றார்கள்.

ஆனால், இன்றைய பெற்றோர்கள் தங்களின் மகனிடமோ, மகளிடமோ நீ என்னவாக ஆகவிரும்புகின்றாய் என்று கேட்பதும் இல்லை. அவர்களின் விருப்பத்திற்கு இசைவு தருவதும் இல்லை.

நல்ல மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள் முக்கியமான அரசுத் துறைகளில் பங்கெடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சச்சார் குழு அறிக்கையில் முஸ்லிம்களின் கல்வி பொருளாதார நிலை தெளிவாக படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது. முஸ்லிம்களில் 41% படிப்பறிவில்லாதவர்கள், 8ஆம்வகுப்புவரை படித்தவர்கள் 15%, +2வரை படித்தவர்கள் 7.8%, டிப்ளமோ படித்தவர்கள் 4.4%, பட்டப்படிப்பு படித்தவர்கள் 1.7% பேர் மட்டும். 38.4% பேர் வறுமையில் வாழ்கின்றனர். கிராமப்புற முஸ்லிம்களில் 62% பேர் அடிப்படை வசதியில்லாத வீடுகளில் வாழ்கின்றனர். பாதுகாப்புத் துறையில் 4% பேர் முஸ்லிம்கள். தமிழக உள்துறையில் உயர்பதவிகளில் 0% ஒருவர் கூட முஸ்லிம்கள் இல்லை. (2006 ஆம் ஆண்டு கணக்குப்படி கீழ்மட்ட பதவியில் 2.6% பேர் உள்ளனர்.)

## கல்வியில் கிறிஸ்தவர்கள் காட்டும் அக்கறை

உலகம் முழுவதும் வாழும் சிறுபான்மை இனத்தவரின் நிலையை ஆய்வு செய்த திருமதி ஸ்மித் என்ற சமூகவியல் விஞ்ஞானியை கொச்சியில் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டபோது இந்தியாவில் வாழும் சிறுபான்மையினரைப் பற்றி கூறியுள்ளார். கிறிஸ்தவர்களைப் பற்றி கூறும்போது கல்வி, பொருளாதார ரீதியாக அசைக்க முடியாத ஓர் அடித்தளத்தை அமைத்து சக்தி வாய்ந்த குழுக்களாக வளர்ந்து வரும் சமூகம் என்றும், முஸ்லிம்களைப் பற்றி கூறும்போது "பாரம்பரியமாக நிலை நின்று வந்த செல்வாக்கு, கலாச்சாரச் சுவடுகள் என அனைத்தையும் இழந்து அவற்றின் நஷ்டக் கணக்குகளை மட்டும் கைவசம் வைத்திருக்கும் பலவீனமான மக்கள், சமுதாய அக்கறை இல்லாத தலைமை இதற்குக் காரணம்" என்று கூறினார்.

## குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் கவனத்திற்கு...

குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் சோர்ந்துவிடக்கூடாது. முன்னேறுவதற்கு எவ்வளவோ வழிகள் உள்ளன.

இன்றைய பெற்றோர்களும், ஆசிரியர்களும் தேர்வுகளில் பெறப்படும் அதிக மதிப்பெண்கள் தான் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக ஒரு தவறான பார்வையை மாணவச் சமூகத்தின் மீது திணித்து விடுகிறார்கள். இதனால் மாணவச் சமூகம் தேர்வு தேதி அறிவிக்கப்

பட்டநாள் முதல் ரிசல்ட் வரும் நாள் வரை பதற்றத்தோடும், அச்சத்தோடும், மனச் சோர் வோடும் காணப்படுகின்றனர். இந்திய மருத்துவ சங்கம் மேற் கொண்ட ஆய்வின்படி ஒவ் வொரு ஆண்டும், 70 சதவீத மாணவர்களுக்கு தேர்வு ஜுரம் வருவதாகத் தெரிவித்துள்ளது. எதிர்பார்த்த மதிப்பெண்கள் கிடைக்காதபோது மிகுந்த ஏமாற்றமும், விரக்தியும் ஏற் பட்டு பெற்றோர்களை தாங்க முடியாத சோகத்தில் ஆழ்த்தும் முடிவை (தற்கொலை செய்து கொள்வது) மாணவச் சமூகம் கையில் எடுப்பது சமீப காலமாக பெருகி வருவதைப் பார்க்க முடிகிறது. இந்நிலையில் நாம் வாழ்க்கையில் முன்னேறு வதற்கு எவ்வளவோ வழிகள் உள்ளன என்பதை மாணவர் களுக்கு உணர்த்த வேண்டும்.

எந்த ஒரு துறையிலும் தோல்வி ஏற்பட்டு விட்டது என்பதற்காக சோர்ந்து போய் விடக்கூடாது.

குழந்தை நடக்க முயற்சி செய்யும்போது பலமுறை விழுந்து எழுந்துதான் நடக்கக் கற்றுக் கொள்கிறது. எந்தக் குழந்தையும் "நான் நடக்க முயற்சிக்கும் பொழுது 50 முறை விழுந்துவிட்டேன். எனவே நடப்பது எனக்கு ஒத்து வராது என முடிவெடுத்திருக் கிறதா? 50 முறை என்ன, 500 முறை விழுந்தாலும் எழுந்து நடந்தே தீருவேன்" என்ற உற்சாகம் இருப்பதால் குழந்தை புதிய புதிய விஷயங் களைக் கற்றுக் கொள்ள ஆர்வமாய் உள்ளது. தன்னுடைய ஐந்து வயதிற்குள் குழந்தை கிட்டத்தட்ட 93 திறமைகளை வளர்த்துக் கொள்கிறது. நாம் சைக்கிளோ, ஸ்கூட்டரோ, காரோ ஓட்ட கற்றுக் கொண்டபோது ஒரே முயற்சியில் கற்றுக் கொள்ளவில்லை. பலமுறை விழுந்து அடிபட்டும் கற்றுக் கொண்டோம். இப்படி எந்தத் திறமையையும் ஒரே முயற்சியில் நாம் பெற்றதில்லை. ஒரு ஊருக்கு காரில் போனால் மேடு, பள்ளம், மழை, புயல், டயர் பஞ்சர், கூட்ட நெரிசல் என பல தடைகள் வரும். இவற்றைக் கடந்துதான் நாம் அந்த ஊருக்குச் சென்று சேருகிறோம். அதற்காக நாம் பயணத்தை ரத்து செய்து விடுவதில்லை. திரும்பி வந்து விடுவதில்லை. தடைகளைக் கடந்து அந்த இடத்தை அடைகிறோம். வெற்றியின் அளவு பெரியதாக இருக்க இருக்கப் போராட்டங் களும் பெரியதுதான். கட்டடத் தின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க அதன் அஸ்திவாரத் தின் ஆழமும் அதிகம். அஸ்தி வாரம் தோண்டிக் கொண்டிருக் கும்போதும், அதனுள்ளே சுவர் எழுப்பிக் கொண்டிருக்கும் போதும் வெளி உலகுக்குத் தெரியாது. நீங்கள் முயற்சி செய்

தும் இதுவரை சாதிக்காமல் இருந்தால், தோல்வியடைந்து கொண்டிருந்தால் "அஸ்திவாரம் தோண்டிக் கொண்டிருக்கிறீர்கள்" என்று அர்த்தம். அதற்காக கவலைப்பட வேண்டாம். இப்போது நீங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களால் நிச்சயமாக உயர்ந்த கட்டிடம் கட்ட முடியும்.

ஒரு விவசாயி நெல் விதைத்தால் மூன்று மாதத்தில் அறுவடை செய்யலாம். ஆனால் மாமரம், தென்னைமரம் வைத்தால் சில வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதன் பலன் பல வருடங்கள் தொடர்ந்து கிடைக்கும். அம்மை ஊசி போடும்போது அம்மை நோயை உண்டாக்கும் கிருமிகளைச் சிறிதளவு உடலில் செலுத்துகிறார்கள். அந்தக் கிருமிகள் உள்ளே போனால் நம் உடலில் உள்ள வெள்ளையணுக்கள் அதனை எதிர்த்துப் போராடுகின்றன. நோய்க் கிருமிகள் குறைவாக இருப்பதால் வெள்ளையணுக்கள் அதிகமாக இருப்பதால் நோய்க் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. அதன் பிறகு வெள்ளையணுக்கள் விழிப்புற்றுத் தயார் நிலையில் இருக்கின்றன. உண்மையான நோய்க்கிருமிகள் வந்தாலும் போரிட்டு வென்று விடுகின்றன. அம்மை ஊசி போடும் போது வலிதான்; வேதனைதான். சில சமயம் காய்ச்சல் வரும். ஆனால் அவற்றால் அதன்பிறகு பெரிய நன்மை ஏற்படுகிறது. அதுபோல் வாழ்வில் ஏற்படும் கஷ்டங்களும், நஷ்டங்களும், தோல்விகளும் வலியை, வேதனையைக் கொடுத்தாலும் பின்னர் விழிப்புணர்வையூட்டி நமக்கு வெற்றி பெறத் துணை புரிகின்றன. வெயிலிலிருந்து நிழலுக்குப் போனால் சுகம். இருளிலிருந்து ஒளிக்குப் போனால் சுகம். இப்படித் தோல்வியடைந்து, சங்கடமடைந்து வெற்றி பெற்றால் அதனுடைய சந்தோஷமே தனி தான். தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார பல்பைக் கண்டுபிடிக்க 999 முறை தோல்வியுற்றார். "லேட்டக்ஸ்" என்ற கெமிக்கலைக் கண்டுபிடிக்க 16,999 முறை தோல்வியுற்று 17,000 ஆவது முறைதான் கண்டுபிடித்தார்.

## எந்த ஒரு சூழ்நிலையிலும் தற்கொலை என்ற முடிவுக்குச் சென்று விடக் கூடாது

அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட நாம் அனைவரும் அவனுடைய அடிமைகள். நம்முடைய உயிரும், உடலும் அவனுக்கே சொந்தம். அந்த உயிருக்கு நாமே ஒரு சேதத்தை ஏற்படுத்திக் கொள்ள நமக்கு உரிமையில்லை. ஆனால் இன்று பலர் தேர்தல் தோல்வி, காதல் தோல்வி, கடன் தொல்லை ஆகிய பல்வேறு காரணங்களுக்காக அல்லாஹ்

வழங்கிய உயிரை இவர்களாக மாய்த்துக் கொள்கின்றனர். அல்லாஹ்வின் உரிமையில் தலையிடுவதால் அல்லாஹ் அதற்கு கடும் தண்டனை கொடுக்கிறான்.

## ஆசிரியர்களின் கவனத்திற்கு

ஆசிரியர்கள் அதிக மதிப்பெண்கள் எடுக்கிற மாணவர்களை மட்டுமே ஊக்கப் படுத்தி அவர்களிடம் மட்டுமே அதிக அக்கறையை காட்டு கின்றார்கள். கல்வி நிறுவனங் களும் அவர்களை மட்டுமே முன்னிறுத்தி முக்கியத்துவம் அளிக்கின்றன. கல்வித்தரம் குறைந்த மாணவர்களை மேம்படுத்தும் முயற்சிகளில் ஆசிரியர்களும், நிறுவனங் களும்ஈடுபாடுகாட்டுவதில்லை. இதுவும் மாணவச் சமூகம் மனச் சுமைகளோடும், அச்சத்தோடும் இருப்பதற்கு ஒரு காரணமாகும்.

ஹள்ரத் ஹம்ஜா (ரளி) அவர்கள் உஹதில்ஷஹீதாக்கப் பட்டுவிட்டார்கள். அவர்களின் மனைவி ஹள்ரத் ஸல்மா பின்து உமைஸ் (ரளி) அவர்களும், ஹள்ரத் ஹம்ஜா (ரளி) அவர் களின் ஒரே மகளான ஹள்ரத் அமாரா (ரளி) அவர்களும் மக்காவில் வாழ்ந்து வந்தார்கள். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் "ஹம்ஜா (ரளி) அவர்களின் ஒரேயொரு மகள் இப்போது அநாதையாகி மக்கத்து இணை வைப்பாளர்கள் மண்ணில் நிற்கிறாள். நான் சென்று அழைத்து வரட்டுமா?" என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் அனுமதி தரவே, ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் மக்கா சென்று அமாராவை மதீனாவிற்கு அழைத்து வந்தார்கள். அமாரா (ரளி) அவர்களை யார் பொறுப்பேற்பது? என்பதில் மூன்று நபித்தோழர்கள் ஒவ் வொருவரும் தாம் தான் எடுப்பேன் என சண்டையிட்டுக் கொண்டார்கள். இறுதியாக நபி (ஸல்) அவர்களிடம் இந்த விவகாரத்தைக் கொண்டு வந் தனர் அந்த மூவரும். அலீ (ரளி) அவர்கள், ஜைத் இப்னு ஹாரிஸா (ரளி) அவர்கள், ஜஅஃபர் இப்னு அபூதாலிப் (ரளி) அவர்கள். இம் மூவரும் தான் சண்டையிட்டுக் கொண்டவர்கள்.

நபி (ஸல்) அவர்கள், அலீ (ரளி) அவர்களிடம் "எந்த முறை யில் நீர் அமாராவை வளர்ப்ப தற்கு அனுமதி கோருகின்றீர்?" என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! அமாரா என் தந்தையின் சகோதரரின் மகள். ஆகவே அதிகத் தகுதி யுடையவன் நானே" என்று அலீ (ரளி) பதில் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள், ஜைத் (ரளி) அவர்களிடம் "எந்த முறை யில் நீர் அமாராவை வளர்ப்ப

# நிலையான நன்மைகள் பெற்றிட
# நல்ல வாய்ப்பு!

## ஜாமிஆ தக்வியத்துல் இஸ்லாம்

வேலூர் மாநகர் அரியூரில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறப்பான அரபிக் கல்லூரி ஆகும். இங்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முறையாக ஓத கற்றிருக்கிறார்கள். 50–க்கும் அதிகமானவர்கள் குர்ஆனை முழுவதும் மனனம் செய்து ஹாஃபிழ்களாகவும், 25க்கும் மேற்பட்டவர்கள் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறிய ஆலிம்களாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய மத்ரஸா தற்போது இட நெருக்கடியில் சிரமப்பட்டு வருவதால் மத்ரஸாவிற்காக இடம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. **14400**சதுர அடி கொண்ட இடம் ஒருகோடியே நாற்பது இலட்சம் **(1,40,00,000)** ரூபாய் என கிரயம் பேசப்பட்டுள்ளது. இந்தத் தொகை எதிர்வரும் புனித ரமளான் மாதத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். ஆகையால் நல்லுள்ளம் கொண்ட கனவான்கள் தங்கள் மனம் திறந்து விசாலமான எண்ணத்துடன் மத்ரஸாவிற்காக உதவி செய்ய வேண்டுமாய் கோருகிறோம்.

தங்கள் பெயரில் அல்லது மரணித்துவிட்ட பெற்றோர்கள், உறவினர்களின் பெயரில் அல்லது வீட்டிலுள்ள உறவினர்களின் பெயரில் ஆளுக்கு ஒரு சதுர அடி என்ற ரீதியில் வாங்கி மத்ரஸாவிற்கு வக்ஃபு செய்து நிரந்தரமான நீடித்த நன்மையை பெற்றுக் கொள்வீர்களாக.

A/C Name : **AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**
Bank Name : INDIAN BANK Branch : ARIYUR
A/C No. : **6845938157**
IFSC Code : IDIB000A198

+91 9080005537
+91 9080005537@okbizaxis

**மேலும் விபரங்களுக்கு :**

**மவ்லானா மவ்லவீ உபைதுல்லாஹ் காஸிமி,** நிறுவனர் & முதல்வர்,

## ஜாமியா தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

**அஜீஸ் நகர், அரியூர், வேலூர் - 632055. தமிழ்நாடு.**

**செல் : 9443491834/9080005537**

தற்கு அனுமதி கோருகின்றீர்?" என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! ஹம்ஜா (ரளி) அவர்களும், நானும் ஒரே தாயிடத்தில் பால் குடித்திருக்கின்றோம். மேலும், எனக்கும், அவருக்கும் இடையே நீங்கள் தான் சகோதரத்துவ உறவை ஏற்படுத்தி இருக்கின்றீர்கள். ஆகவே இரு தகுதிகள் இருப்பதால் நானே அதிகத் தகுதியுடையவன்" என்று ஜைத் (ரளி) பதில் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள், ஜஅஃபர் (ரளி) அவர்களிடம் எந்த முறையில் நீர் அமாராவை வளர்ப்பதற்கு அனுமதி கோருகின்றீர்? என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! ஹம்ஜா (ரளி) அவர்கள் என் தந்தையின் சகோதரர் ஆவார். மேலும் ஹம்ஜா (ரளி) மணம் முடித்திருக்கின்ற ஸல்மா பின்த் உமைஸ் (ரளி) அவர்களின் சகோதரி அஸ்மா பின்த் உமைஸ் (ரளி) அவர்களை நான் மணம் முடித்திருக்கின்றேன். அமாராவுக்கு என் மனைவி சின்னம்மா ஆவாள். ஆகவே நானே அதிகத் தகுதியுடையவன்" என்று ஜஅஃபர் (ரளி) அவர்கள் பதில் கூறினார்கள்.

மூவரின் உரிமை கோரலையும் செவிமடுத்து விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் அலீ (ரளி) அவர்களை அழைத்து "அலீயே! நீர் என் சகோதரரும், என் சுவனத்து தோழரும் ஆவீர்! ஜைத் (ரளி) அவர்களை அழைத்து "ஜைதே! நீர் அல்லாஹ்வின் நல்லடியாராவீர்!, ஜஅஃபர் (ரளி) அவர்களை அழைத்து "ஜஅஃபரே! நீர் என்னைப் போன்றே குணத்திலும், தோற்றத்திலும் ஒத்து இருக்கின்றீர்!" என்று கூறி விட்டு, அமாராவின் சின்னம்மாவை நீர் மணம் முடித்திருப்பதால் நீரே அமாராவை வளர்ப்பதற்கு தகுதியாவீர்! நீர் அமாராவை உம் பொறுப்பில் எடுத்து வளர்த்துக் கொள்வீராக!" என்று தீர்ப்பளித்தார்கள்.

(நூல்: தபகாத் இப்னு ஸஅத்)

இந்த சம்பவத்தில் பல உண்மைகளும் படிப்பினைகளும் பொதிந்திருக்கின்றன. அமாரா (ரளி) அவர்கள், நபி (ஸல்) அவர்களுக்கும் பெரிய தந்தையின் மகள் தான். நபி (ஸல்) அவர்கள் நினைத்திருந்தால் மூவரையும் திருப்பி அனுப்பி விட்டு தாங்களே வளர்க்கும் உரிமையை எடுத்திருக்கலாம். ஏனென்றால் குடும்ப உறவு நபிகளாருக்கு இருக்கின்றது. அல்லது ஜஅஃபர் (ரளி), அலீ (ரளி) இவ்விருவரில் ஒருவருக்கு அந்த உரிமையை வழங்கியிருக்கலாம். குடும்ப உறுப்பினர் என்கிற முறையில். அல்லது மூவரில் எவரிடமாவது வளர்க்கும் உரிமையை கொடுத்திருக்கலாம் அல்லாஹ்வின் தூதர் என்கிற அடிப்படை

யில். இந்த மூன்றில் நபி (ஸல்) அவர்கள் எதைத் தேர்ந்தெடுத் தாலும் யாரும் மறுப்பேதும் சொல்லப் போவதில்லை. மாறாக, மூவரையும் அழைத்து நேர்காணல் நடத்தி ஒவ்வொருவருக்கும் இடையே இருக்கும் உறவு முறைகளை அறிந்து வைத்துக் கொண்டே அவர்களிடம் விளக்கம் கேட்டு அதன் பின்னர் தீர்ப்பளிக்கின் றார்கள். அதுவும் உரிமை கோரி நின்ற மற்ற இருவருக்கும் தகுந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் வழங்கு கின்றார்கள். இங்கே, நபி (ஸல்) அவர்கள் ஒரு நபியாக, ஒரு குடும்ப உறவாக செயல்படா மல்தங்கள் பாசறையிலே பயின்று வரும் மூன்று மாணாக்கர்களின் மிக உயர்ந்த பண்பாட்டை அங்கீகரித்து, ஓர் ஆசிரியராக தட்டிக்கொடுத்து, உற்சாகமூட்டி மனமுடைந்து விடாதபடி நடக் கின்றார்கள். ஒரு வகுப்பறை யிலே பல தரப்பட்ட தரம் கொண்ட மாணவர்கள் இருப் பார்கள், அவரவர்களின் தரத்திற் கேற்ப அவர்களை உற்சாகமூட்டி, தட்டிக் கொடுத்து வாழ்த்துக் களையும், பாராட்டுகளையும் வழங்கி முறையாக அங்கீகரிக்க வேண்டும் என்கிற உயர்ந்த சிந்தனையை இந்த சம்பவம் உணர்த்துவதாக அமைந்துள்ளது.


ஈத் முபாரக்!

CERTIFIED ISO COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

CERTIFIED ISO COMPANY

# ஜிங்கா கோல்டு

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com

## மாணவர்கள் பொறுப்புணர்ந்து நடக்க வேண்டும்

முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் நான்கு காரியங்களுக்காகவே செலவு செய்யப்படுகின்றன.

1. நோய்களுக்கான சிகிச்சைக்காக,
2. திருமண விருந்துக்காக,
3. இயக்கங்களின் மாநாடுகளுக்காக,
4. கல்விக்காக.

பெரும்பாலான பெற்றோர்கள் வீடு, வாசல், தோட்டம் துறவுகளை, நகைகளை விற்று, கடன் வாங்கி, லோன் வாங்கி, வட்டிக்கு பணம் வாங்கி படிக்க வைக்கின்றனர். ஆனால், பெரும்பாலான மாணவர்கள் இதைக் கண்டு கொள்ளாமல் பள்ளிக்கூடத்திற்கு சரியாக செல்லாமல் வீண் விளையாட்டுக்களிலும், சினிமா கேளிக்கைகளிலும், ஊர் சுற்றுவதிலும் கழித்து விட்டு பரீட்சை நேரத்தில் சரியாக தேர்வெழுதாமல் தோற்றுப் போய் விடுகின்றார்கள். இது பற்றி அல்லாஹ்விடம் மாணவச் சமூகம் தங்களின் பள்ளிக் காலம் குறித்து கேள்வி கேட்கப் படுவார்கள்.

விடாமுயற்சியோடும், தன்னம்பிக்கையோடும், மனவலிமையோடும் படிக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :-

"பலவீனமான இறை நம்பிக்கையாளனை விட மனவலிமை உள்ள முஃமின் சிறந்தவனும், அல்லாஹ்விடம் உவப்பைப் பெற்றவனும் ஆவான்" [நூல் : முஸ்லிம்]

இயன்றளவு முயற்சி செய்து ஆர்வத்தோடும், ஆசையோடும் படிக்க வேண்டும்.

"உனக்கு பயன் தருகிற அனைத்தின் மீதும் நீ ஆசைப் படு! பின்னர் அதற்காக கஷ்டப் படு! அல்லாஹ்விடம் உதவி கேள்! சோர்ந்து போய் விடாதே! நீ ஆசைப்பட்டது உனக்கு கிடைக்காமல் போய் விட்டால் நான் இப்படி, இப்படி செய்திருந் தால் இப்படி நடந்திருக்கும் என்று கூறாமல் அல்லாஹ் நாடியது தான் நடந்தது என்று சொல்!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

என்னால் முடியும்; என்னிடம் நல்ல மதிப்பெண் எடுக்கும் திறமை இருக்கிறது; நான் சாதிப்பேன் என பாஸிட்டிவாக பேசுவதை, நினைப்பதைத் தான் அல்லாஹ்வும், அவனது ரஸூலும் விரும்புகின்றனர்.

அல்லாஹ் அருள்புரிவானாக!

# ஹஜ் பயண வரலாறு

**பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

"மக்களுக்கு ஹஜ்ஜைப் பற்றி அறிவிப்பீராக! அவர்கள் நடந்தும், ஒவ்வொரு மெலிந்த ஒட்டகத்தின் மீதும் உம்மிடம் வருவார்கள். அவை அவர்களைத் தொலைவிலுள்ள ஒவ்வொரு பாதையிலிருந்தும் கொண்டு வந்து சேர்க்கும்" என்று கூறினோம்.

– அல்குர்ஆன் (22: 27)

வாகனவசதிகள் இல்லாத முற்காலத்தில் நடந்தும், ஒட்டகங்களின் மேல் பயணம் செய்தும் நமது முன்னோர்கள் ஹஜ் கடமையை நிறைவு செய்தார்கள்.

ஆனால் இன்று இனம், குலம், நிறம், தேசம், பேசும் மொழி என்ற பாகுபாடுகள் இல்லாமல் பல லட்சக்கணக்கான முஸ்லிம்கள் புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்டு தூரத்தையும், நேரத்தையும் பாராமல் பல திசைகளிலிருக்கும் பல நாடுகளிலிருந்து தரை, கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக பல ஆயிரக்கணக்கான மைல்களை கடந்து வந்து புனித ஆலயமான கஅபாவின் முன் திரள் திரளாக கூடி ஆண்டு தோறும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்கிச் செல்கின்றனர்.

இன்றைக்கு எந்த விதமான சிரமங்களுமின்றி ஹஜ் பயணிகள் தங்களின் புனித பயணத்தை நிறைவு செய்து கொள்கின்றனர். இந்தியாவிலிருந்து விமானங்கள் ஹஜ் பயணிகளை ஆறு மணி நேரத்தில் ஜித்தா விமான நிலையத்தில் கொண்டு போய் சேர்த்து விடுகின்றன. கடல் மார்க்கம் வழியாக ஏறத்தாழ ஒன்பது நாட்களில் இந்தியாவிலிருந்து ஜித்தா துறைமுகத்தை அடைந்து விடலாம்.

ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஹஜ் பயணிகள் தங்களின் பயணத்தில் பல விதமான கஷ்டங்களையும், சிரமங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. விமானங்கள் இல்லாத அந்த கால கட்டத்தில் ஹஜ் பயணிகள் கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் தங்களின் பயணத்தை மேற்கொண்டனர். தரை மார்க்கமாக பயணம் சென்றவர்கள் கரடு முரடான பாதைகளையும், வெம்மையான பாலைவனங்களையும், மலைப் பாறைகளையும் கடந்து

செல்ல வேண்டியிருந்தது. பல நாடுகளை கடந்து செல்லும் போது மாறுபட்ட சீதோஷ்ணங்களை சகித்துக் கொண்டார்கள். மணலை வாரி இறைக்கும் அனல் பறக்கும் காற்றையும் எதிர் கொண்டார்கள். எந்த இடத்தில் தண்ணீர் கிடைக்கும்? எந்த இடத்தில் உணவு கிடைக்கும்? என்ற விவரங்கள் தெரியாத நிலையில் பயணம் செய்தனர். கேரவான் என்று சொல்லப்படும் பயணிகளின் கூட்டத்தோடு சேர்ந்து பயணம் மேற்கொண்டனர். கொள்ளைக்காரர்கள் வழிமறிக்கும் அபாயமும் அந்த காலத்தில் இருந்தது.

பாய்மரக் கப்பல்களில் கடல் மார்க்கம் வழியாக பயணம் செய்தவர்கள் வேறு விதமான கஷ்டங்களை எதிர்கொண்டனர். கடல் நோயினால் (sea sickness) குமட்டல், வாந்தி, மிகவும் குளிர்ந்த வியர்வை, தலைவலி, கொட்டாவி, பசியின்மை, அதிகமாக உமிழ்நீர் சுரத்தல் போன்ற பிரச்சனைகளால் அவதிப்பட்டனர். கடலில் திடீர் என்று உருவாகும் கடல் கொந்தளிப்பு, புயல், சூறாவளி, மழை, இடி, மின்னல், கொட்டும் பனி, ஆழிப் பேரலைகள், வேகமான நீரோட்டம், நீர் சுழல், சாதகமற்ற எதிர்காற்று போன்ற இயற்கையின் சீற்றங்களின் பாதிப்புகளை சகித்துக் கொண்டு பயணம் செய்தனர்.

டைட்டானிக் கப்பல் மூழ்குவதற்கு காரணமாக இருந்த பனிப்பாறைகளினாலும் அபாயங்கள் நிகழும் சாத்தியக்கூறுகளும் இருந்தன. சாதகமற்ற காற்று பாய்மரக் கப்பல்களை வேறு திசைக்கு இழுத்துச் சென்றால் பயண நாட்கள் அதிகமாகும். இதனால் உணவுப் பொருள்களும், குடிநீரும் போதிய அளவு இல்லாமல் போய் விடும். அப்போது பயணிகள் உணவுப் பொருட்களை குறைத்து உண்பார்கள். குடிநீரை குடிப்பதையும் குறைத்து கொள்வார்கள்.

பயணத்தில் ஏற்பட்ட இப்படிப்பட்ட வேதனைகளையும், சோதனைகளையும் சகித்துக் கொண்டு நமது முன்னோர்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றால் அவர்களின் ஈமானின் பலத்தை என்னவென்று சொல்வது?.

பழங்காலத்தில் ஹஜ் பயணிகள் தரை மார்க்கம் வழியாக குஜராத்திலுள்ள சூரத் துறைமுகத்தை அடைவார்கள். 5000 ஆண்டுகளுக்கு முன் தழைத்தோங்கிய சிந்து சமவெளி நாகரிகம் இருந்த காலகட்டத்தில் இந்த துறைமுகம் கட்டப்பட்டதாக சரித்திர குறிப்புகள் கூறுகின்றன. சூரத் துறைமுகம் மக்காவின் நுழைவு வாயில் என்று அந்த காலத்தில் அழைக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்

காலத்தில் சூரத் துறைமுகம் கைவிடப்பட்டது.

1501ஆம் ஆண்டு முதல் 1580ஆம் ஆண்டுவரை இந்திய மகா சமுத்திரம் போர்த்துகீசியர்களின் ஆதிக்கத்தில் இருந்தபடியால் இந்திய மகா சமுத்திரத்தின்வழியாக ஜித்தா துறைமுகம் இருக்கும் செங்கடலுக்குள் நுழைவது பிரச்சனைக்குரிய விஷயமாக இருந்தது. போர்த்துகீசிய ஆட்சியாளர்களின் அனுமதி பெற்றபின்னரே இந்திய மகா சமுத்திரத்தில் கப்பல்கள் பயணம் செய்ய முடியும். இந்த அனுமதி பெறுவதற்கு 5 முதல் 6 மாதங்களாகும்.

சூரத் துறைமுகத்திலிருந்து பாய் மரக்கப்பல்களின் மூலம் கடல் மார்க்கம் வழியாக ஹஜ் பயணிகள் மசூலிப்பட்டினம் துறைமுகத்தில் இளைப்பாறி கேரளாவிலுள்ள கோழிக்கோடு துறைமுகத்தில் இறங்கி தேவையான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொல்லம் துறைமுகத்தை ஹஜ் பயணிகள் அடைவார்கள். அங்கும் தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றி பாய்மரக் கப்பல்களில் நிரப்பிக் கொள்வார்கள். ஏனென்றால் கொல்லம் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் அரபிப் பெருங்கடல் வழியாக ஏமன் தேசத்திலுள்ள ஏடன் நாட்டு வளைகுடாவில் நுழைந்து ஏமன் தேசத்தில் செங்கடல் கரையிலிருந்த பண்டைய கால மோக்கா துறைமுகத்தை அடைய வேண்டும். இந்த துறைமுகம் மோச்சா என்றும், முக்கா என்றும் அழைக்கப்பட்டது. கொல்லம் துறைமுகத்திற்கும், மோக்கா துறைமுகத்திற்கும் இடையில் இளைப்பாறுவதற்கு எந்தவிதமான துறைமுகங்களும் கிடையாது. மோக்கா துறைமுகத்தை அடைய ஏறத்தாழ 2800 நாட்டிகல் (nautical) மைல்கள் அதாவது 3200 நாட்டிகல் மைல்கள் கடலில் பயணம் செய்ய வேண்டும். இது அரபிப் பெருங்கடலில் நீண்ட பயணமாகும். அந்த காலத்தில் பாய்மரக் கப்பல்கள் மணிக்கு 5 மைல்வேகத்தில் சென்றன.

ஆகவே மோக்கா துறைமுகத்தை அடைய ஏறத்தாழ 30 நாட்களுக்கு மேல் ஆகும். சாதகமற்ற காற்றினால் 45 முதல் 60 நாட்களும் ஆகலாம்.

மோக்கா துறைமுகத்திலிருந்து ஜித்தா துறைமுகம் ஏறத்தாழ 1000 மைல்கள் தூரத்தில் இருந்த படியால் ஹஜ்பயணிகள் மேலும் 10 நாட்கள் செங்கடலில் பயணம்

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

செய்ய வேண்டியிருந்தது. ஜித்தா துறைமுகத்திலிருந்து ஹஜ் பயணிகள் ஒட்டகங்களில் பயணம் செய்து புனித மக்கா நகரை அடைந்தனர்.

ஹஜ் பயணிகள் மக்கா நகருக்கு தரை மார்க்கமாக பல வழிப் பாதைகளில் சென்றனர்.

உலகிலேயே மிகப் பழமையான பயண வழிப் பாதை அன்பியாக்களின் வழிப் பாதை (தர்ப் அல் அன்பியா) என்ற வழிப்பாதையாகும். ஹள்ரத் மூஸா (அலை), ஹள்ரத் ஈஸா (அலை) ஆகியோர் இந்த வழிப் பாதையாக சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றி இருக்கிறார்கள். எழுபதுக்கும் மேற்பட்ட நபிமார்கள் இந்த வழியாக சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றி இருக்கிறார்கள். ஹள்ரத் மூஸா (அலை) அவர்கள் ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே இந்த வழிப் பாதை 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயணிகளின் பயன்பாட்டிலிருந்து வந்திருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும்போது இந்த வழியாகச் சென்றதாக நம்பப்படுகிறது. ஆகவேதான் 270 மைல் நீளமுள்ள இந்த வழிப் பாதை தர்ப் அல் அன்பியா என்று அழைக்கப்படுகிறது.

இந்த வழிப் பாதையில் பேராசிரியர் அப்துல்லாஹ் அல்காடி இதுவரை 63 மைல் கற்களை கண்டுபிடித்திருக்கிறார். 1000 ஆண்டுகளுக்கு மேல் பாலைவனத்தில் நடப்பட்டிருக்கும் இந்த மைல்கற்கள் பழங்கால ஹஜ் பிரயாண கூட்டங்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கும் என்று பேராசிரியர் அப்துல்லாஹ் அல்காடி கருதுகிறார். இவர் அமெரிக்காவிலுள்ள போர்ட்லேண்ட் மாநில பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இமாம் அப்துல் ரஹ்மான் பின் பைசல் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணியாற்றியவர். கடந்த 16 ஆண்டுகளாக பேராசிரியர் அப்துல்லாஹ் அல்காடி இந்த வழிப் பாதையை ஆய்வு செய்து வருகிறார். இந்த மைல் கற்கள் சிம்பாலிக் ஐடென்டிஃபிகேஷன் (symbolic identification) என்ற முறையில் அமைக்கப்பட்டிருப்பதாக பேராசியர் அப்துல்லாஹ் அல்காடி கூறுகிறார்.

சிம்பாலிக் ஐடென்டிஃபிகேஷன் என்றால் என்ன?

சரக்குகளை வெளிநாடுகளுக்கு கப்பல் மற்றும் விமானங்கள் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்கின்ற போது இந்த சிம்பாலிக் ஐடென்டிஃபிகேஷன்

முறை கையாளப்படுகிறது. கப்பல் மற்றும் விமானங்கள் மூலம் அனுப்பப்படும் சரக்குகள் எத்தகைய சரக்குகள் என்று சரக்குகள் அடைக்கப்பட்டிருக்கும் மூட்டைகள் மீதோ அல்லது டப்பாக்கள் மீதோ ஆங்கிலத்தில் எழுத முடியாது. ஏனென்றால் உலகிலுள்ள அனைத்து துறைமுகங்களிலும், விமான நிலையங்களிலும் சரக்குகளை ஏற்றி இறக்கும் ஊழியர்கள் அனைவருக்கும் ஆங்கிலம் தெரியும் என்று சொல்ல முடியாது. உதாரணமாக உணவுப் பொருட்கள் மீது தண்ணீர் பட்டால் உணவுப் பொருட்கள் கெட்டுவிடும். இத்தகைய சரக்குகளின் மூட்டைகள் மீதும் டப்பாக்களின் மீதும், குடை படத்தை ஒட்டிவிடுவார்கள். அதாவது சரக்குகள் மீது தண்ணீர் படக்கூடாதுஎன்பதை இந்த குடை படம் எடுத்துக் காட்டுகிறது. இந்தப் படத்தை பார்க்கும் ஊழியர்கள் சரக்குகளை ஏற்றி இறக்கும்போது அந்தச் சரக்குகளின் மீது தண்ணீர் படாமல் கவனமாக பார்த்துக் கொள்வார்கள். இதை போல் பல படங்கள் ஏற்றுமதி இறக்குமதி விஷயங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் படங்களுக்கு லாஜிஸ்டிக் ஐகான்ஸ் என்று பெயர். இந்த லாஜிஸ்டிக் ஐகான்ஸ் (Logistic

தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்!

"பாங்குக்கும், இகாமத்துக்கும் இடையே கேட்கப்படும் துஆ மறுக்கப்படுவதில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அனஸ் (ரளி) அவர்கள். (நூல் : திர்மிதி)

பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை - 1.

04373-254354; 253339; 99444 54354

icons) அனைத்தும் சிம்பாலிக் ஐடென்டிஃபிகேஷன் என்ற வகையை சார்ந்ததாகும்.

இதைப் போலவே பாலை வனத்தில் நடப்பட்டிருக்கும் மைல் கற்களும் சிம்பாலிக் ஐடென்டிஃபிகேஷன் என்ற முறையில் அமைக்கப்பட்டி ருக்கின்றன. பாலைவனத்தில் பயணம் செய்யும் பயணி களுக்கு எவ்வளவு தூரம் பயணம் செய்திருக்கிறோம், இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்று தெரியாது.

இதை தெரிந்து கொள்ள இந்த மைல் கற்கள் உதவுகின் றன. தூரத்தை கணக்கிட்டு இந்தக் கற்களின் உயரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கற்களின் உயரத்தை வைத்து எவ்வளவு தூரம் பய ணம் செய்து வந்திருக்கிறோம், இன்னும் எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும் என்று பழங்கால பயணிகள் தெரிந்து கொண்டார்கள். பயணிகளின் கூட்டத்தை நடத்திவரும் தலைவர் இதை கணித்து சொல்வார். மேலும் பாலைவனத்தில் பாதை தவறு வது என்பது மிகவும் அபாயகர மான விஷயமாகும். தண்ணீர் இல்லாத இடத்தில் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே பயணம் செய்யும் போது இந்த மைல் கற்கள் கண்ணில்பட வேண்டும். இந்த மைல் கற்கள் கண்ணில் படவில்லை என்றால் பயணிகள் பாதை தவறுகிறார்கள் என்று அர்த்தமாகும். ஆகவே பயணிகள் சரியான பாதையில் பாலைவனத்தில் பயணம் செய்வதற்கு இந்த மைல் கற்கள் பெரிதும் உதவியாக இருந்திருக்கின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன் ஈராக், இஸ்ரேல், ஜோர்டான், லெபனான், சிரியா ஆகிய நாடு களில் இருந்து தரை மார்க்க மாக ஒட்டகங்களில் மக்கா நகருக்கு சென்ற பல ஆயிரக் கணக்கான ஹஜ் பயணிகள் கூஃபி யாத்திரைப் பாதை என்ற வழியாக பயணம் செய்தனர். ஈராக்கிலுள்ள கூஃபா நகரத் திலிருந்து துவங்கிய இந்த வழிப்பாதை மக்கா, மதீனா, பாக்தாத் ஆகிய நகரங்களை இணைத்தது. நபி (ஸல்) அவர் கள் பிறப்பதற்கு முன்பிருந்தே இந்த வழிப் பாதை வர்த்தகர் களின் பயண பயன்பாட்டி லிருந்து வந்தது. 750ஆம் ஆண்டிற்கும் 1250ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 500 ஆண்டுகளாக இந்த வழிப் பாதையை வணிகர்கள் தங் களின் வர்த்தகத்திற்கு பயன் படுத்தி வந்தார்கள். ஹஜ் பயணி கள் இந்த பாதையின் வழியாக மக்கா நகருக்கு சென்றார்கள். இந்தப் பாதை மிகவும் கரடு முரடான பாதையாக இருந்தது. இந்த பாதையில் குடிப்பதற்கு

ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது. பயணிகள் இளைப்பாறுவதற்கு எந்த வித மான வசதிகளும் கிடையாது.

ஐந்தாவது அப்பாஸிய கலீஃபாவான ஹாருன் அல்-ரஷீத் அவர்களின் துணைவியார் ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் இந்த தரை பாதை வழியாக ஹஜ் பயணத்தை மேற்கொண்ட போது அவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்தார்கள். மற்ற ஹஜ் பயணிகள் இப்படிப்பட்ட சிரமங்களை அனுபவிக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன் அவர்கள் இந்தப் பாதையை செப்பனிட்டு சீர்படுத்தியதால் இந்த வழிப் பாதைக்கு "ஜுபைதா வழிப்பாதை" என்று பெயரிடப் பட்டது.

இந்த தரை வழிப் பாதை ஈராக் நாட்டிலுள்ள பாக்தாத் நகரில் தொடங்கி கூஃபா, அல் நஜ்த், சுபாலா, ஃபெய்து, சமரியா ஆகிய நகரங்களின் வழியாக சென்று அல்நுக்ரா என்ற இடத்தில் இரண்டு வழிகளாக பிரிகிறது. ஒரு வழிப்பாதை நேராக மதீனா நகருக்கு செல்கிறது. இன்னொரு பாதை அல் ரபதா, மன்த்ய பேன் சுலய்ம், தட் இர்க் ஆகிய நகரங்களின் வழியாக மக்கா நகரை சென்று அடைகிறது. ஜுபைதா வழிப் பாதை ஏறத்தாழ 800 மைல்களுக்கு மேல் நீளமானது.


ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!

**தமிழக மதரஸாக்களுக்கான**

**அரிய வாய்ப்பு!**

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாசுல் குப்ரா, ஜன்ஜானி ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் **"சொல்லிலக்கணம்"** என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம்** பாகவி ஹஜ்ரத் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

**மிக பயனுள்ள நூல்!**

**பக்கங்கள் : 800;** **விலை ரூ. 500/-** (தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் :** **குர்ஆனின் குரல்** மதுரை 9486729192

ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் ஹஜ் பயணிகளுக்காக 27 தங்குமிடங்களை நிறுவினார்கள். 30 மைல்கள் தூரத்தில் ஒவ்வொரு தங்கும் இடத்தை நிறுவினார்கள். இது மட்டுமல்லாமல் பயணிகள் தங்குவதற்கு 58 துணை நிலையங்களையும் அமைத்தார்கள். காலப்போக்கில், தங்குவதற்கு வீடுகளையும் நிர்மாணித்தார்கள். ஹஜ் பயணிகளின் தாகத்தைத் தீர்க்க கிணறுகள், குளங்கள், அணைகள், கால்வாய்கள், ஓடைகள், மற்றும் பல நீர்சேகரிப்பு நிலையங்களை அமைத்தார்கள். அல்-தாஃபிரி, அல்-அமியா, அல்-துலைமியா, அல்- ஜுமைமியா, ஜபாலா, உம்மு அல்- அசாஃபிர், ஹமாத் அல்-அஷர் ஆகிய குளங்கள் அடங்கிய தங்கும் நிலையங்களை கட்டினார்கள்.

குளங்களை பயணிகள் எளிதாக கண்டு கொள்வதற்கு சாலைகளில் அடையாளங்களை ஏற்படுத்தினார்கள்.

கலங்கரை விளக்கங்கள், அடுப்புகள் போன்ற வசதிகளையும் சாலைகளில் ஏற்படுத்தி வைத்தார்கள். ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் அமைத்த ஜபாலா என்ற தங்கும் இடம் அதிகமாக நீர் வளம் கொண்ட இடமாக இருந்தது. 200 அடிக்கு மேல் நிலத்தை தோண்டி தண்ணீர் வரும்படி வழி செய்திருக்கிறார்கள். ஆழமாக வெட்டப்


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)**
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)**

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்

**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் :
**94420 56547**
E.mail: quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com

ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers ; M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B.A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

பட்ட நூற்றுக்கணக்கான கிணறுகள் இன்றும் இங்கு காணப்படுகின்றன. இங்கு இருக்கும் நீரை கால்நடை வளர்ப்பவர்கள் இன்றும் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த வழிப் பாதையில் சாலை உள் கட்டமைப்புகள் ஒரு பெரிய சாதனை என்றே சொல்லவேண்டும். ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் அமைத்த ஃபயத் என்ற தங்குமிடத்தில் ஒரு சோலை வனம் இருந்தது. இப்னு பதூதா என்ற யாத்திரிகர் 1327ஆம் ஆண்டு இந்த இடத்திற்கு வந்தபோது இந்த இடத்தில் வணிகர்களும், பயணிகளும் தங்கிச் சென்ற காரணத்தினால் இந்த இடம் மிகச் செழிப்பாக இருந்தது என்றும், ஒரு கோட்டை நகரமாக இருந்தது என்றும் அவருடைய பிரயாண நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் அல்-சராபா என்ற இடத்தில் கட்டிய இரு அணைக்கட்டு களும் இன்றும் பழுதாகாமல் இருக்கின்றன. இந்த அணைக் கட்டுகளுக்குள் அமைக்கப்பட்டி ருந்த தொட்டிகளில் வரும் தண்ணீர் வடிகட்டப்பட்டு வருவதற்கான வடிகால்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மக்கா நகருக்கு நீர் வழங்கு வதற்காக ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் ஜன் ஜுபைதா என அழைக்கப்படும் ஜுபைதா கால்வாய் ஒன்றை 801ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்கள். ஒரு பகுதி கால்வாய் நிலத்தடி நீர் வழியாகவும் (aquaduct), மற்றொரு பகுதி கால்வாய் நிலத்தின் மேல் நீர் வழியாகவும் கட்டினார்கள். இக்கால கட்டிடக்கலை வல்லுநர்கள் இந்த கால்வாயின் அமைப்பை கண்டு வியப்படைகிறார்கள்.

ஜுபைதா பின் ஜாபர் அவர் கள் அமைத்த வழிப் பாதை புனித யாத்திரையை எளிதாக்கியது மட்டுமல்லா மல் இந்த வழிப் பாதை வணிக பரிமாற்றங்களையும் எளிதாக்கி அந்தக் கால வர்த்தகத்தை பெரியளவில் மேம்படுத்தியது.

ஜுபைதா பின் ஜாபர் அவர்கள் அமைத்த தரை வழிப் பாதையில் கட்டப்பட்டிருக் கும் கட்டுமானங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் வலுவாக நின்று கொண்டு ஜுபைதா பின் ஜாபர் அவர்களின் தர்ம குணத் திற்கு மௌனமாக சாட்சி பகன்று கொண்டிருக்கின்றன.

கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருந்தபோது தலைமை பொறியாளர், ஜுபைதா பின் ஜாபர் அவர்களிடம் இதுவரை நான்கு இலட்சம் திர்ஹம் செலவாகிவிட்டது. ஆனால், கட்டுமானப் பணிகள் இன்னும் முடியவில்லை என்று கூறினார். இந்த நல்ல காரியத்தை செய் வதிலிருந்து என்னைத் தடுக்க

முயற்சிக்கிறீர்களா? அதை விட அதிகமாக செலவானாலும் பரவாயில்லை. கட்டுமானப் பணியை முடியுங்கள் என்று ஜுபைதா பின் ஜாபர் கூறினார்கள். ஹஜ் பயணிகளின் வசதிக்காக தங்கள் செல்வத்தின் கணிசமான தொகையை அர்ப்பணித்தார்கள். கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததும் தலைமை அலுவலர்கள் கட்டுமான கணக்கு புத்தகங்களை ஜுபைதா பின் ஜாபர் அவர்களிடம் கொடுத்தார்கள்.

மறுமை நாளில் அல்லாஹ் தான் கணக்கு கேட்பான் என்று கூறி கணக்கு புத்தகங்களை ஜுபைதா பின் ஜாபர் ஆற்றில் எறிந்து விட்டார்கள்.

1258ஆம் ஆண்டு அப்பாஸிய கலீஃபாக்களின் ஆட்சி முடிவடைந்த பின்னர் இந்தப் பாதை வழியில் பாதுகாப்பு இல்லாமல் போய் விட்டது. கொள்ளைக்காரர்கள் பயணிகளை தாக்கி அவர்களின் உடைமைகளை பறிக்க ஆரம்பித்தார்கள்.

இதனால் காலப்போக்கில் இந்தப் பாதை வழி ஹஜ் பயணிகளாலும், வணிகர்களாலும் கைவிடப்பட்டது. ஜுபைதா வழிப் பாதையில் இருக்கும் கட்டுமானங்களை சவூதி அரசு மிகுந்த கவனத்துடன் பாதுகாத்து வருகிறது.

ஏறத்தாழ 3400 ஆண்டுகளாக சில்க் வழிப் பாதையை வணிகர்களும், மற்ற பயணிகளும் பயன்படுத்தி வந்தார்கள். ஏறத்தாழ 4000 மைல் நீளமான இந்தப் பாதையின் வழியாக சீன வணிகர்கள் பட்டுத் துணிகளை கொண்டு வந்து பல நாடுகளில் விற்பனை செய்து வந்ததால் இந்த வழிப் பாதை சில்க் வழிப் பாதை என்று அழைக்கப்பட்டது. இந்தப் பாதை சைனாவில் தொடங்கி அரேபிய தீபகற்பம் சிரியா, லெபனான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்டான், சைப்ரஸ், துருக்கி, எகிப்து, ஈரான், ஈராக், கொரியா, ஜப்பான், ரஷ்யா, கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளை இணைத்தது. இந்தப் பாதை வழியாக பல நாடுகளுக்கு பெரும் வணிகர்கள் தங்களின் சரக்குகளை ஒட்டகங்கள், குதிரைகள், கோவேறு கழுதைகள் ஆகியவற்றின் மீது ஏற்றிச் சென்றார்கள். மேலும் மன்னர்களும், இராஜ குடும்பத்தை சேர்ந்தவர்களும், பெரும் தனவந்தர்களும், அதிகார வர்க்கத்தினரும் இந்தப் பாதையை பயன்படுத்தி வந்ததால் இந்த பாதையில் அதிகமான கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தது. ஒட்டகங்கள், குதிரைகள், கோவேறு கழுதைகள் ஆகியவற்றை பயணத்திற்கு பயன்படுத்த அதிகமான கட்டணங்கள்

வசூலிக்கப்பட்டன. சரக்குகளை ஏற்றி, இறக்கும் ஊழியர்களும் அதிகமான பணத்தை கேட்டனர். இந்த வழிப்பாதையில் உணவுகளும், மற்ற அத்தியாவசிய பொருட்களும் அதிக விலைக்கு விற்கப்பட்டன. ஹஜ் பயணிகளால் இவ்வளவு அதிகமான செலவுகளை செய்ய முடியாததால் ஹஜ் பயணத்திற்கு இந்தப் வழிப்பாதை பயன்படுத்தப்படவில்லை.

அபு அல்-காசிம் பின் அலீ இப்னு ஹவ்கல் அல்-நஷிபி, என்ற யாத்ரீகர் 943ஆம் ஆண்டிலிருந்து 969ஆம் ஆண்டு வரை பல நாடுகளில் பயணம் செய்து பூமியின் முகம் (Surat-al-Ard) என்ற நூலை எழுதினார். 1100 ஆண்டுகளுக்கு முன் தரை மார்க்கம் வழியாக சென்ற ஹஜ் பயணிகளை பற்றி பல விவரங்களை அந்த நூலில் எழுதியுள்ளார். மொரோக்கோ நாட்டு பயணிகள் எகிப்து நாட்டு பயணிகளுடன் சேர்ந்து பயணம் செய்வார்கள். எகிப்து நாட்டிலிருந்து வரும் ஹஜ் பயணிகளை சிரியா நாட்டு ஹஜ் பயணிகள் அய்லா என்ற இடத்தில் சந்திப்பார்கள். அய்லா என்ற இடம் ஹள்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட தௌராத் வேதத்தில் ஏலாத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு சோலைவனமாக இருந்தது. செங்கடலில் இது ஒரு துறைமுகமாகவும் இருந்தது. பாலஸ்தீன ஹஜ் பயணிகள் சவூதி அரேபியாவின் வடமேற்கு பகுதியிலுள்ள தபூக் பிராந்தியத்தை இரண்டு வழிகளில் கடப்பார்கள். சவூதி அரேபியாவிலுள்ள ஹயில் மாகாணத்தில் இருக்கும் அல்பித் என்ற சிறிய ஊரின் வழியாக ஷகாப் என்ற சோலைவனத்தை கடந்து மதீனா நகரை அடைவார்கள். அங்கிருந்து மக்கா நகருக்கு வருவார்கள்.

அல்- ஜுஹ்ஃபா நகரின் வழியாக மதீனா நகரை அடைவார்கள். அங்கிருந்து மக்கா நகருக்கு வருவார்கள். இது இரண்டாவது வழியாகும். அல்-ஜுஹ்ஃபா நகரில் ஈராக், டமாஸ்கஸ், ஐரோப்பா, துருக்கி, அல்ஜீரியா, லிபியா, சூடான், சாம்பியா, எத்தியோப்பியா, தான்சானியா, சோமாலியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் ஹஜ் பயணிகளை பலஸ்தீன ஹஜ் பயணிகள் சந்திப்பார்கள்.

ஏறத்தாழ 812 மைல்கள் நீளமுள்ள தர்ப் அல் ஹஜ் அல் ஷாமி என்று அழைக்கப்பட்ட சிரியா ஹஜ் வழிப் பாதை மிகவும் பழமையானதாகும்.

ரோமப் பேரரசு காலத்தில் இருந்து ஏறத்தாழ 2050 ஆண்டுகளாக இந்த வழிப் பாதை வணிகர்களால் பயன்படுத்தப்பட்டது. சவூதி அரேபியா, டமாஸ்கஸ், ஜோர்டான் ஆகிய முக்கிய நாடுகளின் வழியாக இந்தப்பாதை அமைந்திருந்தது.

டமாஸ்கஸ் நகரத்திலிருந்து ஹஜ் பயணிகள் 40 நாட்கள் ஒட்டகப் பயணத்தில் மக்கா நகரை அடைந்தார்கள். உமய்யா கலீஃபாக்களின் ஆட்சிக்காலத்தில் டமாஸ்கஸ் நகரம் வழியாக மக்கா நகரம் செல்லும் பாதையில் கிணறுகள், இளைப்பாறும் இடங்கள், மருத்துவமனைகள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இரவில் ஹஜ் பயணிகள் கூடாரங்களில் உறங்கும்போது அவர்களுக்கு காவலாக ஆயுதங்கள் ஏந்திய காவலர்களும் நியமிக்கப்பட்டனர். அந்தக் காலத்தில் ஆட்சி புரிந்த முஸ்லிம் கலீஃபாக்கள் இந்த வழிப் பாதையில் ஹஜ் பயணிகளின் நலன் கருதி குளங்கள், நீர் தொட்டிகள், கால்வாய்கள், கோட்டைகள், அரண்மனைகள், மஸ்ஜிதுகள், பாலங்கள், சந்தைகள் ஆகியவற்றை நிர்மாணித்தனர். கூட்டம் கூட்டமாக ஹஜ் பயணிகள் பயணம் செய்யும் வழிகளில் பழங்குடி அரேபியர்கள் உணவுப் பொருட்கள், ஆட்டு மாமிசம், மருந்துகள், தண்ணீர் குடுவைகள் போன்றவற்றை விற்பனை செய்வார்கள்.

அந்தக் காலத்தில் இந்த வழியாக பயணம் செய்த பல ஆயிரக்கணக்கான ஹஜ் பயணிகள் இந்த வழிப் பாதையில் இருக்கும் பாறைகளின் மீதும், குன்றுகளின் மீதும் அவர்களின் தாய் மொழியில் தங்களின் உணர்வுகளை செதுக்கியுள்ளனர். இவற்றை செதுக்கிய ஹாஜிகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரணித்து இருப்பார்கள். ஆனால் அவர்கள் செதுக்கிய வாசகங்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக காலத்தால் அழியாமல் இன்னும் காணப்படுகின்றன. அவர்கள் எந்த விதமான உணர்வுகளை செதுக்கி இருப்பார்கள்? ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ் அவர்களுக்கு அருளிய பொன்னான வாய்ப்புக்கு அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி கூறிய வாசகங்களாக இருக்கலாம்.

உலகின் பேராலயம் கஅபாவின் முன் மண்டியிட இன்னும் ஒரு வாய்ப்பு வேண்டும் என்று இறைவனிடம் அவர்கள் வேண்டிக் கொண்ட வாசகங்களாக இருக்கலாம். ஆபத்துகள் ஏதும் இல்லாமல் திரும்பி தங்களுடைய வீடுகளுக்கு போய் சேருவதற்காக அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டிக் கொண்ட வாசகங்களாக இருக்கலாம். நோய் வாய்ப்பட்டவர்கள் தங்களின் நோய் தீர அல்லாஹ்விடம் கேட்ட துஆவின் வாசகங்களாக இருக்கலாம். இந்த உலகத்தில் இருக்கும் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஹஜ் கடமையை நிறைவேற்றும் பொன்னான வாய்ப்பை தர வேண்டும் என்று அவர்கள் அல்லாஹ்விடம் கேட்ட துஆவின் வாசகங்களாக

இருக்கலாம். உங்களையும், என்னையும்சேர்த்துஇந்த உலக முஸ்லிம்கள் அனைவரின் நலனுக்காக அல்லாஹ்விடம் அவர்கள் கேட்ட துஆவின் வாசகங்களாக இருக்கலாம். அந்த வாசகங்களின் அர்த்தங்களை இன்றைக்கு யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் பல ஆபத்துகளை கடந்து ஹஜ் கடமையை நிறைவேற்றிய அந்தக் கால ஹாஜிகளின் உள்ளத்தையும், உணர்வுகளையும் அல்லாஹ் புரிந்து கொண்டிருப்பான். அதுவே போதுமானதாகும்.

ஹஜ் பயண அனுபவம் மற்றும் நினைவுகள் தஜ்ரிபத் வாதிக்ரயாத் ஸஃபர் அல் ஹாஜி கமுஸ் அல் - சினாத் அல் - ஷாமியா ஆகிய நூல்களில் ஹஜ் பயணத்தின் பல விதமான அனுபவங்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. அந்த காலத்தில் கேரவான் என்று கூறப்படும் பிரயாண கூட்டத்திற்கு உதவி செய்பவர்கள் பலர் இருந்தனர். பிரயாண கூட்டத்தை நடத்தி செல்பவர் (முர்ஷித் சியாஹியூன்), கூடாரம் செய்பவர் (கய்மி), கூடாரம் நிறுவுபவர் (முஜாரிப் கைமா), குப்பைகளை சுத்தம் செய்பவர் (கஸீஹா), ஒட்டக ஓட்டுநர் (ஸாயிக் அல்ஜாமல்), பிரயாண தூகர் (வஸிட் ஜவ்லா), போர்ட்டர் (ஹமால்) தண்ணீர் விநியோகம் செய்பவர் (முஆஸிமியா) இரவு காவலர்கள் (ஹூராஸ் அல் லய்ல்) பெண் உதவியாளர்கள் (முஸாயிதுன் சயீதா), சமையல் காரர்கள் (டுஹா), நர்ஸுகள் (முமர்ரிதாத்) ஆகியோர் பிரயாண கூட்டத்துடன் செல்வார்கள்.

1299-ம் ஆண்டில் உதுமானிய பேரரசை நிறுவிய முதலாம் உஸ்மான் காஜி அவர்கள், ஹஜ் பயணத்திற்கான சாலையை உருவாக்கத் தொடங்கினார். டமாஸ்கஸிலிருந்து மக்கா வரையிலான பழைய ஹஜ் பாதைகளை மீட்டெடுத்து இஸ்தான்புல்லுக்கு நீட்டித்தனர். இந்தப் பாதை ஹஜ் பயணத்திற்காகவும் மற்றும் வணிகத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இஸ்தான்புல்லில் இருந்து டமாஸ்கஸ் வரையிலான பாதையின் வடக்குப் பகுதியில் ஹஜ் பயணத்திற்காகவும் பல வசதிகள் மற்றும் பெரிய வளாகங்கள் கட்ட உத்தரவிட்டனர். மேலும் தெற்குப் பகுதியில் மக்கா நோக்கிச் செல்லும் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களுக்காக கோட்டைகளையும், நீர்த் தேக்கங்களையும் கட்டினார்கள். சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளில் உதுமானிய பேரரசு விரிவடைந்ததால் முஸ்லிம்களுக்கு ஹஜ் பயணத்திற்கான ஊக்கம் அளிக்கப்பட்டது.

போர்த்துகீசிய மன்னர்கள் வெகுகாலமாக இந்திய மகா சமுத்திரத்தின் மேல் ஆதிக்கம் செய்து வந்தார்கள். இவர்கள் இந்தச் சமுத்திரத்தின் வழியாக செல்லும் கப்பல்கள் செல்வதை தடுத்து வந்தார்கள். இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர் களாக இருந்தனர். இதனால் இந்தியாவில் இருந்து ஹஜ் பயணம் பாதிக்கப்பட்டது. முதலாம் போர்த்துகீசிய மன்னர் அஃபோன்ஸா ஹென்ஹிக் என்பவர் ஆட்சிக்காலத்தில் ஹஜ் பயணம் பெருமளவில் தடைபட்டது. இந்த கால கட்டத்தில் பேரரசர் சுல்தான் சலாஹுத்தீன் என்று அழைக்கப் படும் சலாஹுத்தீன் யூசுப் இப்னு அய்யூப் எகிப்து மற்றும் சிரியா வின் மன்னராக ஆட்சி புரிந்து வந்தார். ஒரு முறை இந்திய மகா சமுத்திரத்தில் ஹஜ் பயணம் செய்த கப்பலை போர்த்துகீசிய படைகள் தடுத்ததல்லாமல் ஹஜ் பயணி களின் உடைமைகளை பறித்துக் கொண்டார்கள். இதை கேள்விப் பட்ட சுல்தான் சலாஹுத்தீன் வெகுண்டெழுந்தார். ஹஜ் பயண கப்பல்களை தடுக்கக் கூடாது என்றும், பயணி களுக்கு எந்த விதமான கஷ்டங் களும் ஏற்படக் கூடாது என்றும் முதலாம் போர்த்துகீசிய மன்னர் அஃபோன்ஸா ஹென்றிக் என்ப வருக்கு சுல்தான் சலாஹுத்தீன் கடிதம் அனுப்பினார். என்னுடைய இந்தக் கட்டளையை மீறினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குப் பின் எந்த சமாதான பேச்சுக்கு இடம் இருக்காது என்றும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டார். அந்த காலத்தில் சுல்தான் சலாஹுத்தீன் எல்லா மன்னர் களுக்கும் ஒரு சிம்ம சொப்பன மாக இருந்தார். இவரைப் பற்றி கேள்விப்பட்ட அஃபோன்ஸா ஹென்றிக் ஹஜ் பயண கப்பல் களை தடுக்க வேண்டாம் என்று அவருடைய படைத்தளபதி களுக்கு உத்தரவிட்டார். 1174ஆம் ஆண்டிலிருந்து 1193ஆம் ஆண்டு வரை சுல்தான் சலாஹுத்தீன் ஆட்சி செய்த 19 ஆண்டுகள் ஹஜ் பயணத்திற்கு எந்த விதமான தடைகளும் இல்லை.

போர்த்துகீசிய மன்னர் மூன்றாம் ஜான் என்பவரின் ஆட்சியில் 1515ஆம் ஆண்டு வாக்கில் போத்துகீசியர்கள் இந்திய மகா சமுத்திரம் மற்றும் பாரசீக வளைகுடாவிலுள்ள முக்கிய துறைமுகங்களைக் கைப்பற்றினர். இந்திய மகா சமுத்திரம் வழியாக பாரசீக வளை குடா மற்றும் செங்கடலில் அமைந்துள்ள துறைமுகங் களுக்கு செல்லும் கப்பல்களை இவர்கள் வழிமறித்துக் கொண்டி ருந்தனர். இதனால் வர்த்தகங் கள் பாதிக்கப்படுவதோடு இந்தியாவிலிருந்து ஹஜ்

பயணமும் தடைபட்டது. அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து தரை மார்க்கமாக ஹஜ்பயணம் செல்வதும் பாதுகாப்பாக இல்லை. ஏனென்றால் தரை மார்க்கமாக செல்கின்றபோது பாரசீக நாட்டை (பழங்கால ஈரான்) கடந்தாக வேண்டும். 1501-ம் ஆண்டில் பாரசீக நாட்டில் சஃபாவிட் பேரரசு நிறுவப்பட்டது. இவர்கள் ஷியா வகுப்பைச்சேர்ந்த முஸ்லிம்கள். இவர்களுக்கும், உதுமானிய பேரரசுக்கும் அவ்வப்போது எல்லை தகராறுகள் நடந்து கொண்டிருந்தன. உதுமானிய பேரரசு சுன்னத்-வல்- ஜமாஅத் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மேற்கு ஆசியாவில் இந்த இரண்டு பேரரசுகளும் பெரிய சக்திகளாக இருந்தன.

மெசபடோமியா (இன்றைய ஈராக் மற்றும் வடகிழக்கு சிரியா) என்றபிராந்தியத்தையும், தெற்கு காகசஸ் பிராந்தியத்தையும் கைப்பற்றுவதில் இந்த இரண்டு பேரரசுகளும் போர் புரிந்தன. 1514ஆம் ஆண்டில் ஆரம்பித்த போர் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு நீடித்தது. இதனால் தரைமார்க்கமாக ஹஜ் பயணத்தை மேற்கொள்வது அந்தகால கட்டத்தில் இயலாத காரியமாக இருந்தது. மேலும் இந்தியாவிலிருந்து சென்ற ஹஜ் பயணிகள் சுன்னத்- வல்- ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் ஷியா வகுப்பை சேர்ந்த சஃபாவிட் பேரரசு ஹஜ் பயணத்திற்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தரவில்லை.

(தொடரும்)

# தோண்டி எடுத்தவை

தென்காசி மஸ்ஊது

★ பணம் இருக்குதுன்னு செலவையும், பலம் இருக்குதுன்னு எதிரியையும் சம்பாதிக்கக் கூடாது.

★ தன்னை அடக்கத் தெரிந்தவனுக்கு, பிறரை அடக்குவது சுலபம்.

★ நீ பட்ட துன்பத்தை விட, அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.

★ வாழ்க்கையில் சந்தோஷம் நாம் வாழும் இடத்தில் இல்லை. நாம் வாழும் விதத்தில் உள்ளது.

★ சலிப்பில்லாதவன் நிச்சயம் வெற்றியடைவான்.

★ உன்னை வழி நடத்த அறிவை பயன்படுத்து; பிறரை வழி நடத்த இதயத்தைப் பயன்படுத்து.

# வரலாற்றில் ஓர் ஏடு

அரபு மொழியில் "ஸகாத்" என்பதன் பொருள் "வளர்ச்சி, அதிகமாகுதல்" ஆகும்.

**"தொழுகையை நிலைநிறுத்துங்கள்! ஸகாத்தை கொடுங்கள்"** - அல்குர்ஆன் (2 : 43)

வரலாற்றில் ஒரு நாள் :

ஹள்ரத் அபூ ராஃபிஉ (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

"நானும், நபி (ஸல்) அவர்களும் மக்ரிபு தொழுகைக்கு விரைந்து 'பகீஉ' அடக்கஸ்தலத்திற்கு அருகில் நடந்து சென்றோம்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் "நீ நாசமடைந்து விட்டாய்! நீ நாசமடைந்து விட்டாய்!" என்று இருமுறை சொன்னார்கள். என்னைத்தான் அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று கருதி நின்றேன்.

"உனக்கு என்ன நேர்ந்தது? நட" என்று அவர்கள் கூறினார்கள். "நீங்கள்தான் ஒன்றைச் சொல்லி கலக்கத்தை உருவாக்கி விட்டீர்களே!" என்று சொன்னேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் "என்ன அது?" என்று கேட்டார்கள். நான் "நீங்கள்தான் வெறுப்பாக என்னிடம் ஏதோ கூறினீர்களே" என்றேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(உனக்கு) அல்ல. எனினும் இதோ (இந்த மண்ணறையில் உள்ள) இன்னார்தான். இவரை இன்ன குடும்பத்தாரிடம் 'ஜகாத்' வசூலிக்க அனுப்பி இருந்தேன். அவர் கம்பளிப் போர்வை ஒன்றை கையாடல் செய்துவிட்டார். அதன் காரணமாக, இப்பொழுது நெருப்பினாலான அதுபோன்ற போர்வை அணிவிக்கப்பட்டுள்ளார்" என்று கூறினார்கள்.

ஆதாரம் : சுனனுந் நஸாயீ ஹதீஸ் எண் - 853

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# உத்தமத் தூதரிடம் ஓர் உரிமைப் போராட்டம்

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

ஹுதைபிய்யாவின் எந்த நிகழ்ச்சியும் முஸ்லிம்களில் எவருக்கும் துளியும் மகிழ்ச்சியைத் தரவில்லை. சில நடவடிக்கைகளை அவர்களால் ஜீரணிக்கவே முடியவில்லை. எல்லாரின் இதயமும் உலை அடுப்பாய் கொதித்துக் கொண்டிருந்தது. இறைத்தூதரோ எதற்கோ கட்டுப்பட்டது போல் ஸுஹைலின் கூற்றனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொண்டு இயந்திரமயமாய்க் காரியமாற்றியது உத்தமத் தோழர்களுக்குப் பேரதிர்ச்சியாய் இருந்தது.

அவர்களுக்குள் ஓர் ஆதங்கம். உண்மையில் இருக்கும் நாம் பொய்மைக்கு ஏன் அடிபணிய வேண்டும்? சத்தியப் பாதையில் செல்லும் நாம் அசத்திய வாதிகளிடம் ஏன் இப்படி ஆட்பட வேண்டும். அபூஜந்தலின் (ரளி) வருகையும், துயரமும் தோழர்களிடத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. வீரர் உமரால் இந்தக் கோரக் கொடுமைகளைச்சிறிதும்தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொறுக்க முடியாத அந்தப் புரட்சிக்காரர் நீதிமிகு போராட்டவாதி அண்ணலிடம் வந்தார். அவர்களை அன்பொழுக உரிமையுடன் பற்றினார். "உத்தமரே! தாங்கள் இறைவனின் தூதர் தானே?" நா தழுதழுக்க வார்த்தைகள் நெகிழ்ந்து வந்தன. "ஆம். இதிலென்ன சந்தேகம்?" அண்ணலின் பொன்னிதழ்கள் பூவை உதிர்த்தன.

நாம் சரியான பாதையில் தானே இருக்கின்றோம்? உமர் மீண்டும் கேட்டார். "ஆமாம்... நாம் நேரான உண்மை நெறியில் தான் இருக்கின்றோம்" உத்தமர் கூறினார். "அப்படியானால் எதிரிகள் தவறான பொய்மைப் பாதையில்தானே இருக்கின்றார்கள்?" உமர் வினவினார். "ஆமாம் இறை நெறிக்கு முரண்பட்ட பாதைதான்" அண்ணலார் விளக்கம் தந்தார்கள். "அவ்வாறானால் நமது மார்க்கத்தின் மாண்பு, மரியாதை, கண்ணியத்தைக் கவனியாது இந்தத் தவறானவர்களுக்குத் தான் பணிய வேண்டியதன் அவசியம்தான் என்ன?" இறைத் தூதரவர்களே! எனக்கு இது ஏன் என்று புரியவில்லை.

பொறுக்க முடியவில்லை" உமர் விம்மினார், குமுறினார்.

"உண்மையில் நான் இறைவனின் தூதன். என் விருப்பப்படி எதையும் நான் செய்வதில்லை. இறைவனின் கட்டளைக்கே கட்டுப்படுகின்றேன்" அழுத்தமாக அண்ணல் எடுத்துரைத்தார்கள். "எந்த இறைவன் என்னை இயங்க வைக்கின்றானோ நிச்சயம் அவன் வெற்றியைத் தருவான்" என்றார்கள்.

உமர் மீண்டும் கேட்டார். "உத்தமரே! இறையில்லத்தை (கஅபா) தரிசிப்போம். ஆங்கு இறைக்கடமை ஆற்றுவோம் எனச் சொன்னீகளே?" ஆமாம் சொன்னேன். ஆனால் அது இந்த ஆண்டில் என்று சொன்னேனா? அண்ணல் அமைதியாகக் கேட்டார்கள். "இல்லை ஆண்டைக் குறித்துச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னீர்கள்" உமர் அதை ஏற்று தலையாட்டினார்.

இன்னும் உமரின் உள்ளத்திற்கு அமைதி ஏற்படவில்லை. குமுறிய நெஞ்சம் அடங்கவில்லை. கொந்தளித்த மனதில் சாந்தி வரவில்லை. ஆம். தன் கண்ணெதிரே நேருக்கு நேராக ஹுதைபிய்யாவில் கண்டதும் கேட்டதும் உமர் (ரளி) அவர்களை அதிகமதிகம் பாதித்திருந்தது. மூத்த தோழர் அபூபக்கர் (ரளி) அவர்களிடம் உமர் வந்தார். தன் உள்ளத்து உணர்வுகள், நெஞ்சத்துக் குமுறல்களை மனம் திறந்து கொட்டித் தீர்த்தார். அண்ணலிடம் வினவியவையனைத்தையும் அபூபக்கரிடம் கேட்டார். உமர் அண்ணலிடம் கேட்டது அபூபக்கருக்குத் தெரியாது. எனினும் அண்ணல் தந்த விளக்கத்தைப் போலவே அபூபக்கரின் வார்த்தைகளும் இருந்தன. இது உமருக்குப் பெரும் வியப்பாக இருந்தது. ஆம். அண்ணலின் எண்ணமாக அபூபக்கரின் உள்ளம் இருந்தது.

"உமரே! இறைத்தூதர் செய்ததும், சொன்னதும், ஏற்றதும், நடந்து கொண்டதும் சரியாகத் தானிருக்கும். ஏனெனில் இறைமார்க்க விவகாரங்களில் அவர்கள் ஒருபோதும் தம் சுய விருப்பத்தின் அடிப்படையில் செயல்படுவது கிடையாது. இதை நம்பு; இதை ஏற்று அவர்களை முழுமையாக மனதாரப் பற்றிடு. அவர்களிடம் தான் இறைநெறி வழிகாட்டல் இருக்கின்றது." அமைதியின் பெட்டகம் அபூபக்கர் (ரளி) அபத்தமாக உமருக்கு உணர்த்தினார். இதன்பின்னர் உமர் (ரளி) அமைதியுற்றிருக்க வேண்டும்; ஓரளவு சமாதானம் அடைந்திருக்க வேண்டும்; மிகவும் சிரமப்பட்டு தான் இந்த நிலைக்கு வந்தார்.

இறைத்தூதருக்குக் கட்டுப்படுவதில் உமர் (ரளி) முன்னிலையில் இருந்தார். அண்ணலின் கூற்றை அப்படியே பின்பற்றுவதில் எந்தத் தோழருக்கும் உமர் சளைத்தவரல்லர்.

பல வேளைகளில் உமரின் எண்ணம், கூற்று, கருத்தையே இறைத்தூதர் பிரதிபலித்தார்கள். இறையறிவிப்பும்(வஹீ) அவ்வாறே இருக்கும். அத்தகு உண்மைத் தோழா் அண்ணல் மீது ஐயப்பட்டார், எதிர்த்துப் போராடினார் என எவரும் எண்ண மாட்டார்கள். ஏன்? இவ்வாறான நினைவு எவரது நெஞ்சத்திலும் கடுகளவும் தோன்றாது.

அப்படியானால் உத்தமரிடம் உமர் கேட்டதுஎன்ன? எதனால்? உரிமையினால், உண்மை உணர்வினால், நட்பினால், சத்தியத் தூதர் தந்த சுதந்திரத்தால்தான். அண்ணலார் மகத்துவம் வாய்ந்த இறைவனின் மாண்பான திருத்தூதர் எனும் உயர் அந்தஸ்தைப் பெற்றுத் திகழ்ந்தாலும் இறைவனை ஏற்று இறைநெறியை அங்கீரித்துத் தம்மைப் பின்பற்றியோரை தொண்டர்களாக, சீடர்களாக, பணியாளர்களாக, எடுபிடிகளாக ஒருபோதும் கருதவில்லை. தோழர்களாகவே நினைத்துப் பழகினார்கள். தோழமைக்கும், நட்புக்கும் அதிகமதிகம் உரிமையுண்டு. எந்தக் கூட்டத்திலும் தம்மைப் பெரிதாகக் கருதாத பெருமானார், தனக்கென்று தனி ஆசனம் அமைத்துக் கொள்ளாத அந்தத் தங்கமகன் தோழர்களிடையே தோழராகவே அமர்வார்கள். தாம் வரும்போது எவரும் எழுந்து நிற்பதை, தமக்கென்று தனிச்சிறப்புத் தருவதை விரும்பாத தாயுள்ளம் தானைத் தலைவரின் பேருள்ளமாகும்.

இந்த நட்பின் பண்பாட்டுப் பழக்கத்திலேயே உமர் (ரளி) உத்தமரைப் பற்றிக் கேட்டார். மற்றபடி இறைத்தூதர் அந்த அறியாமைக்காரர்களுக்கு இந்த அளவு இறங்கி வந்து விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது தான் என்பது பலரது கருத்தாகவும் இருந்தது. அந்தப் பெரும் பாலோரது உள்ளத்து எண்ணக் குமுறலைத் தான் உத்தமரிடம் உமர் வெளிப்படுத்தினார் என்பதுதான் உண்மை.

கையெழுத்திடும் நிகழ்ச்சி தொடங்கியது. ஸுஹைலும் அவரைச் சார்ந்தோரும் கையெழுத்திட்டனர். முஸ்லிம்களின் சார்பில் ஆட்சித் தலைவர் எனும் அந்தஸ்தில் அண்ணலார் மோதிர முத்திரை பதித்தார்கள். அபூபக்கர் (ரளி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி), மஹ்மூத் பின் மஸ்லமா (ரளி), அப்துல்லாஹிப்னு ஸுஹைல் (ரளி), அலீ (ரளி) ஆகியோர் கையெழுத்திட்டனர். உமர் (ரளி) அவர்களும் கையெழுத்திட்டார்கள்.

குறைஷித் தலைவர் ஸுஹைலும், அவரைச் சார்ந்தோரும் அண்ணலிடம் விடை பெற்றுப் புறப்பட்டுச் சென்றனர். செல்லும்போது அபலையாக நிர்க்கதியாக நிறுத்தப் பட்டிருந்த அபூஜந்தலை (ரளி) மறக்கவில்லை.

## உறைந்து போயினர் உத்தமர்கள்

தனது மகன் என்ற பாச உணர்வு கிஞ்சிற்றும் அவருக்கு இருக்கவில்லை. இதயமில்லாத அந்தப் பெரிய மனிதர் அபூஜந்தலை இறுக்கமாகப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலியை வெடுக்கெனப் பற்றி இரக்கமின்றி பரபரவென இழுத்துச் சென்றது பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அபலை யான அபூஜந்தலோ புலியிடம் மாட்டிய புள்ளி மானைப் போல மிரள மிரள விழித்து கண்ணீர் சிந்தி ஏக்கத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்தது எல்லாரின் இதயத்தையும் பிழியச் செய்தது.

கசிந்த தண்ணீரை சிரமப் பட்டுத்துடைத்துக்கொண்டனர். குமுறிய நெஞ்சத்தை கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டனர். கருணை நபியின் கண் மீன்கள் கண்ணீர்த் தடாகத்தில் தவித்தன. என் செய்வது சில நேரங்கள் இப்படித்தான் ஆகி விடுகின்றன. அமைந்து விடு கின்றன. சில தருணங்கள் நம்மை ஊமையாக்கி விடுகின் றன. குருடாகவும், செவிடா கவும், செயலாற்ற முடியாத மௌனப் பதுமையாகவும் நிலைகுத்தவைத்து விடுகின்றன. இடம், பொருள், ஏவல் எனும் சூழல் இப்படி நம்மைத் தள்ளி விடுகின்றன. நம்மிடம் நீதி, நேர்மை, உண்மை இருந்தாலும் சில வேளை இவ்வாறு உறைந்து போகின்றோம். இயலாது தவிக்கின்றோம்.

ஒரு வகையில் இதுவும் நல்லதுதான். இதனால்ஏற்படும் பாதிப்பு - விளைவுகளை தடுப் பதற்கும், கிடைக்கும் பயன், வெற்றிகளைப் பெற்றிடவும், நிம்மதி - அமைதியை அடைந் திடவும் சமாதானம் - நல்லிணக்கம் நிலவும் இவ் வாறான இணக்கப் போக்கு அடிப்படையானதும், நல்லதும் ஆகும். இறைத்தூதரைப் பொறுத்தவரை அவர்கள் முழுக்க முழுக்க தம் சுய விருப்பத்தின் அடிப்படையில் இவ்வாறு நடந்து கொள்ள வில்லை. இறைவனின் கட்டளைப்படியே அமைதி காத்து, காரியமாற்றி உடன்பாடு நிறைவேற காரணமாக இருந் தார்கள்.

அபூஜந்தல் இழுத்துச் செல்லப்பட்ட திசைநோக்கியே அனைவரின் விழிப்பார்வை களும் நிலைகுத்தி நின்றன. இவர்களின் கண் பார்வையை விட்டு வெகுதூரம் சென்று மறைந்த பின்னரும் விரக்தி யோடு வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். வல்லூறு களால் கொண்டு செல்லப் பட்ட வெண்புறாவைக் காப்பாற்ற வலிமை இருந்தும்

கைகள் கட்டப்பட்டு விட்டனவே! எனும் ஏமாற்றத்தில் கூனிக்குறுகிக் கசிந்து கொண்டிருந்தனர். அவர்கள் நன்றாக இழுத்து சுவாசித்து முழுவதுமாக விட்ட மூச்சுக் காற்று, நெருப்பு ஜுவாலையாய் அனலடித்து, நெருப்புப் பெருமூச்சாய் வெளிவந்து கொண்டிருந்தது. கடும்புயல் பெரும் உயிருடைமைச் சேதங்களை ஏற்படுத்தி விடுகின்றன. அந்தப் புயலுக்குப்பின் ஏற்படும் ஒருவித அமைதி அங்கு நிலவியது. உண்மையில் அது அமைதி அல்ல. பேரிழப்பிற்குப் பின் ஏற்படும் ஒருவித தவிப்பு. சொல்ல முடியாத மௌனச் சோகம். அந்த மயான அமைதி தான் ஹுதைபிய்யாவில் அன்று நிலவியது.

அந்த அமைதி அதிக நேரம் நீடிப்பதை அண்ணலார் விரும்பவில்லை. "அனைவரும் எழுங்கள்! அவரவரின் பிராணிகளை இறைவனுக்காக அறுத்து "குர்பான்" (அர்ப்பணம்) செய்யுங்கள்! என்றார்கள். ஏமாற்றம் - சோகம் - தோல்வி - விரக்தியால் உறைந்திருந்த அந்த உணர்ச்சி மிக்க சத்தியத் தோழர்கள் எவரது செவியிலும் அண்ணலின் சொல் விழுந்ததோ விழவில்லையோ! அனைவரும் அப்படியே அமர்ந்திருந்தார்கள். எல்லாரின் மௌனத்தையும் பார்த்து மாநபி வியந்தார்கள்.

மனதிற்குள் புன்னகைத்துக் கொண்ட அண்ணலார், "சரி எழுங்கள்! குர்பான் செய்யுங்கள்!" என மறுமுறையும் சொன்னார்கள். எவரும் எழவில்லை. மீண்டும் "எழுங்கள்!" என்றார்கள். ஒருவரும் அசைவதாகத் தெரியவில்லை. பாசமிக்க தந்தையிடம் நேசமிக்க பிள்ளைகள் உரிமையுடன் செல்லமாக முரண்டு பிடிப்பது போல இருந்தது. குர்பானிப் பிராணிகளை இறைவனுக்காக அறுத்து ஏழை எளியோருக்குப் பங்கீடு செய்வது புனித இறை ஆலய வளாக எல்லைக்குள் (ஹரமுக்குள்) இருக்க வேண்டும் என்பது பன்னெடுங்காலமாகத் தொன்று தொட்டு இருந்து வரும் மரபாகும். எனினும் இறைத்தூதர் ஒப்பந்தத்தைப் பின்பற்றும் வகையில் அவ்வாறு கூறினார்கள்.

(தொடரும்)

## வலதுபுறம்

"நபி (ஸல்) அவர்கள் செருப்பு அணிவதிலும், தலை முடி சீவுவதிலும், சுத்தம் செய்வதிலும், தங்களின் எல்லா விஷயங்களிலும் வலப்புறத்தைக் கொண்டு ஆரம்பிப்பதை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள்" என ஹள்ரத் ஆயிஷா (ரளி) அறிவித்தார்கள். (நூல் : புகாரி – 168)

# துஆ மஜ்லிஸ்

## பரிபூரண சுகத்துடன் வாழ...

என் குடும்பத்தினர் அனைவரும் ஒவ்வொரு விதமான நோயால் பாதிக்கப்பட்டுள்ளோம். அனைவருக்கும் நோய்கள் நீங்கி பரிபூரண சுகம் பெற்று நலமுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வல்ல ரஹ்மானிடம் துஆ செய்யுமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். - **கா. நூர்ஜஹான்** – சென்னை.

ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; காஜா மைதீன், ஜாகீர் உசேன் - மங்கலம்; T. பீமாசான் - சென்னை; ஜே.பகுருதீன், எம்.சபீனா பர்வீன் - சென்னை; முஹம்மது சிராஜுதீன் - சென்னை; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; சந்தா எண் F595 - திருச்சி; சாரா பானு - திருச்சி; முஹம்மது முபீன் - திருச்சி; முஹம்மது முக்தார் - திருச்சி; அ.ஜெய்புன்னிஷா - திருச்சி; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தெளஸ், ஹஸீனா - மதுரை; அ.பாருக் அலீ - ஆத்தூர்; ரகீப் சுல்தானா - தஞ்சாவூர்; எஸ்.ஹசன் பானு, எஸ்.நூருன்னிஷா - திருச்சி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; என்.மும்தாஜ் பேகம் - தஞ்சாவூர்; சாதிர் பாட்சா - மங்கலம்; ஜே.முஹம்மது யூசுப் - பணங்காட்டூர்; பீ.முஹைய்யதீன் பாத்திமா - அரவேணு; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; அ.ராபியத் பசிரியா - மூணார்; ஹாஜி எம்.பீர்முஹம்மது, ஹாஜ்ஜா பீ. ரொகையாள் - உத்தமபாளையம்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; எம்.ஷாணவாஸ், எம்.அப்தூர் ரஹ்மான் - திருச்சி; சந்தா எண் L 105 - திருச்சி; எம்.எஸ்.முஹம்மது மீரான் - ஈசநத்தம்; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; ஷாகுல் ஹமீது, எம்.எஸ்.ஜரீனா பானு, ஜமீலா - ஈசநத்தம்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ,

யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா - மதுரை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - மதுரை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹஸ்ரத் தாமத் பரக்காத்துஹும் அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

அல்லாஹ்வின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும் இந்த வருடம் தேர்வு எழுதிய 10th, +1, +2 மாணவ கண்மணிகள் அனைவரும் அதிக மதிப்பெண்கள் வாங்கி தேர்ச்சி பெற்று விட்டனர். துஆ செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கலந்த மகிழ்ச்சியை தெரிவிப்பதுடன் மாணவச் செல்வங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களும், பாராட்டுகளும் உரித்தாகுக! **அ.உஷ்னாரா பேகம் — மதுரை.**

+1 தேர்வில் நான் தேர்ச்சி பெற துஆ செய்ய வேண்டியிருந்தேன். இறையருளால் நல்ல மதிப்பெண்கள் வாங்கி தேர்ச்சி பெற்றுள்ளேன். துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி! ஜஸாகுமுல்லாஹ் கைரா! என் கல்வி பயனுள்ள கல்வியாக திகழ துஆ செய்ய வேண்டுகிறேன்.

**ஜே.அப்துஸ்ஸலாம் — மதுரை — 1.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

கேரளா அத்திக்கோடு கூட்டுப்பாதை "கே.வி.கே.ஸ்டோர்" உரிமையாளரும், மர்ஹூம் வெள்ளப்பா இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகனாருமான ஜனாப் கமருத்தீன் அவர்கள் 04.02.24 அன்றும்,

கேரளா நாட்டுக்கல் நேரு நகர் ஜனாப் அப்துல் காதர் அவர்களின் மகனாரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால விற்பனை பிரதிநிதியுமான ஜனாப் ஷரீஃப் அவர்கள் 12.03.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் M.A. ஹமீது மாஸ்டர் (ரஹ்) அவர்களின் மகளாரும், குனியமுத்தூர் மர்ஹூம் அப்துல் மஜீது (ரஹ்) அவர்களின் மனைவியுமான அல்ஹாஜ்ஜா நிலோபர் நிஸா அவர்கள் 14.03.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு கோவில்பாளையம் மர்ஹூம் அபூபக்கர் சேட் (ரஹ்) அவர்களின் மனைவி ஜனாபா ஆசியாம்மாள் அவர்கள் 26.03.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் கரீம் இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகனாரும், ஜனாப் அப்துல் அலீம் அவர்களின் தம்பியுமான ஜனாப் பாரூக் அவர்கள் 07.04.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் அப்துல் வஹாப் (ரஹ்) அவர்களின் மகனார் ஜனாப் முஹம்மது பாரூக் (ரேசன் கடை) 12.04.24 அன்றும்,

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை மர்ஹூம் H.ஸதுர்தீன் (ரஹ்) அவர்களின் மகனாரும், ஜனாப் S.T. சம்சுதீன் (I.C.F. Railway) மற்றும் சகோதர, சகோதரிகளின் தகப்பனாருமான ஜனாப் H.S. தமீஜுதீன் (R.P.F. இன்ஸ்பெக்டர் Retd.) அவர்கள் 22.04.24 அன்றும்,

சென்னை பனையூரைச் சேர்ந்தவரும், பல்வேறு அரபிக் கல்லூரிகளில் பேராசிரியராக - முதல்வராக பணியாற்றியவருமான மவ்லானா மவ்லவீ டாக்டர் T.M. அப்துல் காதிர் அன்வரி ஃபாஜில் ஜமாலி ஹள்ரத் அவர்கள் 01.05.24 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி காமக்காபட்டி ஜனாப் அஸ்கர் அலீ மற்றும் சகோதரர்களின் மச்சான் வாலி ஜனாப் முஹம்மது லியாகத் அலீ (நாமக்கல் புதன் சந்தை) அவர்கள் 01.05.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் அப்துல் லத்தீப் இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகனாரும், மர்ஹூம் அமானுல்லாஹ் (ரஹ்) அவர்களின் தம்பியுமான ஜனாப் ஷேக் தாவூது அவர்கள் 01.05.24 அன்றும்,

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் "மலர் ரெக்ஸின்" உரிமையாளர் ஜனாப் முஹம்மது இல்யாஸ் அவர்களின் குப்பீமா ஜனாபா ரவூஃபுன் பீவி அவர்கள் 02.05.24 அன்றும்,

பள்ளபட்டி மர்ஹூம் மோதி முஹம்மது இஸ்மாயீல் (ரஹ்) அவர்களின் மனைவியும், முன்னாள் கரஸ்பாண்டண்ட் மர்ஹூம் மஞ்சுவள்ளி அல்ஹாஜ் M.M.ஷாகுல்ஹமீது (ரஹ்) மற்றும் சகோதரர்களின் அக்காவும், பள்ளபட்டி நகர மன்ற தலைவர் ஜனாப் முனவர் ஜான் மற்றும் சகோதரர்களின் அருமை தாயாருமான அல்ஹாஜ்ஜா உம்மு சல்மா அவர்கள் 03.05.24 அன்றும்,

நீலகிரி மாவட்டம் குன்னூர் மர்ஹூம் கே.எம்.கமால்தீன் சாயபு (ரஹ்) அவர்களின் மகனார் மேட்டுப்பாளையம் "இரும்புக் கடை" ஜனாப் கே.சௌக்கத் அலீ அவர்கள் 04.05.24 அன்றும்,

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் ஜனாப் முஹம்மது அலீ ஜின்னாஹ் அவர்களின் மகனார் மவ்லவீ முஃப்தீ M.முஹம்மது ஹுஸைன் மழாஹிரி ஹள்ரத் அவர்கள் 08.05.24 அன்றும்,

சென்னை ஜமாலியா அரபிக் கல்லூரியின் மூத்த பேராசிரியர் மவ்லானா மவ்லவீ M.அப்துர் ரஹ்மான் ஃபாஜில் பாகவி ஹள்ரத் அவர்களின் உடன்பிறந்த சகோதரரும், சென்னை மவ்லவீ M.A.முஹம்மது அனஸ் ஜமாலி ஹள்ரத் அவர்களின் சிறிய தந்தையாரும், சென்னை எம்.கே.பி. நகர் மற்றும் அயனாவரம் மஸ்ஜித்களில் இமாமாக பணிபுரிந்தவருமான பழனி மவ்லானா மவ்லவீ M.கலீலுர் ரஹ்மான் தாவூதி ஹள்ரத் அவர்கள் 12.05.24 அன்றும்,

சென்னை காஷிஃபுல் ஹுதா அரபுக் கல்லூரியின் பேராசிரியர் மவ்லானா மவ்லவீ அப்துல் கரீம் ஹள்ரத் அவர்களின் சகோதரர் அல்ஹாஜ் R.முஹம்மது இஸ்மாயீல் அவர்கள் 12.05.24 அன்றும்,

திருநெல்வேலி டவுன் கட்டாக் ஜும்ஆ பள்ளிவாசலின் இமாமும், நெல்லை மாநகர ஜமாஅத்துல் உலமா சபையின் தலைவருமான மவ்லானா மவ்லவீ அல்ஹாபிழ் எம். ஜமால் முஹைதீன் M.A. M.Phil., ஹள்ரத் அவர்கள் 13.05.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

# வாசகர் வட்டம்

இன்பம் தரும் இனிய காட்சிகளை அட்டையில் அழகுபடுத்தும் வித்தையை எங்குதான் கற்றீரோ! என்று வியக்குமளவுக்கு மாதந்தோறும் அட்டைப்படம் அமைந்து வருவது பாராட்டுக்குரியது!

தலையங்கத்தில் சிவில் சட்டத்தை நாசமாக்கும் பாரதீய ஜனதாவை "வாங்கு வாங்கு" என வாங்கிய விதம் பாராட்டும்வகையில் இருந்தது. பா.ஹாஜி முஹம்மது எழுதிய "வழி தவறக் கூடாது" தாய்ப்பாசத்தை அற்புதமாக உணர்த்திக் காட்டியது. எம்.ஜே. அன்வரியின் "என் நெஞ்சைத் தொட்டவை" மறக்க முடியாத மாணிக்கமாய் ஒளி வீசியது. கம்பம் மவ்லானா பி.எம்.பீர் முஹம்மது பாகவியின் கட்டுரை அழகிய தமிழ் நடையின் கம்பீரத்தை மிகைப்படுத்திக் காட்டியது.




மொத்தத்தில் குர்ஆனின் குரல் ஒளி நிலவாய், முத்து வடிவமாய், மோகனப் புன்னகையாய், முழு மதியாய் ஒளி வீசி வருகிறது! மொத்த தமிழ் முஸ்லிம்களின் இதயக்குரல் "குர்ஆனின் குரல்" என்பேன்.

அ. மீரான் முஹம்மது,
வேடசந்தூர்.

தலையங்கத்தில் "பொது சிவில் சட்டம்" பற்றி அதன் பாதகங்களை விரிவாக எழுதியிருந்தது அறிந்து அதிர்ச்சி! காரணம் தற்போதுள்ள சட்டங்களால் யாருக்கு என்ன பாதிப்பு, கஷ்டம் என்று தெரியவில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தல் வெறும் முழக்கமாக மட்டுமே இருக்கும். அது நிறைவேறுவது சந்தேகம். அதனை திசை திருப்பவே பொது சிவில் சட்டம் கையில் எடுக்கப்பட்டுள்ளது.

ஜம்பை ஜப்பார் ஹள்ரத் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.

பா.ஹாஜி முஹம்மது,
சேந்தமங்கலம்.

மவ்லானா முஹம்மது ஹைதர் அலீ ஹள்ரத் எழுதிய "பசியாற்று" என்ற கட்டுரையில் ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்கள் காலத்தில் நாமறியாத பல நிகழ்வுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. கட்டுரையாளருக்கு பாராட்டுக்கள்!

**முஹம்மது ஜைனுல் ஹக்,**
**மதுரை.**

ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்!

# தாஜ் டிரேடர்ஸ்

## சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்






No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

தியாகத் திருநாள் வாழ்த்துக்கள்!

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

# Ulama®

## LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India